


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 268 பிலவ வருடம், ஆனி மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை (02.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 20, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## தாதியர் போராட்டம்

### இன்றும் தொடர்கிறது

•யோ.தர்மராஜ்

கொவிட் நோயாளர்களுக்காக சிகிச்சை வழங்கும் தாதியர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள், தாதியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்களின் 48 மணித்தியால கவனயீர்ப்புப் போராட்டம் காரணமாக நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். 02»

# பொது முடக்கம்: அரசு ஆராய்வு

### டெல்ட்டா நாடெங்கும் பரவியிருக்கலாம் என அச்சம்

•யோ.தர்மராஜ்

கொவிட் தீவிரத்திற்கு மத்தியில் இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட டெல்ட்டா திரிபு இலங்கையில் பல பிரதேசங்களில் பரவியிருக்கலாமென அஞ்சப்படுவதால் உடனடி பொது முடக்கம் ஒன்றுக்கு செல்வது குறித்து அரச உயர்மட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

அரச உயர்மட்டத்தில் இன்று விசேட கூட்டம் இடம்பெறவுள்ளதாகவும் இதன் போது, இந்த விடயம் குறித்து ஆழமாக ஆரயப்பட்டதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் அறியமுடிந்தது.

நாட்டின் பல பகுதிகளிலும் டெல்ட்டா திரிபு என்ற சந்தேகத்தில் பல கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில்,... 02»

## கொட்டியாகலை தொழிலாளர்கள் இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்

### நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்கு கடும் எதிர்ப்பு




•எம்.கிருஸ்ணா

பொகவந்தலாவை கொட்டியாகலை பிரதேசம் சுயதனிமை பிரதேசமாக அறிவித்துள்ளபோதிலும் கொட்டியாகலை கீழ்ப்பிரிவு தொழிலாளர்களின் உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாவது நாளாகவும்... 02»



## அடைமழையில் கூடாரங்களில் வாழ்க்கை; லெவண்ட் தோட்ட மக்களுக்கு நீதி எங்கே?



•அருண் யுகேஷ்

கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட லெவண்ட் தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக தற்காலிக கூடாரங்களில் தங்கவைக்கப்பட்ட மக்கள் தோட்ட அதிகாரிக்கு எதிராக நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக ஜூன் மாதம் 16ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த நிலையில், தீர்வுகள் பெற்றுக்கொடுக்காதமையை சுட்டிக்காட்டி 25 குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மண்சரிவு அபாயம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் தோட்ட நிர்வாகம் மக்களுக்கு தற்காலிக கூடாரங்களை வழங்கி பாதுகாப்பான இடங்களில் கூடாரங்களை அமைத்துக்கொண்டிருக்குமாறு 02»

## இணையத்தில் சிறுமி விற்பனை: 21 பேர் கைது; மூவர் விளக்கமறியலில்

•யோ.தர்மராஜ்

இணையத்தின் ஊடாக விற்பனைசெய்யப்பட்ட 15 வயது சிறுமியை துஷ்பிரயோகப்படுத்திய மற்றும் அதற்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில் மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய சிறுமியை துஷ்பிரயோகப்படுத்திய மற்றும் அதற்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில் இதுவரை 21 பேர் கைதாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கைதானவர்களில் மிஹிந்தலை பிரதேச சபை உப தலைவர் மற்றும் வர்த்தகர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 02»

## வீடுகளில் மரணிப்போருக்கு பி.சி.ஆர். அவசியமில்லை

### புதிய சுற்றறிக்கையால் ஆபத்து அதிகமென்கிறார் உபுல் ரோஹண

•யோ.தர்மராஜ்

வீடுகளில் இறப்பவர்களின் உடல்களை கொவிட் பரிசோதனை செய்யாது விடுவிப்பதற்கு திடீர் மரண பரிசோதனை அதிகாரி மற்றும் கிராமசேவகருக்கும் அதிகாரம் வழங்கும் வகையில் சுகாதார அமைச்சின் செயலாளரினால் கடந்த 26ஆம் திகதி புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். 02»

## புரவியினால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

புரவிப் புயலினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,... 02»

## செய்தியை மறுக்கிறது இந்தியத் தூதரகம்

மூன்றாம் நாடொன்றுடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக இலங்கையின் வான்பரப்பை பயன்படுத்த இந்தியா விடுத்த கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் நிராகரித்திருப்பதாக வந்த செய்தியை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மறுப்பை தெரிவித்துள்ளது.

இவை முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியென இந்திய உயர்ஸ்தானிகராலயம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மூன்றாவது நாடொன்றுடன் இணைந்து கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுவதற்காக இலங்கை வான்பரப்பை பயன்படுத்துவதற்கான எந்தவொரு கோரிக்கைகளும் அண்மைய காலங்களில் இந்தியாவால் விடுக்கப் பட்டிருக்கவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.







## புத்தளம் நகரசபை தலைவராக ரபீக்

### ஏகமனதாக தெரிவு



புத்தளம் நகர சபையின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.எம்.ரபீக் நேற்று தெரிவுசெய்யப் பட்டார். 02»

## தேர்தல் முறைமை கலந்துரையாடலில் ரிஷாட் கட்சி புறக்கணிக்கப்பட்டது ஏன்?

### மனோ - ஹக்கீம் - அனுரவிடம் உயர்பீட உறுப்பினர் பாயிஸ் கேள்வி



தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் மூன்று கட்சிகள் இணைந்து நடத்திய சந்திப்பு, பாதிக்கப்படப்போகும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும், சிறு கட்சிகளுக்கும் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஜே.எம்.பாயிஸ்,... 02»

# மருதமுனை முடக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

**(நூருள் ஹுதா உமர்)**

மருதமுனை பிரதேசத்தில் கொரோனா தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு, நேற்று இரவு 10 மணிமுதல் ஒரு வார காலத்திற்கு நடமாட்டக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதென நேற்று முன்தினம் இடம்பெற்ற சுகாதாரத்துறையினருடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, நேற்றும் இன்றும் மருதமுனையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் முடிவுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து, தொற்றுடன் யாரும் அடையாளம் காணப்படாமையினால் முடக்கம் சுகாதார நிபந்தனைகளுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.


கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இம்முடிவுகள் பெறப்பட்டன. சுகாதாரத்துறையினரின் ஆலோசனையின்பேரில் மேற்படி கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் கடுமையாக ஆராயப்பட்டு பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் மாலை 6 மணிக்கு மூடப்பட வேண்டும். சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டால் இந்தத் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்படும்.

# கம்பளையில் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து பஸ் விபத்து - நால்வர் படுகாயம்

(கம்பளை நிருபர்)

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலஸ்பாகை கெலிகுறுப் தேயிலை தொழிற்சாலைக்கு ஆட்களை ஏற்றிச்செல்லும் பஸ் ஒன்று 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் பய்ரா கோழி பண்ணைக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது. பஸ்ஸில் சென்ற நான்கு பேர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



மூவர் நாவலப்பிட்டி வைத்தியசாலையிலும் ஒருவர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை குறுந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்,

# கப்பல் தீ - தேசிய முகவர் நிறுவன உதவி முகாமையாளருக்குப் பிணை

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட குறித்த கப்பலின் தேசிய முகவர் நிறுவனத்தின் உதவி முகாமையாளர் சஞ்சீவ லங்காபிரிய சமரநாயக்கவை பிணையில் விடுதலைசெய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியதையடுத்து கைதுசெய்யப்பட்டு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

அதனடிப்படையில் சந்தேகநபரை 2 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா சரீர பிணைகள் இரண்டின் அடிப்படையில் விடுதலைசெய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவருடைய கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் எகிறின



**யோ.தர்மராஜ்**

பேக்கரி உற்பத்தியான மாலுபாண் (கறிபாண்) ஒன்றின் விலை 30 ரூபா தொடக்கம் 150 ரூபாவிற்கும் அதிகமாக நாட்டின் பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்படுவதாக அனைத்து பேக்கரி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தார்.

மாவின் விலை குறையாத பட்சத்தில் பாணின் விலையையும் 10 ரூபாவால் அதிகரிக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்து வினவியபோதே இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள இரு பிரதான கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களில் ஒரு நிறுவனம் கோதுமை மாவின் விலையை 18 ரூபாவால் அதிகரித்துள்ளது. மற்றொரு நிறுவனம் அதனை அதிகரிப்பதற்கும் கோரியுள்ளது. இந்த நிலையில், பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.

அரசாங்கம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதோடு, விலை கட்டுப்பாட்டையும் முன்வைக்காத பட்சத்தில் பாணின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க நேரிடும்.

அதன்படி, பாணின் விலையும் 10 ரூபாவினால் அதிகரிக்கப்படுவதால் பாண் ஒன்றின் விலை 70 ரூபா முதல் 83 ரூபாவரை விற்பனை செய்யக்கூடிய சாத்தியமுள்ளது.

மேலும், சிறிய கடைகளில் மாலுபாண் ஒன்றின் விலை 30 ரூபா தொடக்கம் 50 வரை விற்பனை செய்யப்படுவதுடன், நட்சத்திர ஹோட்டல்களில் 100, 150 – 200 வரை விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோன்று, ஏனைய பேக்கரி உற்பததி பொருட்களின் விலைகளும் தற்போது வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பேக்கரி உற்பத்திகளின் விலைகளுக்கு நிர்ணய விலையை அரசாங்கம் அறிமுகம் செய்யவேண்டும் - என்றார்.

## கொட்டியாகலை...

நேற்று தொடர்ந்தது. ஆயிரம் ரூபா நாட்சம்பளத்திற்கு 18 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்கவேண்டும் என கடந்த மூன்று மாத காலமாக கொட்டியாகலை தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அழுத்தம் கொடுத்துவருவதை எதிர்த்து நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரி கொட்டியாகலை கீழ்ப்பிரிவு தொழிலாளர்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

கொட்டியாகலை தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் ஆரம்பமாகிய அடையாள உண்ணாவிரதப் போராட்டம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றம் பெற்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக தோட்ட மக்கள் பலரும் சுழற்சிமுறையில் உண்ணாவிரதமிருந்தனர்.

இந்நிலையில் போராட்ட இடத்திற்கு வருகைதந்த ஹட்டன் பொலிஸ் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரசிக்க ரத்நாயக்க, பொகவந்தலாவை பொலிஸார் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

உங்களின் போராட்டத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால், பொகவந்தலாவை பொது சுகாதார காரியாலயத்திற்குட்பட்ட கொட்டியாகலை கீழ்ப்பிரிவில் கடந்த 29ஆம் திகதி 37 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றதில் 18 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஆகவே, சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கமைய எதிர்வரும் 14 நாட்களுக்கு கொட்டியாகலை கீழ்ப்பிரிவு சுயதனிமை பிரதேசமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்குள் இருந்து யாரும் வெளியில் செல்லவோ, உள் நுழையவோ தடைசெய்யப் பட்டுள்ளது. ஆகவே, போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

எனினும், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்களது உயிர் இந்த இடத்தில் பிரிந்தாலும் பரவாயில்லை, எங்களுக்கான தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனத் தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், குறித்த பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம் என்பதால் சுகாதார அதிகாரிகளின் கோரிக்கைக்கிணங்க நேற்று மாலையுடன் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

## தாதியர் ...

அகில இலங்கை தாதியர் சங்கம் உள்ளிட்ட 3 சங்கங்கள் இணைந்து குறித்த போராட்டத்தை நேற்றுக் காலை முதல் நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட சில வைத்தியசாலையை சேர்ந்த தாதியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, கொழும்பு, மன்னார், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள முக்கிய வைத்தியசாலைகளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிட்டால தமது 2ஆவது நாள் சுகயீன விடுமுறை போராட்டம் இன்றும் தொடரும் என தாதியர்கள் தெரிவித்துள்ளனர்

இந்நிலையில், நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பொதுசேவை தாதியர் பிரிவு சங்கத்தின் தலைவர் அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர்,

கொவிட் வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சேவையில் ஈடுபடும் தாதியர்களின் சுகாதார பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறும் கோரிக்கையை முன்வைத்து தாதியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நாடு தழுவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தாதியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்கு சுகாதார அமைச்சு பொறுப்புக் கூற வேண்டும். தாதியர்களின கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு வழங்காவிடின் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் நாடுதழுவிய ரீதியில் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள். இப்போராட்டம் அரசாங்கத்திற்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் - என்றார்.

## வீடுகளில்...

நாட்டில் தற்போது வீடுகளில் யாரேனும் உயிரிழந்தால் அப்பகுதிக்குப் பொறுப்பான சுகாதார அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகரினால் இறந்தவர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பாக வழங்கப்படும் அறிக்கைகளுக்கமைய மரணம் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், சுகாதார அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தினால் திடீர் மரண பரிசோதனை அதிகாரி மற்றும் கிராம சேவகருக்கும் சில நிபந்தனைகளுக்கமைய வீடுகளில் இறப்போரின் உடலை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, சுகாதார அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையின்றி விடுவிக்குமாறும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் இறக்கும் அதிகமான உடல்களை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று பரிசோதனைக்கு உட்படுத்தும்போது, கொவிட் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப் படுகின்றது. இந்த சுற்றுநிருபத்திற்கு பின்னர் அதற்கான வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன.

இதன் காரணமாக சமூகத்தில் கொவிட்-19 பரவுவதற்கான ஆபத்து இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, மரணங்களை 24 மணித்தியாலத்திற்குள் வீடுகளில் வைத்திருப்பதால் வீட்டிலுள்ள ஏனையோருக்கும் கொவிட் பரவும் ஆபத்து காணப்படுகின்றது. இதனால், சமூகம் முழுவதும் கொவிட் பரவும் ஆபத்து அதிகரிக்கும் - என்றார்.

வீடுகளில் இறக்கும் நபர்கள் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால், அந்த வீட்டிலுள்ளவர்கள் மற்றும் அப்பகுதியில் வசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும், ஆனால், புதிய அறிவிப்பால் அதற்கான வாய்ப்புகள் இல்லாதுபோகும் என்பதாலும் கொவிட் பரவும் ஆபத்து அதிகம் என்றும் தெரிவித்துள்ளார்.

## இணையத்தில்...

குறித்த சிறுமியை இணையத்தின் ஊடாக விற்பனைசெய்ய உதவிய குற்றச்சாட்டில் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, நேற்று வெள்ளவத்தை பகுதியில் ஆண் மற்றும் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 17 பேரும் அதற்கு முன்னர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் பிள்ளையின் தாய் மற்றும் சிறுமியை விற்பனைசெய்த நபரின் இரண்டாம் மனைவி, சிறுமியை விற்பனைக்காக ஒவ்வொரு இடங்களுக்கும் கொண்டுசென்ற முச்சக்கரவண்டி சாரதிகள் இருவர், அத்துடன் சிறுமியை விற்க விளம்பரம் தயாரித்தவரும் மேலும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இணையத்தளம் ஊடாக பாலியல் செயற்பாடுகளுக்காக குறித்த சிறுமி ஏற்கனவே 3 மாதங்களுக்கு விற்பனைசெய்யப்பட்டிருந்த நிலையில், அதாவது 10 ஆயிரம் 15 ஆயிரம் மற்றும் 30 ஆயிரம் ரூபா பணத்துக்காக குறித்த சிறுமி விற்பனைசெய்யப்பட்டுள்ளமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன.

## தேர்தல் முறைமை...

இந்தச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் புறக்கணிக்கப்பட்டது ஏன் என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

தேர்தல் முறைமைகளை மாற்றவேண்டும் என்பது தொடர்பில் அரசாங்கமும் ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவும் விடாப்பிடியாக நின்று காய்களை நகர்த்திவரும் இத்தருணத்தில், அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும், கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்து, இது தொடர்பில் ஆராய்ந்துள்ளதுடன், காத்திரமான முடிவுகளையும் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது.

கடந்த காலங்களில் இவ்வாறான அனைத்து சந்திப்புகளிலும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அழைக்கப்பட்டிருந்ததுடன், அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் பிரதான பாத்திரமும் வகித்திருந்தார். கடந்த அரசின் அரசியலமைப்பு வழிகாட்டல் குழு, அரசியல் யாப்பு சபையிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கிய பங்காற்றியதுடன், இந்தக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாகவும் தனியாகவும் அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தமையையும் நாம் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் நான்கு எம்.பிக்களையும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் சுமார் 150இற்கு மேற்பட்ட பிரதிநிதிகளை பெற்றிருப்பதும், 08 உள்ளூராட்சி சபைகளை ஆளுகை செய்வதும் வெளிப்படையானது. அத்துடன், மேல் மாகாண சபை உட்பட நாட்டின் பல மாகாண சபைகளில் பிரதிநிதிகளையும் வென்றெடுத்திருக்கின்றது. இந்தச் சூழலில் கட்சித் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஓரங்கட்டியது ஏன்?

தலைவர் ரிஷாட் பதியுதீனை தடுப்புக்காவலில் வைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு மேலும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழுவில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இடம்பெறாத நிலையில், ஆகக் குறைந்தது இவ்வாறான கூட்டங்களிலாவது கட்சியை அழைத்திருக்க வேண்டுமல்லவா? தலைவரின் தடுப்புக்காவலையடுத்து கட்சியின் உயர்பீடம் கூடி, அவரது பொறுப்புகளை சில முக்கியஸ்தர்களுக்கு பகிர்ந்தளித்துள்ள நிலையில், பிரதித் தலைவர், செயலாளர், தவிசாளர் ஆகியோருக்கேனும் அழைப்பு விடுத்து இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதிநிதிகளுக்கு அந்தஸ்து வழங்கியிருக்கலாமே. இவ்வாறு மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பாயிஸ் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

## புரவியினால் ...

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் தன்னுடைய செயற்பாடுகள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய புயல் காற்றின் காரணமாக வடமாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான பல கோடி பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிவடைந்துள்ளன.

அவை தொடர்பான முழுமையான மதிப்பீட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அம்பன் புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு பல மில்லியன் ரூபாவை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடாக பெற்றுக்கொடுத்துள்ளோம்.

அதேபோன்று புரவிப் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களும் பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலும், தூற்றுவார் தூற்றட்டும் புழுதி வாரிப் பூசுவார் பூசட்டும், மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சிகளை தீர்த்துவைக்கும் செயற்பாடுகள் தொடரும் என்று தெரிவித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனது அரசியல் செயற்பாடுகளின் அவசியத்தையும் நியாயத்தையும் கடந்த காலங்களில் மக்கள் புரிந்துகொண்டதைபோன்று எதிர்காலத்திலும் புரிந்துகொள்வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## புத்தளம் நகரசபைத்....

புத்தளம் நகர சபையின் தலைவராக செயற்பட்டு வந்த முன்னாள் பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ் கடந்த மே மாதம் 23ஆம் திகதி திடீர் விபத்தொன்றில் உயிரிழந்தமையை அடுத்து, புத்தளம் நகர சபையின் உபதலைவரான சுஷாந்த புஷ்பகுமார ஜூன் மாதம் 30ஆம் திகதிவரை பதில் தலைவராக செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில், புத்தளம் நகர சபையில் ஏற்பட்ட தலைவர் பதவி வெற்றிடத்திற்கு புதிய தலைவர் ஒருவரை நியமிப்பதற்கான தெரிவு நேற்று காலை 10.30 மணியளவில் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஐ.எம்.இலங்கசோன் தலைமையில் இந்த புதிய தலைவரைத் தெரிவுசெய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வாக்கெடுப்புக்கான சகல ஏற்பாடுகளும் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரான நகர சபையின் உப தலைவர் சுஷாந்த புஷ்பகுமார, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான எம்.எஸ்.எம்.ரபீக்கை தலைவராக நியமிப்பதாக அவருடைய பெயரை சபையில் கூறினார்.

இதனையடுத்து சபா மண்டபத்தில் இருந்த உறுப்பினர்கள் அனைவரும் இதற்கு எவ்வித ஆட்சேபனைகளையும் தெரிவிக்காது இதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததையடுத்து, புத்தளம் நகர சபையின் புதிய தலைவராக மு.கா. உறுப்பினர் எம்.எஸ்.எம்.ரபீக் போட்டியின்றி தெரிவானார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய ஐந்து அரசியல் கட்சிகளையும் ஒரு சுயேட்சைக் குழுவையும் உள்ளடக்கிய வகையில் 19 உறுப்பினர்களைக் கொண்ட புத்தளம் நகர சபையின் ஆட்சி மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வசமானது.

இவ்வாறு புத்தளம் நகர சபையின் புதிய தலைவராக ரபீக் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து, மு.கா. ஆதரவாளர்கள் புத்தளம் நகர சபைக்கு முன்னால் ஒன்றுகூடி புதிய தலைவருக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அத்தோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் புத்தளம் நகர சபையின் புதிய தலைவருக்கு நேரில் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் புத்தளம் நகர சபையின் புதிய நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் உள்ளிட்ட உறுப்பினர்கள் முன்னாள் புத்தளம் நகரபிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் அடக்கஸ்தலத்திற்குச் சென்று விசேட துஆப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, காலஞ்சென்ற முன்னாள் புத்தளம் நகரபிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் நகரசபை உறுப்பினர் வெற்றிடத்திற்கு முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினரான ஜௌபர் மரிக்கார் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## பொது முடக்கம்:...

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பரவாதிருக்கும் நோக்கத்தில் இவ்வாறு பொது முடக்கம் ஒன்றுக்கு செல்வது குறித்து ஆராயப்படவுள்ளதாக அறியமுடிந்தது. குறைந்தது பயணக்கட்டுப்பாட்டையாவது அமுல்படுத்தி டெல்ட்டா திரிபை கட்டுப்படுத்து வற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் டெல்ட்டா திரிபினால் ஏற்படும் ஆபத்தை தாங்கள் பொறுப்பேற்க முடியாது என சுகாதார அதிகாரிகள் அரச உயர்மட்டத்திடம் கடுமையாக வலியுறுத்தியுள்ளதாகவும் அறிய முடிந்தது.

இதனையடுத்து, டெல்ட்டா திரிபு இலங்கையில் பல பிரதேசங்களில் பரவியிருக்கலாம் என அஞ்சப்படுவதால் எதிர்வரும் 13 அல்லது 14ஆம் திகதிகளில் பொது முடக்கம் ஒன்றிற்கு செல்வது குறித்து அரச உயர்மட்டம் இன்று ஆராயவுள்ளதாக அறியமுடிந்தது.

இதேவேளை, டெல்ட்டா திரிபு முழு நாட்டிலும் பரவுமாக இருந்தால் அடுத்த 10 வாரங்களில் பாரிய ஆபத்து காணப்படுவதாகவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அத்தோடு, டெல்ட்டா திரிபு குறித்து எவ்வித அக்கறையும் இன்றியே கொவிட் கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## அடைமழையில்...

பொதுமக்கள் தோட்ட நிர்வாகம் கூறியவாறு லயன் குடியிருப்புகளுக்கு முன்பாக தற்காலிக கூடாரங்களை அமைத்துள்ளார்கள்.

எனினும், தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள மக்களுக்கு எதிராக தோட்ட அதிகாரி யட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். அவர்கள் தமது லயன் குடியிருப்புகளுக்கு மீண்டும் செல்வதற்கு மறுப்பதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமக்கு நீதி வழங்கப்பட வேண்டும் எனக் கோரி கூடாரங்களுக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






அகில இலங்கை தாதியர் சங்கம் உள்ளிட்ட 3 சங்கங்கள் இணைந்து முன்னெடுத்த 48 மணித்தியால போராட்டத்தால் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததை படத்தில் காணலாம்.....

(படபிடிப்பு பிரதீப் தம்பரகே, எசான் தஸநாயக்க)




## ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது – கல்கிசை

கல்கிசை பொலிஸ் பிரிவில் இரத்மலானை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் கல்கிசை குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 80 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 38 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் டிமெல் வத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 33 கிராம் 84 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 14 ஐச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் இருவர் கைது – அளுத்கம

அளுத்கம பொலிஸ் பிரிவில் களுவாமோதர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12.10 மணியளவில் அளுத்கம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 10 கிராம் 750 மில்லிகிராம ஐஸ் மற்றும் 4 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அளுத்கம மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – பொரளை

பொரளை பொலிஸ் பிரிவில் லெஸ்லி ரணகல மாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4.40 மணியளவில் பொரளை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 4 கிராம் 160 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் மாலை 5.50 மணியளவில் கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 3 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-14ஐச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது – முல்லேரியா

முல்லேரியா பொலிஸ் பிரிவில் ஒபேசேகரபுர பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12.05 மணியளவில் முல்லேரியா பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 3 கிராம் 380 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கோடாவுடன் ஒருவர் கைது – ஜா-எல

ஜா-எல பொலிஸ் பிரிவில் பாரீஸ் பெரேரா மாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 6.15 மணியளவில் பேலியகொடை பிரிவு குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோதமாக மதுபான உற்பத்திற்கு பயன்படுத்தும் ஆயிரத்து 123 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## கோடாவுடன் ஒருவர் கைது – பமுனுகம

பமுனுகம பொலிஸ் பிரிவில் முதுராஜவெல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 12.30 மணியளவில் பமுனுகம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 3 ஆயிரத்து 900 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெலிசறை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது – தெஹிஅத்தகண்டிய

தெஹிஅத்தகண்டிய பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட தெஹிஅத்தகண்டிய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிஅத்தகண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது – மீகமுவ

மீகமுவ பொலிஸ் பிரிவில் குரண பகுதியில் தொல்பொருள் அகழ்வில் ஈடுபடுவதாக மீகமுவ பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, நேற்றுமுன்தினம் 4.10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பயணித்த ஜீப், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை, பெலிஅத்த, ஜா-எல மற்றும் கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 27, 29 மற்றும் 40 வயதுடைய நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர் கைது – மஹவிலச்சிய

மஹவிலச்சிய பொலிஸ் பிரிவில் சூரியதமன பிரதேசத்தில் தொல்பொருள் அகழ்வில் ஈடுபடுவதாக மஹவிலச்சிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய, நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, அகழ்வுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள், பூசை பொருட்களுடன் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மஹவிலச்சிய, நொச்சியாகம, அநுராதபுரம், பொல்கஹவெல மற்றும் தலாவ பகுதிகளைச் சேர்ந்த 26, 31, 32, 35, 52, 58 மற்றும் 63 வயதுடைய ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வாகன விபத்து – சப்புகஸ்கந்த

சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவில் மாகொல, உடுபில வீதியில் நேற்றுமுன்தினம் காலை 9.15 மணியளவில் உடுபில பிரதேசத்தைச் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரியை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆகியோர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

சமாதான மாவத்தை மற்றும் மாகொல பகுதியைச் சேர்ந்த 80 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## வாகன விபத்து – புத்தளம்

புத்தளம் பொலிஸ் பிரிவில் மொரடுவகம வீதியில் 100 ஏக்கர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வாகன விபத்து – பொலன்னறுவை

பொலன்னறுவை பொலிஸ் பிரிவில் வலேகடை ஓனேகம வீதியில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் ஓனேகம பகுதியை நோக்கி பயணித்த லொறி ஒன்றும் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஓனேகம பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொகுப்பு : யோ. தர்மராஜ்

# இன்றைய ராசி பலன்

நாள் : 02.07.2021 வெள்ளிக்கிழமை

**ஜோதிடர் நற்பவி**

**மேடம்** – நிதிப் பற்றாக்குறை நீங்கும். ஆடம்பரமாக இருப்பதை தவிர்க்கவும். வேண்டாதவர்கள் , எதிரிகள் உங்களுக்கு எதிராக செயலில் இறங்கி புதிய பிரச்சினைளை உருவாக்கலாம். உங்கள் குடும்ப உறுப்பினர்கள் கவலைப்படுவார்கள்.

**ரிஷபம்** – பெண்கள் இன்று அன்பளிப்பு பெறுவீர்கள். மொத்த வர்த்தகர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும். புதிய நுட்பங்களை பயன்படுத்துவதில் திறம் படைப்பீர்கள். குழந்தைகளின் கல்வியிலும் நன்மை.

**மிதுனம்** – கடனை திரும்ப செலுத்துவதற்கு நல்ல நாள். அதிக வேலையாக இருந்தாலும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். வேற்று மனிதர்களை அதிகம் நம்ப வேண்டாம்.

**கடகம்** – நிதி மற்றும் சமூகம் தொடர்பான நன்மை தரும் நல்ல செய்தியை பெறலாம். வணிக உறவுகளில் நெருங்கிய பிணைப்பு உண்டாகும். உங்கள் தொழில்திறன் மேம்படும். காதலர்களுக்கு இன்று இனிமை தரும் நாள். உங்கள் வாழ்க்கைத்துணை உங்களுக்கு இன்று உறுதுணையாக இருப்பார்.

**சிம்மம்** – நீங்கள் இன்று கோபமாக நடந்துகொள்வதை தவிர்க்கவும். வணிக கூட்டாளர்களுடனான உறவுகளில் பிரச்சினைகள் உண்டாகலாம். மூட்டுவலி அதிகமடையலாம். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி** – போட்டித் தேர்வுகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறுவார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிசெய்யுங்கள்.

**துலாம்** – இன்று நிதானமாக மனநிலையில் இருப்பது நல்லது. சொத்து சம்பந்தப்பட்ட விடயங்களால் - ஒப்பந்தங்களால் நீங்கள் பயனடைவீர்கள். வணிகர்கள் வணிக சலுகைகளை பெறலாம். குடும்பத்தினர் நிம்மதியான சூழ்நிலையை பெறுவார்கள்.

**விருச்சிகம்** – உங்கள் அன்பானவர்களுடன் இன்று நேரத்தை செலவிடுவீர்கள். காதல் திருமணங்கள் நடைபெறலாம். அரசு சம்பந்தப்பட்ட பணிகள் சீராக நடைபெறும். புதிய நட்புகள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான புதிய பொருட்கள் கிடைக்கும். பணவரவு உண்டாகும்.

**தனுசு** – திறமையால் மற்றும் தெளிவான அறிவால் நன்மைகளை பெறுவீர்கள். திருமணமான உறவுகளில் சிறு பதற்றம் நேரலாம். அதிக பணிச்சுமை எரிச்சலை தரும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**மகரம்** – நற்பெயர் உண்டாகும். வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தொழிலதிபர்கள் அதிக இலாபம் பெறுவார்கள்.

**கும்பம்** – புதிய தயாரிப்புகள் மற்றும் சுயமுயற்சி தொழில் நன்மை தரும். உணவு விடயங்களில் கவனம் தேவை. பெற்றோரிடம் சண்டையிடவேண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் கிடைக்கும்.

**மீனம்** – உங்கள் மேலாண்மை திறமைக்கு பாராட்டு கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் அன்பு, மன உறுதியை உண்டாக்கும். நண்பர்கள் மற்றும் உங்கள் நலன்விரும்பிகளிடமிருந்து உதவிகள் கிடைக்கும். நிதித்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகும்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, ஜூலை 02 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# மகத்தானவர்கள் மருத்துவர்கள்

அரச சேவையில் பணியாற்றும் அனைத்து தரத்திலும் உள்ள மருத்துவ அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயதெல்லை 63 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அரசால் வெளியிடப்பட்டுள்ளது. வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை இதற்கு முன்னர் 61 ஆக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச மருத்துவர்கள் தினமான நேற்று இந்த அறிவிப்பை அரசு செய்துள்ளமை வரவேற்புக்குரியது.

அரச மருத்துவர்கள் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று சொல்வார்கள். ஆனால், ஒரு தொழிலைச் செய்பவர்களே தெய்வமாக மதிக்கத் தகுந்தவர்கள் என்றால் அவர்கள் மருத்துவர்கள்தான். அவர்களின் பணியினை யாரும் மருத்துவத் தொழில் என்று குறிப்பிடுவதில்லை. மருத்துவ சேவை என்றே குறிப்பிடுவார்கள்.

இந்த மகத்துவம் மிக்க மருத்துவ சேவையினை தனது வாழ்நாள் முழுதும் அர்ப்பணிப்புணர்வுடன் மேற்கொண்டவர்கள் பலர். மனித உயிர் இன்னல்களுக்கு உள்ளாகும்போது அந்த உயிரைக் காப்பாற்றுவதற்கு தங்களது உயிரைப் பணயம் வைத்து பணி செய்பவர்கள் மருத்துவர்கள்தான். அதிலும் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மனித உயிர்களை பாதிப்பிற்குள்ளாக்கி கணக்கிலடங்கா மனித உயிர்களைக் கொண்டு சென்றுள்ளது கொவிட்-19 தீநுண்மி.

இந்த புனிதமான சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட மருத்துவர்களில் கடந்த ஆண்டு முதல் அலையில் உலகெங்கும் நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். இந்த ஆண்டு இரண்டாவது அலையில் சென்றவாரம் வரை உலகளவில் உயிரிழந்த மருத்துவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இன்றும் நமது நாட்டில் பல கிராமங்களில் பல கிலோமீற்றருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது கூட அரிதாக உள்ள நிலை உள்ளது. விபத்து மற்றும் அவசர மருத்துவ உதவிக்கு பல கிலோ மீற்றர்கள் செல்ல வேண்டிய நிலையும் உள்ளது.

கொரோனாவுக்கு முன்னர் பல வெளிநாட்டினர் மருத்துவச் சுற்றுலாவாக நமது நாட்டிற்கு வந்தனர். பலர் ஆயுர்வேத மருத்துவர்களை நாடினர். இலங்கையை பொறுத்தவரை தரமான சிகிச்சை, குறைவான செலவு என்பது மட்டுமல்ல, நமது மருத்துவர்களின் கனிவான அணுகுமுறைகளும் முக்கியமான காரணங்கள். வெளிநாடுகளிலும் நமது நாட்டினைச் சார்ந்த மருத்துவர்களுக்கு கிடைக்கும் மதிப்பும், மரியாதையும் மிக அதிகம். காரணம் அவர்களின் திறமையும், காலநேரம் பார்க்காமல் வழங்கும் சிகிச்சையுமே.

மருத்துவர்களை கடவுளாகப் பார்க்கும் அதே நேரத்தில் முரண்பாடுகளும் இல்லாமலில்லை. காரணம் சில இடங்களில் மருத்துவம் முற்றிலும் வியாபாரமாகியிருப்பதே. அதுபோன்ற சில இடங்களில் மருத்துவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களும், தாக்குதல்களும், விரும்பத்தகாத நிகழ்வுகளும் நடக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

பொதுவாக மருத்துவர் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும். ஆனால், இன்று அதுபோன்ற சூழல் உள்ளதா என்று நினைத்துப்பார்க்க வேண்டும். மக்களுக்கு எந்த அளவில் சேவை செய்கிறோம் என்பதை ஒவ்வொரு மருத்துவரும் நினைத்துப்பார்க்கவும் வேண்டும்.

மருத்துவர் தினத்தினைக் கொண்டாடுவதின் நோக்கம், ஒவ்வொரு தனி மனிதரின் வாழ்க்கையிலும் மருத்துவர்களின் பங்களிப்பினை எண்ணிப்பார்க்கவும், மனித சமுதாயத்திற்கும், தனி மனித வாழ்க்கைக்கும் அவர்கள் தங்களின் இலாபங்களை விட்டுக் கொடுத்து செய்து வரும் சேவைக்கு நன்றி பாராட்டவுமே.

மனித சமுதாய நல்வாழ்க்கைக்காக போராடும் இவர்களின் சராசரி ஆயுள், சராசரி மனிதனை விட பத்து ஆண்டுகள் குறைவு என ஆய்வுகள் சொல்கின்றன. ஆசியாவை பொறுத்தவரை சராசரி மனித ஆயுள் 69 முதல் 72 வரை. மருத்துவர்களின் வேலை முறை, மனஅழுத்தம், சீரற்ற உணவு முறை, ஓய்வின்மை, உடற்பயிற்சியின்மை போன்றவையே அவர்களின் ஆயுள் குறைவிற்கு காரணம் எனச் சொல்கிறார்கள்.

மருத்துவர்கள் மக்களின் உயிர் காக்கும் சேவகர்கள். மருத்துவ சேவை புனிதமானது. மருத்துவத்துறையின் அடிப்படையே மனிதநேயம்தான். மருத்துவர்கள் இரவு-பகல் பாராமல், தூக்கம் தொலைத்து, தங்கள் ஆரோக்கியத்தையும் புறக்கணித்து, குடும்பத்தைக்கூட கவனிக்க நேரமில்லாமல், நோயாளிகளுக்குச் செய்கின்ற மகத்தான பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

உலகின் எல்லா இடங்களிலும் கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று கட்டுக்கடங்காமல் பரவி மூன்றாவது கட்டத்தில் நுழைந்துள்ள நிலையில், நோயாளிகளைக் கவனித்து அவர்களுக்கு சிறந்த சிகிச்சையும், தேவைப்படும்போது தீவிர சிகிச்சையும் அளித்துப் பாதுகாப்பது மிக முக்கியமாகிறது. இந்த இக்கட்டான காலத்தில் கொரோனாவுக்கு எதிரான போரை மருத்துவர்கள் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கொள்ளை நோய் கொரோனாவால் பாதிக்கப்பட்டவரை அவரின் மனைவியோ, குடும்ப உறவுகளோ பயந்து தொடத் தயங்குகிறார்கள், மறுக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குத் தயக்கமின்றி மருத்துவம் செய்கிறவர்கள் மருத்துவர்களும், செவிலியரும், மருத்துவப் பணியாளர்களும்தான். கொரோனாவால் பாதிக்கப்பட்டு மரணப்படுக்கையில் போராடும் நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறி தைரியப்படுத்தி வருவதும், பணிவிடை செய்வதும் இவர்கள்தான்.

மருத்துவத்துக்கு வழங்கப்படுகிற பாதுகாப்புக் கவச உடைகளை அணிந்து கொண்டே அவர்கள் கடமை உணர்வுடன் பணிக்குச் செல்கிறார்கள். போதுமான வசதிகளும், சுகாதாரமும் இல்லாத ஓய்வறைகளைக் கொண்டுள்ள மருத்துவமனைச் சூழலில்தான் பெரும்பாலான மருத்துவர்களும், செவிலியரும் பணியாற்றுகிறார்கள்.

பல நாட்கள் குடும்பத்தை சந்திக்காமலேயே பணிபுரிகிறார்கள். எத்தனை பாதுகாப்பு உபகரணங்களை அணிந்தாலும், எத்தனை பாதுகாப்புகளைக் கடைப்பிடித்தாலும் முதலில் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் மருத்துவர்களும், செவிலியரும் மருத்துவப் பணியாளர்களும்தான். இவை நன்றாகத் தெரிந்தும் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் பணிபுரிகிறார்கள்.

அரை நூற்றாண்டுக்கு முன்பு பரிசோதனைகளுக்கு ஆகும் செலவு, மருந்துக் கட்டணம், மருத்துவக் கட்டணம் என்பன குறைவாக இருந்த காரணத்தால் சிகிச்சைக்கான செலவுகள் குறைவாக இருந்தன. இப்போது எல்லாமே பல மடங்கு உயர்ந்துவிட்டன. அதனால், மருத்துவச் செலவும் பெருமளவு உயர்ந்துள்ளது. இதனால் மருத்துவர்கள் மீது மக்களுக்கு இருந்த மரியாதை குறைந்து நாம் பணம் கொடுக்கிறோம், அவர்கள் மருத்துவம் பார்க்கிறார்கள். இதற்கு மேல் தனி மரியாதை தேவையில்லை என்ற மனநிலை மக்களுக்கு வந்திருக்கிறது. இது வேதனைக்குரியது.

முன்பெல்லாம் இவ்வளவு பரிசோதனைகளும், தேவையான உபகரணங்களும் இல்லாத நிலையில், மருத்துவர்கள் பல நேரங்களில் உத்தேசமாகவும், சில நேரங்களில் துல்லியமாகவும் தங்களது அனுபவத்தில் நோய்களைக் கண்டறிந்தார்கள். அந்தக் காலத்தில் மக்களின் வாழ்வோடு கலந்து அவர்கள் குடும்பத்தில் நடக்கும் நல்லது, கெட்டது போன்றவற்றில் முடிவெடுக்கும் முக்கிய நபர்களில் ஒருவராக மருத்துவர்கள் விளங்கினார்கள். இன்றைக்கோ மருத்துவர்களுக்கும், நோயாளிகளுக்கும் உள்ள உறவு வெறும் தொழில் ரீதியானதாக மாறிவிட்டது.

அரசுகள் போதிய நிதியொதுக்கி கவனம் செலுத்தாத காரணத்தால், நமது சுகாதார உட்கட்டமைப்பும், வசதிகளும், குறிப்பாக ஆரம்ப சுகாதார வசதிகளும் கொரியா, தாய்வான், சீனா போன்ற நாடுகளை ஒப்பிடும் போது மிகவும் பின் தங்கிய நிலையில்தான் உள்ளது. போதிய நிதி ஒதுக்கப்படாததால் மருத்துவ உட்கட்டமைப்புகள், மருத்துவமனைகள், மருத்துவ உபகரணங்கள், செயற்கை சுவாசக் கருவிகள், பரிசோதனைக் கருவிகள் போன்றவற்றிலும் நாம் பின்தங்கியுள்ளோம்.

அரசு மருத்துவமனைகளை மக்கள் விரும்பாததற்கு சுற்றுச்சூழலும், சுகாதாரமும் போதுமான அளவுக்கு அங்கு இல்லை, நவீன பரிசோதனை வசதிகள் இல்லை மற்றும் நவீன சிகிச்சைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் இல்லை என்பன போன்ற பல காரணங்கள் உண்டு. எவ்வளவு உயர்ந்த தனியார் மருத்துவமனைகள் இருந்தாலும் ஏழைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் அவை எட்டாக்கனிதான். அரசு மருத்துவமனைகளால் மட்டுமே அவர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்க முடியும்.

தற்போதைய கொரோனா சூழ்நிலையில் மருத்துவர்களின் சேவை மகத்தானதும், கட்டாயமானதுமாகவும் இருக்கிறது. அந்த வகையில் அரச மருத்துவர்களின் ஓய்வு வயதெல்லையை அரசு நீடித்திருப்பதைப் போல் அரச மருத்துவமனைகளின் தரத்தையும் மேம்படுத்த வேண்டும். சர்வதேச மருத்துவர் தினமான நேற்று அவர்களுக்குரிய மதிப்பையும், அங்கீகாரத்தினையும் அரசு ஏற்றிருப்பது உசிதமானது.

# சீனாவின் நூறு பூக்கள்



எல்லாப் பேரியக்கங்களின் பயணமும் சிறிய அடிவைப்பில்தான் தொடங்கியிருக்கிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பயணமும் அப்படித்தான் ஆரம்பமானது. நூறாண்டுகளுக்கு முன்னால், (ஜூலை 1, 1921) ஷாங்காய் நகரில், ஒரு ஓட்டு வீட்டில் கட்சி நிறுவப்பட்டது. மூன்று வாரங்களுக்குப் பிறகு, அங்கே நடந்த கூட்டத்தில் 57 பேராளர்கள் கலந்துகொண்டனர். அதில் ஹூனான் விவசாயி மகன் ஒருவரும் இருந்தார். பீஜிங் பல்கலைக்கழகத்தில் நூலக உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த இளைஞரின் பெயர் மா சேதுங். அவரது படம்தான் இப்போது தியானென்மென் சதுக்கத்தின் முகப்பை அலங்கரித்துவருகிறது.

## முன் கதை

பல சாம்ராஜ்ஜியங்களின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் பிறகு ஜனவரி 1, 1912 அன்று சீனக் குடியரசு பிறந்தது. புதிய குடியரசை உருவாக்கிய அமைப்புகள் டொக்டர் சன் யாட் சென்-ஐத் தலைவராக நியமித்தன. சன் ஒரு அறிவுஜீவி. திறமான அரசியலாளர் அல்லர். சீனா போன்ற பெரிய தேசத்தை அவரால் ஒரு குடையின் கீழ் கொண்டுவர முடியவில்லை. நாடெங்கிலும் யுத்த பிரபுக்கள் போராட்டங்களிலும், கலகங்களிலும் ஈடுபட்ட வண்ணம் இருந்தனர். மறுபுறம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் இருந்தது. இதனால், சினமுற்ற சீன இளைஞர்கள் மே 4, 1919 அன்று தியானென்மென் சதுக்கத்தில் கூடினார்கள். 'மே 4 இயக்கம்' என்று வரலாறு குறித்து வைத்திருக்கும் இந்தப் போராட்டம்தான், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தொடக்கம் குறித்தது. இந்த இயக்கத்தை முன்னின்று நடத்திய லீ தாவ்ஜவ், சென் து சியூ எனும் இருவர்தான் 1921 இல் கம்யூனிஸ்ட் கட்சியையும் நிறுவினார்கள். இதில் முன்னவர் மாவோவின் குரு.

## முதல் உள்நாட்டு யுத்தம் (1927-1937)

சன் 1925 இல் மறைந்தார். அடுத்து, சீனக் குடியரசின் ஆட்சியையும் ஆளுங்கட்சியாக இருந்த கோமிங்டாங் கட்சியையும் கைப்பற்றினார் சியாங் கை ஷேக். சோவியத் ஒன்றியம் கோமிங்டாங்குக்கு ஆதரவாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியையும் கோமிங்டாங்குக்கு இசைவாக இருக்கும்படி வலியுறுத்தியது. ஆனால், சியாங் கம்யூனிஸ்ட்டுகளை எதிரிகளாகப் பாவித்தார். அவர்களை ஒழித்துக்கட்டத் தொடங்கினார். அதற்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி தனக்கான இராணுவத்தைக் கட்டியது. அதற்கு ஒகஸ்ட் 1, 1927 இல் மக்கள் விடுதலை இராணுவம் என்று பெயரிட்டது. அதுதான் இன்று உலகத்தின் மிகப் பெரிய இராணுவமாக வளர்ந்திருக்கிறது.

கோமிங்டாங்குடனான யுத்தத்தின்போது ஒரு கட்டத்தில் மாவோ பின்னேறும் தந்திரத்தைப் பயன்படுத்தினார். கோமிங்டாங் பலவீனமாக இருக்கும் இடங்கள் வழியாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடைப்பயணத்துக்கு 'நெடும் பயணம்' (1934-35) என்று பெயர். பயணத்தின்போது பசியிலும், பனியிலும் பலியானவர்கள் பலர். என்றாலும், அந்தப் பயணத்தில் எண்ணற்ற கிராமங்கள் வழியாக இராணுவம் முன்னேறியது. இதன்மூலம் கட்சி மக்களுக்கு நெருக்கமாகியது. மாவோ மக்கள் தலைவரானார்.

## ஜப்பானிய ஆக்கிரமிப்பு (1937-1945)


வல்லரசாகும் கனவிலிருந்த ஜப்பான், சீனாவின் பல பகுதிகளை ஆக்கிரமித்து வந்தது. உச்சமாக 1937இல் நான்ஜிங் நகரில் ஜப்பான் நிகழ்த்திய வன்கொடுமைகள் வரலாற்றைக் கரிய பக்கங்களால் நிறைத்தன. இந்தக் காலகட்டத்தில் கோமிங்டாங்கும், கம்யூனிஸ்ட்டுகளும் ஒன்றிணைந்து தங்களது பொது எதிரியான ஜப்பானை எதிர்த்தனர். சீனர்கள் இழந்தது அதிகம். எனினும், விடாப்பிடியாகப் போராடினார்கள். இரண்டாம் உலகப்போரின் (1939-45) முடிவு ஜப்பானுக்குச் சாதகமாக இல்லை. அது நேச நாடுகளிடம் சரணடைந்தது, சீனாவிலிருந்தும் வெளியேறியது.

## இரண்டாம் உள்நாட்டு யுத்தம் (1945-1949)

பொது எதிரி வெளியேறியதும் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தது. இந்த முறை கோமிங்டாங்குக்கு அமெரிக்கா உதவியது. எனினம், கம்யூனிஸ்ட் கட்சிக்கு மக்கள் ஆதரவு பெருகியிருந்தது. ஆயுத பலமும் கூடியிருந்தது. ஆகவே, வெற்றி வசமானது. கோமிங்டாங்கின் தலைவர் சியாங், தைவானுக்குத் தப்பியோடினார். அக்டோபர் 1, 1949 அன்று தியானென்மென் சதுக்கத்தின் முகப்பில் மக்கள் சீனக் குடியரசை நிறுவினார் மாவோ.

## மாவோவின் காலம் (1949-1976)

பெரும் கனவுகளோடு தொடங்கியது கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி. 'நூறு பூக்கள் மலரட்டும்' என்பது மாவோவின் புகழ்பெற்ற மேற்கோள்களில் ஒன்று. எல்லாக் கருத்துகளும்



முட்டிமோதித் தெளியட்டும் என்பது பொருள். ஆனால், அவரது ஆட்சியில் விமர்சனங்கள் சகித்துக் கொள்ளப்படவில்லை. கூட்டுப் பண்ணைகளையும், தொழில் உற்பத்தியையும் இலக்காகக் கொண்டு மாவோ தொடங்கிய பெரும் பாய்ச்சல் திட்டமும் (1958-1962), பழைமையைத் தகர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட கலாசாரப் புரட்சியும் (1966-1976) பலன் தரவில்லை. மாறாக, பஞ்சம் வந்தது. மக்கள் மடிந்தனர், அச்சுறுத்தலுக்கு உள்ளாயினர். பின்னாளில் கட்சி இந்த இரண்டு முன்னெடுப்புகளும் பிழையானவை என்று ஒப்புக்கொண்டது. அதேவேளை, மாவோவின் காலத்தில்தான் சீனா ஒரு தேசமாகத் திரண்டது, மக்களின் கல்வியறிவும், ஆரோக்கியமும் வளர்ந்தது.

## தாராளமயத்தின் காலம் (1978-2013)

1976இல் மாவோ காலமானார். அடுத்து, தலைமை ஏற்ற டெங் சியோ பிங்,1978இல் அந்நிய முதலீடுகளுக்கு வாசல் திறந்தார். சீனாவின் அபரிமிதமான மனித வளத்தைப் பயன்படுத்தி நாட்டைத் தொழில்மயமாக்கினார். செல்வம் சேர்ந்தது. அந்த அதிவேக வளர்ச்சியின் காலத்தில் டெங் தனது சகாக்களை சர்வதேச அரங்கில் அடக்கி வாசிக்கச் சொன்னார். 'உன் சக்தியை வெளிக்காட்டிக் கொள்ளாதே' என்றார். தனது பாதைக்கு டெங் வைத்த பெயர் சீனா பாணியிலான சோஷலிஸம். டெங் சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமல்ல, 1989 இல் தியானென்மென் அடக்கு முறைக்காகவும் நினைவு கூரப்படுகிறார். 1919ஐப் போலவே 1989இலும் தியானென்மென்னில் போராடியவர்கள் இளைஞர்கள். அவர்கள் ஜனநாயக உரிமைகளுக்காகவும், ஊழலுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார்கள். இந்த முறை தன் மக்களின் போராட்டத்தை 'மக்கள் விடுதலை இராணுவம்' ஒடுக்கியது. மாணவர்கள் மட்டுமல்ல, சாலையோரம் வேடிக்கை பார்த்தவர்களும் துருப்புகளால் கொல்லப்பட்டார்கள். சீனாவின் வரலாற்றில் அழிக்க முடியாத கறுப்புப் பக்கங்களில் ஒன்றானது தியானென்மென் படுகொலைகள்.

## ஷி ஜின்பிங் காலம் (2013-)

ஷி ஜின்பிங் 2012இல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலரானார். பிறகு, அதே ஆண்டு



முப்படைகளின் தலைவரானார். அடுத்து, 2013இல் நாட்டின் ஜனாதிபதியானார். இந்த வரிசை எதேச்சையானதல்ல. கட்சி (1921), இராணுவம் (1927), ஆட்சி (1949) என்பதுதான் வரலாற்றின் வரிசை. முக்கியத்துவத்தின் வரிசையும் அதுதான். இராணுவமும், ஆட்சியும் கட்சிக்குக் கட்டுப்பட்டவை. இந்த நூற்றாண்டு விழாவில் இதை ஷி மீண்டும் நிறுவுவார்.தனக்கு முந்தைய தலைவர்களிலிருந்து ஷி வேறுபட்டவர். ஷி-க்கு முன்பு ஜனாதிபதியாக இருந்த ஜியாங் ஜெமின் (1993-2003), ஹு ஜின்டாவ் (2003-2013) இருவரின் பதவிக்காலமும் பத்தாண்டுகள். இந்த விதியை ஷி மாற்றப்போகிறார். அவரது பதவிக்காலம் 2023ஐத் தாண்டியும் நீடிக்கும். அடுத்து, சீனா அடக்கி வாசிக்க வேண்டும் என்று டெங் கருதினார். ஆனால், காத்திருப்பின் காலம் முடிந்துவிட்டது என்பது ஷி-யின் கருத்து. தென்சீனக் கடலிலும், இந்திய எல்லையிலும், அமெரிக்க வணிகத்திலும் சீனா தனது ஆக்ரோஷமான முகத்தை வெளிப்படுத்துகிறது.

டெங்குக்கு மாவோவின் மீது விமர்சனங்கள் இருந்தன. எனினும், மாவோவிடம் குற்றத்தைவிடக் குணமே அதிகம் என்றார் டெங். கட்சியின் அடையாளமாக மாவோவைத்தான் நிறுத்தினார் டெங். ஷி-யும் அதையேதான் செய்தாலும், ஒருபடி மேலே போகிறார். மாவோவின் நெடும் பயணமும், ஜப்பானிய எதிர்ப்பும் வரலாற்றில் இடம்பெறும். ஆனால், பெரும் பாய்ச்சல் திட்டமும், கலாசாரப் புரட்சியும் வரலாற்றில் அவசியமற்றவை என்பது ஷி ஜின்பிங்கின் கருத்து. அதாவது மாவோவின் குணம் மட்டும் வரலாற்றில் இடம்பெறும். கூடவே, சீனாவின் அடையாளமாக மாவோ மட்டுமில்லை, அடுத்த இடத்தில் ஷி-யும் இருப்பார் என்று எதிர்பார்க்கலாம். வருங்காலத்தில் தியானென்மென் சதுக்கத்தின் முகப்பில் மாவோவின் படத்துக்கு அருகில் ஷி-யின் படமும் இடம்பெறக்கூடும்.

**மு.இராமனாதன்**
**நன்றி - இந்து**

# ஆப்கானில் இந்தியர்கள் கடத்தப்படும் அபாயம்

## தேவையின்றி வெளியே வராதீர்கள் - இந்திய தூதரகம் எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படைகள் வாபஸ் பெறப்பட்டு வருவதால், தலிபான்கள் தீவிரவாதிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

அரச படைகளின் மீது தாக்குதல் நடத்தி, கடந்த 2 வாரங்களில் மட்டுமே 30இற்கும் மேற்பட்ட மாவட்டங்களை கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், தலிபான் தீவிரவாதிகளால் இந்தியர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது. இது தொடர்பாக, காபூலில் செயற்படும் இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''தீவிரவாதக் குழுக்கள் வணிக வளாகங்கள், பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு இந்தியர்களும் விதிவிலக்கல்ல. மேலும், இந்தியர்களுக்கு கடத்தல் அச்சுறுத்தலும் நிலவுகிறது. எனவே, இந்தியர்கள் அவசியம் இல்லாத பயணங்களையும், வெளியே செல்வதையும் தவிர்க்கவேண்டும். எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என கூறப்பட்டுள்ளது.

ஆப்கானில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் தங்கி பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய செய்திகள்

### வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடும் விவசாயிகள் மீது பாஜ.கவினர் தாக்குதல்



டில்லி எல்லையில் வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடி வரும் விவசாயிகளுடன் பா.ஜ.கவினர் மோதலில் ஈடுபட்டதால் பரபரப்பு எழுந்துள்ளது.

இந்திய மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 வேளாண் சட்டங்களை திரும்பப்பெறக் கோரி, டில்லி எல்லையை முற்றுகையிட்டு கடந்த 7 மாதங்களாக பல்வேறு விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், டில்லி-மீரட் எக்ஸ்பிரஸ் சாலையில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியாக பேரணியாக வந்த பா.ஜ.கவினர் திடீரென விவசாயிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

அப்போது, இருதரப்பினரும் கம்புகளால் கடுமையாக தாக்கிக்கொண்டனர். இதில், பலர் படுகாயமடைந்தனர். இதுதொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இதுகுறித்து, சம்யுக்தா கிஷான் மோர்சா சங்க செய்தித் தொடர்பாளர் ஜாக்டர் சிங் பஜ்வா கூறுகையில்,

''பா.ஜ.கவினர் விவசாயிகளிடம் தவறாக நடத்துகொண்டு, அவர்களது வாகனங்களை அவர்களே உடைத்துக்கொண்டனர். விவசாயிகளின் போராட்டத்தை சீர்குலைக்க அரசு செய்த சதிதான் இது. இதுகுறித்து நாங்கள் பொலிஸில் முறையிட்டுள்ளோம். நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வருங்கால போராட்ட திட்டங்கள் குறித்து முடிவு செய்வோம்'' என்றார்.

### பேய்கள் மீது வழக்கு: குஜராத்தில் விநோதம்



''தன்னை வேலை செய்யவிடாமல் கொலை செய்வதாக மிரட்டுகிறார்கள்'' என விவசாயியொருவர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பேய்கள் மீது குஜராத் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

குஜராத்திலுள்ள பாஞ்ச்மஹல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர், அங்குள்ள பொலிஸ் நிலையத்துக்கு தலைதெறிக்க ஓடிச் சென்றுள்ளார். அவரை ஆசுவாசப்படுத்திய பொலிஸார் விசாரித்தனர். தோட்டத்தில் என்னை வேலை செய்யவிடாமல், இரண்டு பேய்கள் தொடர்ந்து தொந்தரவு கொடுக்கின்றன, கொலை செய்வதாகவும் மிரட்டுகின்றன என அந்த நபர் தெரிவித்துள்ளார்.

அரண்டுபோன பொலிஸார், என்ன செய்யவேண்டும் எனக் கேட்டுள்ளனர். அந்த பேய்கள் மீது வழக்கு பதிவு செய்யுங்கள். அவை பயந்து ஓடிவிடும் என அவர் தெரிவித்துள்ளார். அவர் தொந்தரவு செய்யவே வேறு வழியில்லாமல் பொலிஸார் வழக்கு பதிவுசெய்துள்ளனர். பின் அவருடைய குடும்பத்தாரை அழைத்து விசாரித்தனர்.

மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த அவர், 10 நாட்களாக மாத்திரை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது தெரியவந்தது. குடும்பத்தாருக்கு அறிவுரை கூறி, அந்த நபருக்கு ஆறுதல் கூறி, பொலிஸார் அனுப்பிவைத்துள்ளனர்.


**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

### சம்பத் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்
### 31-12-2020 ம் திகதி வரை கைவிடப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமான சட்டபூர்வமான அறிக்கை

- வங்கிச் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட கணக்குகளும் சொத்துகளும் கைவிடப்பட்ட சொத்துகளாக கருதப்படும்.
  - பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக செயற்படுத்தப்படாமல் இருக்கும் கணக்கில் இடப்பட்ட பணம் மற்றும் வேறு வைப்புப் பணங்கள்
  - தவணைக்காலம் பூர்த்தியாகிய பின்னர் வங்கியினால் அறிவித்தல் அனுப்பப்பட்டு 3 வருடங்களுக்குள் தொடர்பு கொள்ள தவறிய வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ள சொத்துகள்
- மேற்கூறப்பட்ட காரணங்களுக்கமைய மற்றும் வங்கி சட்டத்தின் 73(i) பிரிவின் பிரகாரம் எமது வங்கியால் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகள் என கருதப்பட்ட வங்கி கிளைகளின் கணக்குகள் மற்றும் சொத்துகள் அடங்கிய அறிக்கையின் சாரம்சம் கீழே தரப்பட்டுள்ளது.
  - அவ்வாறாயின் வாடிக்கையாளர்கள் கீழ் வரும் கிளைகளில் தங்களது கணக்கு அல்லது பாதுகாப்பு பெட்டகம் கைவிடப்பட்ட சொத்துபிரிவுக்குள் அடங்குவதாக அனுமானித்தால், எங்களது எந்தவொரு வங்கிக்கிளையிலும் இது சம்பந்தமான விடயங்களை பரிசீலித்து பார்ப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை தயவுடன் அறிவித்துக்கொள்கிறோம்.
  - மேலும் **31.07.2021 ஆம்** திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வகையிலான கொடுக்கல் வாங்கல்களையாவது மேற்கொண்டு வங்கியில் உள்ள உங்களது கைவிடப்பட்ட சொத்துக்களை மீள செயற்ப்படுத்துவதற்கான நிலையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
  - உங்களது கணக்கை செயற்படுத்துவதற்காக வங்கிக்கு கடிதம் அனுப்புதல்
  - கணக்கின் கொடுக்கல் வாங்கல்களை உங்களது சேமிப்பு புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளல்
  - பணம் வைப்பிலிடல் அல்லது மீளப்பெறுதல்
  - உங்களது தேவைக்கு ஏற்ப கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை மாற்றிக் கொள்ளல்
  - பாதுகாப்பு பெட்டகம் தொடர்பில் காலாவதியாகியுள்ள தவணைப் பணத்தை மீளச் செலுத்தல்
- இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தொடர்பான கணக்கறிக்கை அதன் இரகசியத் தன்மை மற்றும் உரிமையின் பாதுகாப்பை பேணுவதற்காக பிரசுரிக்கப்படமாட்டாது. மற்றும் மூன்றாம் நபர்களின் உரிமைக் கோரலை தவிர்க்க வேண்டியுமாகும்.
- அவ்வாறாயினும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கைவிடப்பட்ட சொத்து தொடர்பான விபர அறிக்கை வங்கிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட முகவரிக்கு உரிய காலத்தில் அனுப்பப்படும் என்பதை தயவுடன் அறிவித்துக்கொள்கிறோம்.

| கிளை | தொலைபேசி | இல | கிளை | தொலைபேசி | இல | கிளை | தொலைபெசி | இல |
|---|---|---|---|---|---|---|---|---|
| நகர கிளை | 0112434431 | 353 | மாலபே | 0112762222 | 69 | கொகுவல | 0112814480 | 24 |
| புறக்கோட்டை | 0112432324 | 92 | நாரஹென்பிட்டிய | 0112552820 | 29 | கிரியுல்ல | 0372289482 | 38 |
| நுகேகொடை | 0112856907 | 299 | கலவான | 0452255793 | 59 | கண்டி மெட்ரோ | 0812200096 | 8 |
| பொரளை | 0112691121 | 396 | பிரதான வீதி | 0112386732 | 25 | அக்கரைப்பற்று | 0672279197 | 77 |
| கிரிபத்கொடை | 0112910457 | 276 | எம்பிலிப்பிட்டிய | 0472261203 | 94 | சம்பத் விஷ்வா | 0372296088 | 34 |
| குருநாகல் சுப்பர் | 0372223500 | 181 | வாரியப்பொல | 0372268707 | 51 | வெ.நா.வ.பிரிவு | 0115406163 | 4 |
| கண்டி சுப்பர் | 0812232778 | 235 | வெல்லம்பிட்டிய | 0112533498 | 54 | நிக்கவரெட்டிய | 0372260918 | 46 |
| வத்தளை | 0112931569 | 109 | பண்டாரவளை | 0572223720 | 74 | பெல்மடுல்ல | 0452275920 | 28 |
| நவம் மாவத்தை | 0112305025 | 73 | பாணந்துறை வாக்கட | 0382244534 | 60 | வத்தேகம | 0812476876 | 11 |
| மாத்தறை சுப்பர் | 0412223260 | 259 | தம்புத்தேகம | 0252276836 | 72 | மத்துகம | 0342247233 | 30 |
| பம்பலப்பிட்டிய | 0112502686 | 63 | தெரனியகல | 0362249522 | 42 | சிலாபம் | 0322222677 | 154 |
| கோட்டை | 0112327379 | 117 | களுத்துறை | 0342235600 | 86 | சுன்னாகம் | 0212240721 | 30 |
| மஹரகம | 0112840950 | 192 | நுவரெலியா | 0522222946 | 13 | களுவாஞ்சிக்குடி | 0652251177 | 53 |
| தெனியாய | 0412273225 | 73 | திகன | 0812376765 | 23 | மன்னார் | 0232251320 | 76 |
| மொறவக்க | 0412282310 | 46 | மீரிகம | 0332276901 | 46 | பிளாட்டினம் பிளஸ் | 0112695073 | 1 |
| கம்பஹா | 0332226640 | 192 | பன்னிபிட்டிய | 0112783100 | 7 | தங்காலை | 0472241865 | 14 |
| தெஹிவளை | 0112738481 | 90 | நீர்கொழும்பு- II | 0312221930 | 4 | சாய்ந்தமருது | 0672225310 | 7 |
| இரத்மலானை | 0112730821 | 94 | அத்திடிய | 0112725668 | 30 | கிராண்ட்பாஸ் | 0112472390 | 15 |
| பிலியந்தலை | 0112614664 | 137 | தம்புள்ள | 0662283067 | 28 | நாத்தாண்டிய | 0322250263 | 15 |
| எஹலியகொட | 0362258032 | 104 | பிட்டகோட்டை | 0112874574 | 22 | குண்டசாலை | 0812421763 | 4 |
| அநுராதபுரம் சுப்பர் | 0252235026 | 94 | ஜா-எல | 0112245896 | 54 | கொள்ளுப்பிட்டி | 0112590682 | 5 |
| அவிசாவளை | 0362222011 | 127 | அம்பலாந்தோட்டை | 0472225506 | 40 | கங்கொடவில | 0112814147 | 1 |
| குளியாப்பிட்டிய | 0372281860 | 127 | ஹெந்தலை | 0112933098 | 1 | பெலியகொடை | 0112940279 | 4 |
| நீர்கொழும்பு சுப்பர் | 0312224344 | 197 | மட்டக்களப்பு | 0652227501 | 79 | ஹங்வெல்ல | 0362254445 | 5 |
| மாத்தளை | 0662223861 | 113 | ஹிங்குராங்கொட | 0272245300 | 32 | நொச்சியாகம | 0252257332 | 7 |
| கந்தானை | 0112229218 | 47 | செங்கலடி | 0652241348 | 103 | மட்டக்களப்பு II | 0652228240 | 2 |
| வெயங்கொடை | 0332293937 | 30 | யாழ்ப்பாணம் | 0212221025 | 106 | இங்கிரிய | 0342268288 | 5 |
| கனேமுல்லை | 0332264630 | 35 | கிருலப்பனை | 0112513828 | 16 | கராப்பிட்டிய | 0912248456 | 4 |
| அளுத்கம | 0342290861 | 33 | ஓட்டமாவடி | 0652257372 | 46 | பொரலஸ்கமுவ | 0112545245 | 2 |
| ஹட்டன் | 0512225403 | 46 | இராஜகிரிய | 0112864922 | 14 | ஆனமடுவ | 0322263042 | 5 |
| வெலிமடை | 0572244466 | 61 | பேராதெனிய | 0812387876 | 50 | மருதானை | 0112678541 | 5 |
| நாவல | 0112812 331 | 1 | கொட்டாவ | 0112782684 | 23 | புத்தள | 0552273530 | 8 |
| கிரிந்திவெல | 0332247150 | 47 | அலவ்வ | 0372279209 | 60 | பசறை | 0552288311 | 3 |
| பலாங்கொடை | 0452288793 | 35 | நெலுவ | 0912285208 | 51 | மானிப்பாய் | 0212255041 | 36 |
| நாராம்மல | 0372248945 | 48 | வவுனியா | 0242226806 | 99 | கிளிநொச்சி | 0212285340 | 61 |
| கம்பளை | 0812350564 | 37 | மகியங்கனை | 0552258180 | 93 | கெக்கிராவ | 252265266 | 7 |
| வெல்லவாய | 0552274419 | 30 | ஹொரணை | 0342260345 | 87 | பிலிமத்தலாவ | 0812577341 | 7 |
| கல்முனை | 0672220448 | 94 | துறைமுக முகப்பு கிளை | 0112331066 | 68 | கெஸல்வத்தை | 0382299633 | 1 |
| பத்தேகமை | 0912293230 | 8 | பண்டாரகம | 0382289898 | 53 | புசல்லாவ | 0812478034 | 1 |
| எம்புல்தெனிய | 0112836410 | 11 | கடவத்தை | 0112921001 | 81 | மாத்தறை பஸார் | 0412234055 | 1 |
| காத்தான்குடி | 0652247930 | 43 | பத்தரமுல்லை | 0112861805 | 38 | அரலஹன்வில | 0272257204 | 9 |
| நெல்லியடி | 0212264950 | 208 | அம்பாறை | 0632223840 | 80 | மொரட்டுமுல்ல | 0112654040 | 1 |
| பொத்துவில் | 0632248194 | 19 | பெலவத்தை | 0112787209 | 32 | புத்தளம் | 0322266312 | 9 |
| கண்டி சிற்றி சென்ரர் | 0812205825 | 22 | கேகாலை | 0352230597 | 126 | சூரியவெவ | 0472288155 | 4 |
| பாணந்துறை சுப்பர் | 0382235100 | 111 | மினுவாங்கொடை | 0112299131 | 80 | மித்தெனிய | 0472248231 | 1 |
| பழைய சோனகத் தெரு | 0112452490 | 21 | திருகோணமலை | 0262225387 | 101 | காலி பஸார் | 0912248582 | 1 |
| திஸ்ஸமஹாராம | 0472237056 | 80 | அத்துருகிரிய | 0112563612 | 18 | மாவனல்ல | 0352246961 | 5 |
| தலைமைக்காரியாலயம் | 0112358358 | 137 | யக்கல | 0332232670 | 19 | பிபில | 0552265398 | 2 |
| வென்னப்புவ | 0312256925 | 129 | ஹோமாகம | 0112855975 | 58 | கடுவெல | 0112537539 | 4 |
| மொறட்டுவை | 0112644737 | 87 | கிரகறிஸ் வீதி | 0112681144 | 9 | ரிக்கிலகஸ்கட | 0812365021 | 4 |
| கட்டுகஸ்தோட்டை | 0812498932 | 58 | நிட்டம்புவ | 0332295905 | 62 | சங்கானை | 0212250072 | 3 |
| இரத்தினபுரி | 0452232261 | 78 | அம்பலாங்கொடை | 0912255571 | 51 | கொச்சிக்கடை | 0312279647 | 4 |
| திம்பிரிகஸ்யாய | 0112505001 | 84 | ராகமை | 0112960629 | 32 | தெஹியத்தகண்டிய | 0272250418 | 1 |
| காலி சுப்பர் | 0912245646 | 153 | மொனராகலை | 0552277222 | 60 | அனுராதபுர புதிய நகரம் | 0252226190 | 2 |
| வெள்ளவத்தை சுப்பர் | 0112507607 | 71 | வாதுவை | 0382284960 | 34 | சாவகச்சேரி | 0212270091 | 1 |
| கொட்டாஞ்சேனை | 0112384010 | 76 | மகரகம சுப்பர் | 0112160380 | 56 | வவுனியா மெட்ரோ | 0242226227 | 7 |
| கடுறுவெல | 0272225567 | 57 | பதுளை | 0552225450 | 61 | ஊர்காவற்துறை | 0212211611 | 1 |

மேலதிக விபரங்களுக்கு 011-4730220 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக செயற்பாட்டு பிரிவினை தொடர்பு கொள்ளவும்.
அல்லது e-mail : mgr@oper.sampath.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

0112 30 30 50 www.sampath.lk

சம்பத் வங்கி PLC-PQ 144 ஸ்ரீலங்காவின் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வரும் வர்த்தக வங்கி.

# நுவரெலியாவில் 7,461 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை வரையில் 7 ஆயிரத்து 461 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். மேலும், 134 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 60 பேர்கொரோனா தொற்றுக்குள்ளானதாக இனங்காணப் பட்டுள்ளனர். அத்துடன், 5 ஆயிரத்து 50 குடும்பங்கள் தன்மைப்படுத்தப் பட்டுள்ளன.

அம்பகமுவ பகுதியில் ஆயிரத்து 828 குடும்பங்களும், கொத்மலை பகுதியில் 1,126 குடும்பங்களும், ஹங்குரங்கெத்த பகுதியில் 244 குடும்பங்களும், வலப்பனை பகுதியில் ஆயிரத்து 41 குடும்பங்களும், நுவரெலியாவில் 811 குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரேனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். அந்தவகையில் அம்பகமுவ பகுதியில் ஆயிரத்து 397 பேரும், பொகவந்தலாவ பகுதியில் 877 பேரும், ஹங்குரங்கெத்த பகுதியில் 406 பேரும், கொட்டகலை பகுதியில் 504 பேரும், கொத்மலையில் 661 பேரும், லிந்துலையில் 538 பேரும், மஸ்கெலியாவில் 355 பேரும், மதுரட்ட பகுதியில் 141 பேரும், நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 412 பேரும், புதிய திஸ்பனை பகுதியில் 726 பேரும், நுவரெலியாவில் 586 பேரும், இராகலையில் 509 பேரும், வலப்பனை பகுதியில் 349 பேருமாக மொத்தமாக 7,461 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் மூலமாக தொற்றுக்குள்ளானதாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

# நானுஓயாவில் பதுக்கிவைக்கப்பட்ட இரசாயன உர மூடைகள் மீட்பு



(எம். கிருஸ்ணா)

நானுஓயாவில் அதிக விலைக்கு விற்பனைசெய்வதெற்கென பதுக்கிவைக்கப்பட்டிருந்த 129 இரசாயன உர மூடைகளை நுவரெலியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு காரியலாய உத்தியோகத்தர்கள் கைப்பற்றியுள்ளனர்.

நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை நானுஓயா நகரிலுள்ள உரம் விற்பனை, வர்த்தகர் ஒருவரின் வீட்டினை சோதனையிட்டபோதே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு சிரேஷ்ட பரிசோதகர் ஜே.எம்.ஆர்.கருணாரத்ன தெரிவித்தார்.

மீட்கப்பட்ட உர மூடைகள் நானுஓயா பொலிஸாரினால் சீல் வைக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 8ஆம் திகதி நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# தவறு யார் மீது?

பொருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரமாக உயர்த்த முன்வைத்த கோரிக்கைகளும் போராட்டங்களும் 2015ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசியலில் பேசு பொருளாக மாறி இன்று 2021ஆம் ஆண்டு இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டாலும் அந்த சம்பளத்திற்கான நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக மலையகத்தின் பல்வேறு தோட்டக் கம்பனிகளும் நாட்சம்பளத்திற்கான கொழுந்து நிறையை அதிகரித்துள்ளன.

அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவை பிரதேசத்திற்குட்பட்ட கொட்டியாகலை தோட்டத்தில் இவ்வளவு காலமாக நாட்சம்பளத்திற்கு 13 கிலோ கொழுந்து பறித்தனர். ஆனால், இவர்களின் சம்பளம் ஆயிரமாக உயர்த்தப்பட்டதன் பின் கடந்த மூன்று மாதங்களாக ஒருநாள் சம்பளத்திற்கு 18 கிலோ கொழுந்து பறிக்க தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வருகின்றது.

அதாவது, கடந்த ஏப்ரல் மாதம் கிழமையில் மூன்று நாள் வேலையும், மே மாதம் கிழமையில் இரண்டு நாள் வேலையும், ஜூன் மாதம் மாதத்திற்கு மூன்று நாள் வேலையுமே வழங்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதாவது கொட்டியாகலை மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு சீனாக்கொலை போன்ற தோட்டங்களிலேயே கடந்த மூன்று மாதமாக இப்பிரச்சினை தொடர்கிறது.

பொகவந்தலாவை செல்வகந்த, பொகவான, செப்பல்டன், பொகவந்தலாவை, கெம்பியன் கொட்டியாகலை தோட்ட மக்கள் தோட்ட நிர்வாகத்தின் உயரிய அழுத்தத்தின் காரணமாகவும் நிர்வாகத்தினரின் பொய்யான வாக்குறுதிகளையும் நம்பி நாட்சம்பளத்திற்கு 18 கிலோ என்பதற்கமைய வேலை செய்தனர்.

ஆனால், இரண்டு மாதமாக கொழுந்து அதிகமாக இருந்தமையால் அவர்களின் நிபந்தனைக்கமைய 18 கிலோ சாத்தியமானது. ஆனால், இப்போது கொழுந்து குறைந்து விட்டதால் அவர்களுக்கான வேலைநாட்களும் குறைவு. அவர்களும் 18 கிலோ கொழுந்து பறிக்க ஒப்புக்கொண்டது தோட்ட நிர்வாகத்தினரின் பொய்யான வாக்குறுதியை நம்பியே.

ஏனெனில், 18 கிலோ கொழுந்து பறிக்க தோட்ட நிர்வாகம் வலியுறுத்தியபோதும் மக்கள் 13 கிலோ கொழுந்தே பறித்தனர். ஆனால், இச்சம்பளப் பிரச்சினை தொடர்பில் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கில் தீர்ப்பு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையுமாயின் நீங்கள் எடுத்த 18 கிலோ கொழுந்தில் 13 கிலோ நாட்சம்பளத்திற்கும் மிகுதி 5 கிலோ மேலதிக கொழுந்தாக சேர்த்து தரப்படும் என்ற பொய்யான வாக்குறுதியை நம்பியே ஏனைய தோட்டங்களும் தொழிலுக்கு சென்றனர்.

இவ்வாறிருக்க, “ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்” என்பதைப்போல் தோட்ட நிர்வாகத்தினரின் தூண்டுதலினால் ஒருநாள் மட்டும் எல்லா தோட்டங்களிலும் ஐவர் வேலை செய்தனர். இது இவ்வாறே தொடர்ந்தால் உரிய தீர்வு கிடைக்காது என்றே 30.06.2021 கொட்டியாகலை தொழிற்சாலை வாயிலுக்கருகில் யாருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படுத்தாது. போக்குவரத்திற்கும் தடை ஏற்படாது கொரோனா நெருக்கடி நிலையிலும் உரிய வகையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தம் நியாயமான கோரிக்கைகளுடன் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இப்போராட்டத்தில் கொட்டியாகலை மேற்பிரிவைச் சேர்ந்த தனஸ்லாஸ், மோகன்ராஜ், பன்னீர்செல்வம் மற்றும் கொட்டியாகலை கீழ்ப்பிரிவு கலைநாதன், தயாபரன், பாலகுமார் ஆகியோர் இப்போராட்டத்தில் முன்னின்று செயற்படுகின்றனர். இவ்வாறு ஆறுபேரில் ஆரம்பித்த போராட்டம் மாலை மூன்று மணியளவில் 109 பேராக உருவெடுத்தது.

இந்த தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் எந்தவொரு அரசியல் தலைவர்களின் செவிக்கும் எட்டவில்லை. அன்று 13 கிலோ மட்டும் எடுங்கள் என தொழிலாளர்களுக்கு வாக்கு கூறி சென்ற ஜீவன் தொண்டமான் பொகவந்தலாவையில் கொரோனா தீவிரமடைந்துள்ளது. ஆகையால் என்னால் வர முடியாது என தொலைபேசி அழைப்பினூடாக தெரிவித்துள்ளார்.

எம் மலையக மக்களின் அல்லல் நிலையை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு, கொரோனா தொற்று, பிள்ளைகளுக்கான சூம் வகுப்பு, மருத்துவம் என அன்றாடம் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

இதில் மிக முக்கியமான. மற்றுமொரு விடயம் வேறு எந்தவொரு தோட்டத் தலைவர்களும் கட்சித் தலைவர்களும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இவர்கள் தோட்ட நிர்வாகத்தினருடன் கரம் கோர்ப்பது ஏன்? இவர்கள் மக்கள் பிரதிநிதிகள்தானே?

இவர்களின் செயற்பாடுகளும் மக்களை நசுக்குவதாகவே அமைகின்றன.

ராஜா அபிராமி

# தாதியர்கள் வேலைநிறுத்தத்தால் டிக்கோயாவில் நோயாளர்கள் அவஸ்தை

## தாதியரின் பணியை வைத்தியர்கள் முன்னெடுப்பு





(எம். கிருஷ்ணா)

நாடு முழுவதும் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் நேற்று (01) ஈடுபட்ட நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியாசாலையில் தாதியர்களின் வைத்தியர்கள் மேற்கொண்டனர்.

டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு தாதியர்கள் வருகைதராமையினால் வெளி நோயார்கள் மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிகிச்சை பெற்று வரும் நோயார்களுக்கான தாதியர்களின் கடமைகளை வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் மேற்கொண்டனர்.

நோயாளர்கள் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு அதிகளவில் வருகைத்தருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சேதனப் பசளை தயாரிக்கும் தனியார் துறையினருக்கு நிதியுதவி

## சப்ரகமுவ ஆளுநர் கொப்பேகடுவ தெரிவிப்பு



(சிவா ஸ்ரீதரராவ்)

சேதனப் பசளை தயாரிப்பில் ஈடுபடும் தனியார் துறையினருக்கு அரசாங்கத்தின் மூலம் உதவிகள் பெற்று கொடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

தெரணியாகலை கிறீன் கொண்கோட் பேர்ட்டிலைசர் நிர்வனத்தினால்;; தேதனப் பசளை தயாரிக்கும் பிரிவை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நேரில் சென்று பார்வையிட்டு; கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தொவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்இ

தேதனப் பசளை தயாரிப்பில் ஈடுபடுவோருக்கு நிதியுதவி மற்றும் அது சம்பந்தமான பயிற்சிகள் என்பன அரசாங்கத்தின் மூலம் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நஞ்சற்ற உணவு உற்பத்தி எனும் தொனிப்பொருளில் சேதனப் பசளையின் உற்பத்தி அவசியம் பற்றியும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உட்பட சப்ரகமுவ மாகாண சபையின் முன்னால் உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தின் ஊடகர்களுக்கு நிவாரணம்





கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவிகள் வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்ட ஊடகவியலாளர்கள் 25 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இரத்தினபுரி சுற்றாடல் சமூக அபிவிருத்தி மற்றும் தகவல் மத்திய நிலைய தலைமையகத்தில் அதன் பணிப்பாளர் ஷமிந்த பியசேகரவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் மேற்படி ஊடகவியலாளர்களுக்கு வழங்கப் பட்டன.

சுற்றாடல் சமூக அபிவிருத்தி மற்றும் தகவல் மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க நீலன் திருச்செல்வம் மன்றத்தின் 2.5 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் கொவிட் 19 நிவாரண உதவிகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்ட வறிய தமிழ் குடும்பங்கள் உட்பட இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்புகளை எதிர்நோக்கிய குடும்பங்களுக்கும் மேற்படி உலருணவுப் பொதிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

# தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்படாத கம்பனிகளின் கொட்டத்தை அடக்கும் ஆட்டம் ஆரம்பம்

## பாரத் அருள்சாமி நாவலப்பிட்டியில் ஆவேசப் பேச்சு



(க. கிஷாந்தன்)

“ஒருசில பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக செயற்படுகின்றன. அவற்றின் கொட்டத்தை அடக்குவதற்கான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க ஆட்டம் ஜூலை முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகும்” - என்று இ.தொ.காவின் உப செயலாளரும், பிரஜாசக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாவலப்பிட்டி இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முழு போராட்டத்தின் விளைவாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்கப்பெற்றது. கடந்த காலங்களில் சம்பள உயர்வு தொடர்பான நடவடிக்கை கூட்டு ஒப்பந்தம் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டுவந்தது. அப்போது கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என விமர்சித்தவர்கள், இன்று கூட்டு ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

எமது மக்களுக்கான தொழில் மற்றும் இதர உரிமைகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் வென்றெடுக்கும். கம்பனிகளுடன் எமது பொதுச் செயலாளர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றார். அதன் அடிப்படையில் நிச்சயம் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.

சில கம்பனிகள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்பாடாமல் செயற்பட்டுவருகின்றன. அவற்றுக்கு எதிரான எமது தொழிற்சங்க ஆட்டம் ஜூலை முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகும்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தூங்குகிறதா என கேட்டு சிலர் இன்று விமர்சன அரசியல் நடத்துகின்றனர். இ.தொ.கா. தூங்கவில்லை. களத்தில் இறங்கி கம்பீரமாக செயற்படுகின்றது. ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்களே, எமது சேவையைக் கண்டு அஞ்சி, திடீரென எழுந்து உளறி, விமர்சன அரசியல் நடத்துகின்றனர். எப்படிதான் விமர்சித்தாலும் மக்கள் எம் பக்கம். அவர்களுக்கான எமது பணிகள் தொடரும்” - என்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளருமாகிய பாரத் அருள் சாமியின் வேண்டுக்கோளிற்கு அமைவாக ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் 50 இலட்சம் ரூபா நன்கொடையின் கீழ் இத்திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள் சாமியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் தலைவர் மொகமட் அலியார், மற்றும் பொதுமக்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த குடிநீர்த் திட்டத்தின் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த 600 குடும்பங்களை உடைய ஆயிரத்து 500 பயனாளிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொத்மலையில் தனிமைப்படுத்தலிலிருந்து நான்கு கிராமசேவகர் பிரிவுகள் விடுவிப்பு

(கினிகத்தேனை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்ட நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப் படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலுதமத கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஹப்புகஸ்தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவு, வீரபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு, கீழ் கொரகஓயா கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகியனவே தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

# 5 தொழிலாளர்கள் மீது குளவிக்கொட்டு

## பொகவந்தலாவையில் சம்பவம்

(எம். கிருஸ்ணா)

பொகவந்தலாவையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் ஐவர் குளவி கொட்டுக்கு இழக்காகியுள்ளனர்.

பொகவந்தலாவை பிரிட்வெல் தோட்ட தேயிலை மலையில் நேற்றுக் காலை 11 மணியளவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தவர்கள் மீது மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இழக்கானவர்கள் பொகவந்தலாவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.




# மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நிறுவன சமூகப் பொறுப்புக்கூறல் நடவடிக்கையாக சிபாரிசுசெய்யப்பட்ட ECO மாத்திரைகளுக்கான விண்ணப்பம்

வாகன எரிபொருளின் தரத்தை மீளுயர்த்தும் வகையில், நெனோ டெக்னோலஜி மூலம் தயாரிக்கப்படும் கரிமப் பொருளான ECO மாத்திரைகளைப் பயன்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை சிபாரிசு செய்துள்ளது. வாகனக் கழிவுகளால் காற்று மாசடைதலைக் குறைக்கும் வகையில், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் தயாரிப்பை சிலோன் கிறீன் ப்ரொடியூஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது. இந்த ECO மாத்திரைகளானது இரண்டு பெயர்களில் தயாரிக்கப்படுகிறது. அவற்றுள் முதலாவது, ECO ரேசிங், பெற்றோல் வாகனங்களுக்கானது. இரண்டாவது ECO டீசல், டீசல் வாகனங்களுக்கானது. ECO மாத்திரையானது, எரிபொருளின் தரத்தை உயர்த்துவதுடன், வாகனத்தின் உற்பத்திநிலை எரிபொருள் தேவையின் மட்டத்தில் வைத்திருக்க உதவுவதுடன், ஸ்பார்க் ப்ளக்குகள், எரிபொருள் தாங்கி மற்றும் எரிபொருளை இயங்கு சக்தியாக மாற்றும் அறை மற்றும் எரிபொருள் தாங்கி என்பனவற்றைச் சுத்தப்படுத்துவதன் மூலம், என்ஜினின் ஆயுளையும் இரு மடங்கு உயர்த்துகிறது. ஏறக்குறைய 20% முதல் 50% வரை எரிபொருளைச் சிக்கனப்படுத்துகிறது.




ECO ரேசிங் வகையானது, பெற்றோலிலுள்ள ஒக்டேனின் அளவை 5இலிருந்து 10ஆக உயர்த்தும் அதேநேரம், ECO டீசலானது, டீசலில் காணப்படும் சிடேனின் அளவை 1 இலிருந்து 5 ஆக உயர்த்துகிறது. மேலும் கார்பன் மோனொக்சைட் வெளியேறலை 100% குறைப்பதுடன் சல்பர் டையொக்ஸைட் அளவை 99 சதவீதம் குறைக்கிறது. ECO மாத்திரைகளின் பரிசோதனையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடத்தப்பட்டு உறுதிசெய்யப்பட்டிருப்பதுடன், ECO மாத்திரைகளை பயன்படுத்துவதற்கு சிபாரிசும் செய்யப்பட்டிருக்கிறது.

ECO மாத்திரைகளை வாகனங்களில் பயன்படுத்தும்போது, எரிபொருளின் எரிப்புச் சக்தி மேம்படுத்தப்படுவதன் மூலமும் வாகனத்தின் என்ஜினின் திறன் உயர்த்தப்படுவதன் மூலமும் அவ்வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் வாயு மாசடைதலும் குறைகிறது. இதனால், அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் ECO மாத்திரைகளை தங்களது வாகனங்களில் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டிவருகின்றன. அதேவேளை, ECO மாத்திரைகள் உண்மையிலேயே எரிபொருளுக்கு ஓர் உந்துசக்தியாக விளங்குவதுடன், ஏனைய பல நன்மைகளையும் தருகின்றன என்று சிபாரிசும் செய்திருக்கிறார்கள். உயர்தரத்தாலும் செயற்றிறனாலும் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக சர்வதேச புகழ்பெற்றுள்ள ECO மாத்திரைகளை மோட்டார் சைக்கிள் முதல் கனரக வாகனங்கள், இயந்திரங்களிலும் பயன்படுத்தலாம். ECO மாத்திரைகளின் பயன்பாடானது, பசுமையை உறுதிப்படுத்தும் ECO மாத்திரையின் பங்காளி| என மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சிபாரிசு செய்துள்ளது.

இது, பசுமைக்கான பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் சிலோன் கிறீன் ப்ரொடியூஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் ஓர் அம்சமாகும். தொடர்புகளுக்கு: 0779290222

# சவால்களுக்கு மத்தியில் மீளெழுச்சிமிக்க வளர்ச்சியையும் உற்பத்தியையும் உறுதிசெய்யும் Pelwatte Dairy

இலங்கையின் முன்னணி உள்நாட்டு பாலுற் பத்தி நிறுவனமான Pelwatte Dairy Industries, தொற்றுநோய், அதன் தாக்கம் உட்பட சுற்றுச்சூழல் மற்றும் பொதுக் கொள்கைகள் போன்ற சவால்களுக்கு மத்தியிலும் தனது மீளெழுச்சியை வெளிப்படுத்தியுள்ளது. பால் உற்பத்தியில் தளம்பல் நிலை, போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக் நடவடிக்கைகளில் சிரமம், விநியோகச் சங்கிலிகளில் இடையூறு, தொழிற் சாலைகளில் தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு போன்றன நிறுவனம் எதிர்கொண்ட சிக்கல்களில் அடங்குகின்றன.



பால் உற்பத்தித்துறையானது, ஏனைய பல தொழிற்றுறைகளைப் போலவே தொற்று நோயையும் அதன் தாக்கங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முடக்கல் நிலையும், பயணக் கட்டுப்பாடுகளும் பெருமளவிலான தொழில்துறைகளை பாதித்துள்ளன. எனினும், தொற்றுநோய் மற்றும் பிற சந்தை அதிர்ச்சிகளுக்கு மத்தியில் பெறுமதிச் சங்கிலியில் உறுதியாக நீடிக்க முடிந்தமையானது Pelwatte நிறுவனத்தை உள்நாட்டு பால் உற்பத்தித்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக திகழவைத்துள்ளது. இந்நிறுவனம் தொழிற்றுறையில் இதுவரை பின்பற்றப்படாத பல அம்ச அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தியது.

மகத்தான சமூக மற்றும் பொருளாதார பெறுமதிகொண்ட ஒரு நிறுவனமாக Pelwatte Dairy Industries, பாற்பண்ணையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், இலங்கை பொருளா தாரம் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிற்கும் அதன் உறுதியான ஆதரவை அளித்து வருகிறது.

இது தொடர்பில் பால் உற்பத்தி அபிவிருத் திக்கான நிறைவேற்று உத்தியோகத்தரான, எரந்த கருத்து தெரிவிக்கையில், “3ஆவது அலைக்காக அமுல்படுத்தப்பட்ட முடக்கல் நிலையானது, முன்பு இருந்ததைபோல் சவாலாக இல்லை. எங்கள் முகாமைத்துவமும் உயரதிகாரிகளும் எதிர்பாராத மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளி லும் செயற்பட அனைத்து செயன்முறைகள் மற்றும் செயற்பாடுகளிலும் வினைத்திறனான நடவடிக்கைகளயும் மேற்கொண்டனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வணிக நடவடிக்கைகளை சீராக தொடர்வதை உறுதிசெய்வதற்கு நடுத்தர மற்றும் கீழ்மட்ட முகாமைத்துவத்திற்கு தேவையான பயிற்சி மற்றும் கருவிகள் வழங்கி அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. முதல் முடக்கலின்போது எங்கள் அனுபவங்கள் ஒரு கற்றல் வளைவு வழியாக எங்களை அழைத்துச் சென்றது” - என்றார்.

பாற்பண்ணையாளர்களிடமிருந்து பாலை சேகரிக்கும் ஆரம்பகட்ட உற்பத்திச் செயன் முறையிலிருந்து, புதிதாக நிறுவப்பட்ட எங்கள் குளிரூட்டும் மையங்களுக்கு கொண்டுசென்று பின்னர் அதை எங்கள் தொழிற்சாலைகளில் பதப்படுத்தி, அவற்றை 72 மணித்தியாலங்களுக்குள் விவசாயிகளிட மிருந்து விற்பனையகங்களுக்கு என்ற எமது சான்றளிக்கப்பட்ட நடைமுறையின் கீழ் விற்பனைக்கு எடுத்துச்செல்வதுவரை முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களையும் Pelwatte கடைப்பிடித்துள் ளது. மேலும், Pelwatte தேவையான சுகாதார தயாரிப்புகள் மற்றும் அகற்றக்கூடிய சுய பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்து நேரங்களிலும் அதன் ஊழியர்களுக்கு உடனடியாக கிடைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

நிறுவனம் மற்றும் அதன் அனைத்து செயன் முறைகளையும் கண்காணிக்க தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் வழக்கமான வருகையை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், வழக்கமான உள்ளக சுகாதார ஆய்வுகளை உறுதிசெய்துள்ளது. இதன் முடிவுகள் சிறப்பானதாகவும், பாராட்டத்தக்கதாகவும் இருப்பது தொடர்பில் அறிவிப்பதில் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது. இது போன்று, 2020 மார்ச்சில் இலங்கையில் தொற்றுநோயின் முதல் அலையின் ஆரம்பித்ததிலிருந்து பல நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளன. இது நிறுவனம் அரசாங்கத்தின் சுகாதார வழிகாட்டு தல்களுடன் இணங்கிச் செல்வதுடன், நுகர்வோர், ஊழியர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களின் பாதுகாப்பையும் உறுதிசெய்கின்றது.

தொற்றுநோய் நெருக்கடி காலப்பகுதியில், ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிசெய்யப்படவேண்டியதை Pelwatte புரிந்துகொண்டுள்ளது. மிகவும் நெருக்கடியான காலப்பகுதியில் கூட ஊழியர்களின் ஊதியம் மற்றும் வேலையை பணயம் வைக்க வில்லை என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது. அரசாங்கத்தின் புதிய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரத்துறையில் முன்னிலையில் உள்ளோரின் முன்வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிவினைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு, Pelwatte ஊழியர்களுக்கு வழக்கமான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அமர்வுகள் நடத்தப்படுகின்றன.

பால் உற்பத்திகள் என்பது உள்நாட்டு உணவின் எங்கும் நிறைந்த பகுதியாகும். இவை தாமாகவே நுகர்வுக்கான ஒரு முக்கிய வடிவமாகும் என்பதுடன், இறுதித் தயாரிப்பாகவோ அல்லது முக்கியமான உள்ளீடாகவோ பலவகையான உணவுகளிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

# “DFCC Digital Dansala”க்கு வாடிக்கையாளர்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவிப்பு

வங்கிச்சேவை தொழிற்றுறையில் ஒரே கலப்பு பணப்பையாக (wallet) விளங்கும் DFCC Virtual Wallet இன் வலுவூட்டலுடன் மேற்கொள்ளப்பட்ட Digital Dansala முயற்சி, அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், இதன்மூலம் வாடிக்கையாளர்கள், வங்கி மற்றும் அதன் ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கியுள்ள நன்கொடைகள் 3 வாரங்கள் குறுகிய காலப்பகுதிக்குள் ரூபா ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை எட்டியுள்ளது.

எதையும் தாங்கி, மீண்டு எழக்கூடிய சமூகங் களை உருவாக்குவதற்கான வங்கியின் பேண்த கமை மூலோபாயத்திற்கு உதவுகின்ற இந்த முயற்சி, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சமூகங்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்கியுள்ளது. இந்த கருணை மனப்பாங்குடனான செயற்பாட்டின் மூலம் நாடெங்கிலும் 139 இடங்களில் அமைந்துள்ள வங்கியின் கிளை வலையமைப்பு அடங்கலாக யாழ்ப்பாணம், வெல்லவாய, பண்டாரவளை, நுவரெலியா, பதுளை, ஹட்டன், மொனராகலை, எம்பிலிப்பிட்டிய, வெலிமடை, பலாங்கொடை, புத்தள, பிபிலை, மஹியங்கனை, கொடகாவல,



மாத்தளை, ரடாம்பல, அக்குரஸ்ஸ, அம்பலாந் தோட்டை, புத்தளம், கொழும்பு, நாவலை, நுகேகொடை மற்றும் மாலபே போன்ற பிரதேசங் களில் வசிக்கின்ற பலரும் இந்த உதவிகளைப் பெற்றுள்ளனர்.

DFCC வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி யான லக்ஷ்மன் சில்வா கூறுகையில், “இதனை சாத்தியமாக்கிய எங்கள் பெறுமதிமிக்க வாடிக் கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். வாடிக்கையாளர்கள் நன்கொடையளிக்கின்ற தொகைக்கு சமமான தொகையை வங்கியின் சார்பில் நன்கொடையளிப்பதாக நாங்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், இந்தக் கடினமான காலகட்டங்களில் தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக கணிசமான தொகை நன்கொ டையளிக்கப்பட்டுள்ளது. இந்த சவாலான காலகட்டங்களில் ஒருவருக்கொருவர் இணைப் பினை ஏற்படுத்தவும், உதவவும் பாரம்பரியங்களை மீறி டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒருங்கி ணைப்பது முக்கியம் என்று DFCC வங்கி நம்புவதுடன், DFCC Vitual Wallet இன் ‘Digital Dansal’ அதனையே முன்னெடுத்துள்ளது. எங்கள் சக பிரஜை களின் உள்ளங்களையும் வாழ்வையும் எட்டி, அவர்களின் வதனங்களில் புன்னகையைத் தோற்றுவிக்க டிஜிட்டல் இடைமுகத்தைப் பயன்படுத்தி, முதன்முறையாக இந்தவகையான செயற்பாட்டை ஆரம்பித்த ஒரே வங்கி DFCC வங்கி என்பதையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

**DFCC வங்கி தொடர்பான விபரங்கள்**

DFCC வங்கியானது 65 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்துடன், வணிக மற்றும் அபிவிருத்தி வங்கி சேவைகளின் ஒட்டுமொத்த அம்சங்களையும் வழங்கும் இலங்கையின் முன்னணி, பாரிய நிதி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்துவருகிறது.

இலங்கையில் Business Today சஞ்சிகையால் மிகச்சிறந்த 30 நிறுவனங்களில் ஒன்றாக இந்த வங்கியும் பெயரிடப்பட்டுள்ளதுடன், மேலும் 2021ஆம் ஆண்டில் Brand Financeஇன் மிகச்சிறந்த 100 மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமங்கள் பட்டியலிலும் இடம்பிடித்துள்ளது. ICRA Lanka Limited இடமிருந்து [SL] AA- Stable என்ற தரமதிப்பீடும், Fitch Ratings Lanka Limited இடமிருந்து A+ (lka) Stable என்ற தரமதிப்பீடும் DFCC வங்கிக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

# காப்புறுதித்துறையில் மாபெரும் போனஸ் தொகையாக 8.6 பில்லியன் ரூபாவை வழங்கும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ்




2005ஆம் ஆண்டு முதல் தற்பொழுது வரை யில் ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு 73.2 பில்லியன் ரூபா போனஸ் தொகையை வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் இந்நாட்டின் காப்புறு தித்துறையில் மாபெரும் போனஸ் தொகையாக 8.6 பில்லியன் ரூபாவை 2020ஆம் ஆண்டுக்கான ஆயுள் காப்புறுதி போனஸ் தொகையாக வழங்கியுள்ளதோடு, 2005 முதல் தற்பொழுது வரை 73.2 பில்லியன் ரூபாவை போனஸ் தொகையாக பெற்றுக்கொடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு SLIC மொபைல் APP ஊடாக தமது போனஸ் சான்றிதழை தரவிறக்கம் செய்துகொள்வதற்கான வாய்ப்புண்டு.

கொவிட்-19 இன் காரணத்தால் நாட்டிலுள்ள அசாதாரண சூழலின் போதும் இப்போனஸ் தொகையை வழங்கியுள்ளதோடு, ஆயுள் காப்புறுதித்துறையில் அதிகளவு சலுகைகளை வழங்கக்கூடிய ஆயுள் காப்புறுதி என்ற நம்பிக்கையையும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் மேலும் உறுதி செய்துள்ளது.

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸிலுள்ள வளமான முதலீட்டு முகாமைத்துவ உபாயங்கள் மற்றும் 134 பில்லியன் ரூபா பெறுமதியான ஆயுள் காப்புறுதியுடன் தமது காப்புறுதி உரிமையா ளர்களுக்கு உயர்ந்த சலுகைகளையும் பெற்றுக்கொ டுக்கின்றது. அத்துடன் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தற்பொழுது 212 பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை தன்னகத்தேக் கொண்டுள்ளது.

2020ஆம் ஆண்டினுள் தமது நிறுவனத்தின் வியாபார உத்திகளை இலகுவாக வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக ஒன்லைன் வாயிலான கொடுப்பனவு செலுத்தல், வட்டியற்ற இலகு தவணைக்கொடுப்பனவு முறை, ஒன்லைன் ஊடாக ஆயுள் காப்புறுதி ஆலோசனைப்பத்திரத்தை ஒப்படைத்தல் என்பவற்றை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியது. அத்துடன் வாடிக்கையாளர்களது மாற்றமடையக்கூடிய தேவைகளுக்கேற்ப உருவாக்கப்பட்ட ஏராளமான ஆயுள் காப்புறுதித்திட்டங்கள் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸில் உள்ளன. நிறுவனத்தின் ஆரம்பம் முதல் ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ், இலங்கை வாழ் மக்களுக்கு அதன் செயற்பாட்டை உணர வைப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் பரம்பரை பரம்பரை யாக மக்கள் நம்பிக்கையை வென்றதை உறுதிப் படுத்தும் வகையில் பல்வேறு விருதுகளை வென்று குவித்துள்ளது. 2021ஆம் ஆண்டு ப்ரேன்ட் பினான்ஸினால் நடத்தப்படும் “அதிகளவு மக்களால் நம்பப்படும் காப்புறுதி நாமம்” என்கின்ற விருதினை தொடர்ந்தும் நான்காவது தடவையாக வென்றுள்ளது. வாடிக்கையாளர்களது தேவைகளை நன்குணர்ந்து அதற்காக செயற்படக்கூடிய ஒரு காப்புறுதி நிறுவனமான ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் காணப்படுவதோடு, காலத்திற்கேற்ப காப்பு றுதித் திட்டங்களையும், சேவைகளையும் அறிமு கப்படுத்தி வருகின்றது. நாடு முழுவதும் 158 கிளை வலையமைப்பைக் கொண்டு தமது பரந்து பட்ட சேவையை வழங்கிவருகின்றது.


NLB NATIONAL LOTTERIES

**கொவிசெத**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2787 சீட்டிழுப்பு திகதி: 01.07.2021

ஆங்கில எழுத்து: N

வெற்றி இலக்கங்கள்: 09 10 27 59

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 192 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 418 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 10321 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 6776 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 169410 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 30976 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 218,099

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 6,712,860.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,722,840.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk



NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம்: 4492 உத்தியோகபூர்வ முடிவுகள்

**மஹஜன சம்பத**

திகதி: 01.07.2021

வெற்றி எழுத்து: H வெற்றி இலக்கங்கள்: 7 6 5 0 1 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 7 | 6 | 5 | 0 | 1 | 5 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 6 | 5 | 0 | 1 | 5 | ரூபா 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 5 | 0 | 1 | 5 | ரூபா 10,000/- | 119 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 0 | 1 | 5 | ரூபா 1,000/- | 1125 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 1 | 5 | ரூபா 100/- | 11132 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 5 | ரூபா 20/- | 110699 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 7 | 6 | 5 | 0 | 1 | ■ | ரூபா 10,000/- | 14 |
| 8ஆம் பரிசு | ■ | 7 | 6 | 5 | 0 | ■ | ■ | ரூபா 1,000/- | 116 |
| 9ஆம் பரிசு | ■ | 7 | 6 | 5 | ■ | ■ | ■ | ரூபா 100/- | 1107 |
| 10ஆம் பரிசு | ■ | 7 | 6 | ■ | ■ | ■ | ■ | ரூபா 50/- | 11035 |
| 11ஆம் பரிசு | H | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா 20/- | 44216 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,444,950.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,864,648.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

www.nlb.lk

# தனியார் கல்வி நிலையங்கள் விதிமுறைகளை மீறினால் நிறுவனங்களின் வியாபார உரிமம் இரத்துச்செய்யப்படும்

## கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப்

(பாறுக் ஷிஹான்)

தனியார் கல்வி நிலையங்கள் இணையவழி கற்கை முறைகளை படிப்பிக்க கடைப்பிடிப்பதாக அறியக்கிடைத்தது. இரகசியமான மீறல்கள் கட்டாயம் இருக்கும். அவ்வாறு மீறப்படுமாயின் இவர்களது வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஸ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர கேட்போர் கூடத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் தற்போது திறக்கப்பட்டுள்ள சந்தைகளில் பூரணமாக கொரோனா சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்று கூறுவது



போலியான குற்றச்சாட்டாகும். முகக்கவசம் அணிவது ஒவ்வொருவரதும் கடமையாகும். முகக்கவசத்தை எம்மால் எல்லோருக்கும் கொடுக்கவும் முடியாது.

முகக்கவசம் இல்லாது வருபவர்களை பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் கைதுசெய்வார்கள். இதுதவிர, சந்தையில் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளோம். எனவே, சுகாதார வழிமுறைகளை பின்பற்றவேண்டியது மக்களின் பொறுப்பாகும். நாங்கள் இதற்காக ஒவ்வொருவரையும் பார்த்து பரிசோதித்துகொண்டிருக்க முடியாது. சுகாதார நடைமுறைகளை சுகாதாரத்துறையினர்தான் கண்காணிக்க வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களை பொறுத்த மட்டில் சூம் தொழில்நுட்பத்தில்தான் படிப்பிப்பதாக அறியக்கிடைத்தது. இரகசியமான மீறல்கள் கட்டாயம் இருக்கும். அவ்வாறு மீறப்படுமாயின் இவர்களது வியாபார உரிமம் இரத்துச்செய்யப்படும் - என்றார்.

# கிண்ணியாவில் வீதிகளில் பயணிப்போருக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பு





(கியாஸ் ஷாபி)

கிண்ணியா சுகாதாரப் பிரிவில் வீதிகளில் பயணிப்போருக்கு நேற்று எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கிண்ணியா பிரதான வீதியால் போக்குவரத்து செய்தோர் எழுமாறாக எடுக்கப்பட்டு, இந்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தினமும் 50 பேருக்கு வெவ்வேறு இடங்களில் இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்காக எங்களது சுகாதாரப் பிரிவினருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

# அத்தியாவசிய தேவைகளுக்காக வீட்டிலிருந்து இருவர் மாத்திரம் வெளியில் செல்ல அனுமதி

## களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக கூட்டத்தில் தீர்மானம்

(துறைநீலாவணை நிருபர்)



மண்முனை, தென்எருவில்பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச கொவிட் செயலணியின் கூட்டமானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட செயலகத்தினால் பல்வேறு தீர்மானங்கள் வெளியிடப்பட்டன. அந்தவகையில் அத்தியாவசிய தேவைகளுக்காக வீட்டிலிருந்து இருவர் மட்டுமே வெளியே செல்லவேண்டும், சிகையலங்கார நிலையங்கள் திறக்கப்படலாம் ஆனால், ஒரு தடவைக்கு ஒருவர் மாத்திரமே உள் அனுமதிக்கவேண்டும், கடைகள் சுகாதார நடைமுறையுடன் திறக்கப்பட்டு பின்னிரவு 6 – 9 மணிக்குள் மூடப்பட வேண்டும், ஆலய உற்சவங்கள் மற்றும் திருவிழாக்கள் முற்றாக தடை, உணவகங்கள் திறக்கப்படலாம், பொதுமக்கள் உள்ளிருந்து சாப்பிடுவதற்கு தடை போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய திணைக்களங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மரண வீடுகளில் பொதுமக்கள் கூடுவதை கட்டுப்படுத்துவதில் கிராம உத்தியோகத்தர்கள் அதிகளவான கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தங்களின் கருத்துகளை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை; கட்டுப்படுத்த மாநகர முதல்வர் விசேட நடவடிக்கை முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பகுதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருக்கின்றது. எதிர்காலத்தில் பல சுற்றிவளைப்புகள் இப்பகுதியில் இடம்பெறும். இதில் எதிர்பாராத முறையில் பலரும் பிரச்சினைக்கு உள்ளாவார்கள். அவர்கள் தொடர்பாக அனைத்து தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன. இத்தகவல்களை கொண்டு இப்பிராந்தியத்திலுள்ள பொலிஸார் உட்பட மற்றவர்களை பயன்படுத்தாது வெளிப் பிராந்தியத்திலிருந்து வருகின்றவர்களை கொண்டு இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஸ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர கேட்போர் கூடத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

கல்முனை பகுதியில் போதைப்பொருள் பாவனை பரவல் அதிகரித்திருக்கின்றது. அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்காக விழிப்பூட்டல்களை நாம் மேற்கொண்டுள்ளோம். அதனை கட்டுப்படுத்த வேண்டியவர்களே அதற்கு உதவியாக இருக்கின்றார்கள் என்பதை இவ்விடத்தில் முக்கியமாக கூற விரும்புகின்றேன். கட்டுப்படுத்தவேண்டியவர்களே அதற்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுக்குரிய பங்கையும் இலஞ்சத்தையும் பெற்றுக்கொண்டு கடமையை நிறைவேற்றாது இருக்கின்றார்கள். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் சமூகத்திலுள்ள முக்கியமானவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

இவர்களுக்கு எதிராக உரிய துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருக்கின்றனர். இன்று சமூக மட்டத்தில் படிப்படியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், புத்திஜீவிகள் எல்லோருக்கும் இது பிரச்சினையாக வந்துவிட்டது. இப்பிரச்சினையை ஒவ்வொரு பெற்றோர்களும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் பல சுற்றிவளைப்புகள் இப்பகுதியில் இடம்பெறும். இதில் எதிர்பாராத முறையில் பலரும் பிரச்சினைக்கு உள்ளாவார்கள். அவர்கள் தொடர்பாக அனைத்து தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன. இத்தகவல்களைக்கொண்டு இப்பிராந்தியத்திலுள்ள பொலிஸார் உட்பட மற்றவர்களை பயன்படுத்தாது வெளிப்பிராந்தியத்திலிருந்து வருகின்றவர்களை கொண்டு இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என கூறினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வடகிழக்கில் உள்ளூராட்சி சபை சுகாதார பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க கோரிக்கை

## அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து

(கே.எ.ஹமிட்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றுகின்ற தற்காலிக சுகாதார ஊழியர்களுக்கு தற்போதைய கொரோனா நெருக்கடி சூழலை கருத்திற்கொண்டு அரசாங்கம் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கவேண்டும் - என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

இத்தொழிற்சங்கத்தின் தலைவரும், மூத்த தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கடிதம் மூலம் பொதுச் சேவைகள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனுக்கு இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றுகின்ற ஆயிரக்கணக்கான சுகாதார ஊழியர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அரசாங்க சுற்றுநிருபம் இதற்கு தடையாக உள்ளது.

ஆயினும் இவர்களின் சேவைகள் மிகவும் மகத்தானவை. குறிப்பாக, தற்போதைய கொரோனா உயிர்க்கொல்லி தொற்றுநோய் பரம்பல் சூழலில் உயிரைப் பணயம் வைத்து சேவையாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இவர்கள் தற்காலிக ஊழியர்கள் என்பதால் கடமை சார்ந்து உயிர் துறக்க நேரினும்கூட இவர்களுக்கு அரசாங்கத்தின் நஷ்டஈடு கிடைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

இந்நிலையில், அரசாங்கம் இவர்களின் மகத்தான சேவைக்குரிய மரியாதையையும், உயர்ந்த கண்ணியத்தையும் வழங்கவேண்டும் என்று கோருகின்றோம்.

தற்போதைய கொரோனா நெருக்கடி சூழலில் இவர்களின் உன்னதமான சேவையை அங்கீகரித்து விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவை அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் கண்டிப்பாக கோருகின்றோம். எமது வேண்டுகோளை ஏற்று இவர்களுக்கு இடர் கால விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றுமாறு அமைச்சரை ஊக்குவிக்கின்றோம்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 64 பேருக்கு 15 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளைக்கொண்ட 64 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு எழுத்துமூலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் நேற்று உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், 58 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 58 பேருடன் குண்டுத்தாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களைக்கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார் சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரிக்கு பிரயாணம் செய்ய பஸ் ஆசனம் பதிவுசெய்த சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களைக்கொண்ட 69 பேரின் வழக்குகள் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்ட 5 பேரும் நீதிமன்றிற்கு அழைக்கப்படாத நிலையில் ஏனைய 64 பேரும் வெவ்வேறு மாவட்டத்திலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக அழைத்து வரமுடியாத காரணத்தினாலும் கைதிகளுக்கு கொரோனா தொற்று இருப்பதனால் அவர்களை காணொளி மூலம் காட்டமுடியாத காரணத்தினால் அவர்களுக்கு எழுத்துமூலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் 64 பேரையும் எதிர்வரும் 15 திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய வங்கிச் சங்கம், சமூகநலன் மேம்பாட்டை இலக்காகக்கொண்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அடிப்படை தேவையாகக் காணப்படுகின்ற கண் சத்திரசிகிச்சை கூடத்திற்கு 07 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம். ஹனிபா தலைமையிலான நிர்வாகத்தினரிடம் கையளித்தது.

# கிண்ணியாவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் கைது

(கியாஸ் ஷாபி)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டல் காடு, மணல் ஆறு, நடுஊற்று ஆகிய பிரதேசங்களில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மணல்



அகழ்வில் ஈடுபட்டிருந்த அறுவர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் - என கிண்ணியா பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதில் மூன்று நபர்கள் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக்கொண்டு சென்றபோது, கைதுசெய்யப்பட்டதோடு, மற்றைய மூவரும் மணல் அகழ்ந்துகொண்டிருக்கும்போது கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களையடுத்து, கிண்ணியா பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் மூலம் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் நேற்று சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# அமைச்சர் வியாழேந்திரன் வீட்டின் சிசிரிவி காணொளி பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பரிசோதனைக்கு அனுப்பிவைப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வீட்டிற்கு முன்னால் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவரை சுட்டுக்கொலைசெய்த சம்பவம் தொடர்பாக அமைச்சரின் வீட்டில் பொருத்தப்பட்ட சிசிரிவி கெமரா வன்தட்டு மொரட்டுவ அரச இரசாயனவியல் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சரின் வீட்டிக்கு முன்னால் கடந்த மாதம் 21ஆம் திகதி அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்த சம்பவம் இடம்பெற்றது. இதில் மகாலிங்கம் பாலேந்திரன் என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தின் முக்கிய தடய பொருளாக அமைச்சரின் வீட்டில் பொருத்தப்பட்ட சிசிரிவி கெமராவின் பாகமான வன்தட்டு சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒரு மாத காலத்திற்கு மேலாக பழுதடைந்து கழற்றப்பட்டு, திருத்த கொடுக்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து அந்த சிசிரிவி கெமராவின் பாகமான வன்தட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து இதனை மொரட்டுவவிலுள்ள களனி மற்றும் இலத்திரனியல் தொடர்பான அரச இரசாயனவியல் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் புனரமைக்கப்படும் விமான நிலையத்துக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கள விஜயம்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு விமான நிலையம் அபிவிருத்தி செய்வது தொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கள விஜயமொன்றை மேற்கொண்டார்.

மட்டக்களப்பு விமான நிலையம் அபிவிருத்திசெய்வது தொடர்பாக நேற்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கள விஜயமொன்றை மேற்கொண்டார். இராஜாங்க அமைச்சர் டீ.வீ.சனகா மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட்ட பின் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வேண்டுகோளுக்கமைய இங்கு வந்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும்போது விமான நிலையத்தின் தேவைப்பாடு உள்ளது. எனவே, விமானநிலையத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலத்தில் இடம்பெற்றதற்கு பொறுப்புக் கூறமுடியாது. இந்த விமானநிலையம் பல வருடங்களுக்கு முன் சர்வதேச விமான நிலையங்களாக அபிவிருத்திசெய்ய வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஆனால், அந்த அளவிற்கு அபிவிருத்திசெய்யப்படவில்லை. உள்ளூர் விமான சேவையும் அதைபோலத்தான். எங்களால் இதனை இரண்டுவருடத்தில் செயற்படுத்தமுடியும்

இதற்கான திட்டமிடல் தயாரிக்கப்பட்டு அதேபோன்று உள்ளூர் விமானசேவை தொடர்பாக திட்டமிடல் தயாரிக்கவேண்டும் அதன் பின் முன்னுரிமைப்படுத்தும் பட்டியலை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் சுற்றுலாத்துறைக்கு பிரசித்திபெற்ற இடம். சுற்றுலாத்துறையில் வரும் வருமானம் முழுநாட்டுக்கும் பயன்படும்படியாக அது செயற்படுத்தப்படவேண்டும். எனவே, நீண்டகாலமாக சுற்றுலாப் பயணிகள் தங்கி நிற்கக்கூடியதான சூழலை அமைக்கவேண்டும் - என்றார்.

# இந்து ஆலயங்களில் 05 பேருடன் வழிபாடுகளில் ஈடுபட அனுமதி

(ந.குகதர்சன்)



இந்து ஆலயங்களில் வழக்கமான பூஜைகள், பிரார்த்தனைகள் மற்றும் ஆலயத் திருவிழாக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கொவிட்-19 தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் மாவட்ட செயலக ஊடகப்பிரிவிற்கு தெரிவித்துள்ளார்.

கொவிட் மூன்றாவது அலை மிகவும் உக்கிரமடைந்து காணப்பட்ட காலப்பகுதியில் சுகாதார அமைச்சினால் இந்து ஆலயங்களில் நிகழ்த்தப்படும் வழமையான பூஜைகள், பிரார்த்தனைகள் மற்றும் திருவிழாக்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய கொவிட் நிலையினை கருத்திற்கொண்டு இந்து ஆலயங்களில் வழமையாக இடம்பெறும் நித்திய பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகளை அதிகபட்சமாக ஐந்து பேருடன் நடத்தலாமென்றும், வருடாந்த திருவிழாக்களை பொதுமக்களது பங்குபற்றுதலுடன் நடத்த முடியாதெனவும், அதிகபட்சமாக 15 ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் குறித்த பகுதிக்கான சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடன் நடத்துவதற்கு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அனுமதியளித்துள்ளார் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களின் காணியை சட்டத்தரணியொருவர் அபகரிக்க முயற்சி; திருகோணமலை – பன்குளம் பகுதியில் பிரதேச மக்கள் எதிர்ப்பு

(அப்துல்சலாம் யாசீம்)





யுத்த காலத்தின்போது விட்டுச்சென்ற பொதுமக்களின் காணிகளை சட்டத்தரணியொருவர் அபகரிக்க முயன்ற சம்பவமொன்று திருகோணமலை - பன்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பன்குளம் பிள்ளையார் கோயிலுக்கு எதிரிலுள்ள காணியிலேயே நேற்று முன்தினம் (30) இந்த அபகரிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

1968ஆம் ஆண்டு பன்குளம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் மீள்குடியேற்றப்பட்ட நிலையில், குறித்த காணி உரிமையாளர்கள் வாழ்ந்து வந்ததாகவும் இதனையடுத்து அவர் உயிரிழந்த நிலையில், அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் வசித்து வந்ததாகவும் அக்கிராமத்தில் வசித்து வரும் கதிர்வேல் என்பவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் வசித்து வரும் பிரபல சட்டத்தரணியொருவருக்கு பிரதேசத்தில் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இருப்பதாகவும், இதேவேளை பிள்ளையார் கோயிலுக்கு எதிரிலுள்ள காணியை தன்னுடைய காணி என்று தெரிவித்து அவர் காணிக்குள் வருகை தந்தபோது அக்கிராம மக்கள் தங்களுடைய எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த இடத்திற்கு விஜயம் செய்து காணி தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும், வழக்கில் முடிவு கிடைக்கும் வரை எவரும் செல்லவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில். குறித்த காணி தொடர்பிலான அத்தாட்சிகள் தன்னிடம் இருப்பதாகவும் சட்டத்தரணி இதன்போது பொலிஸாரிடம் குறிப்பிட்டார்.

ஆனாலும், கிராம மக்கள் அக்காணி சட்டத்தரணிக்கு சொந்தமற்றதெனவும், இது பொதுமக்களுக்குரிய காணியெனவும், சட்டத்தரணியை நுழைய வேண்டாமெனவும் பொதுமக்கள் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் - செக் குடியரசின் தூதுவர் லோஹித சமரவிக்ரம நட்புறவு சந்திப்பு



இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மற்றும் செக் குடியரசின் (Czech Republic) தூதுவர் வைத்தியர் லோஹித சமரவிக்ரம (Hon. Counsulate of the Czech Republic-Srilanka) ஆகியோருக்கிடையிலான நட்புறவு சந்திப்பொன்று பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் முன்னேடுக்கப்படுவதற்காக கல்வி, சுகாதார, பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான யோசனைகள் தெரிவிக்கப்பட்டதுடன், இதன்போது அமைச்சரினால் செக் குடியரசினூடாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தினூடாகவும் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சரினால் செக் குடியரசின் தூதுவருக்கு முன்வைக்கப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி யோசனைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக செக் நாட்டின் தூதுவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், லோஹித சமரவிக்ரம, அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹரிச டி சில்வா, அமைச்சரின் ஆலோசகர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு-கொக்குவில் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிப்பு

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட கொக்குவில் எல்லை வீதி - முதலாம் குறுக்கு வீதிக்கு தாரிடும் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபையின் கொக்குவில் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர முதல்வர் எஸ்.சரவணபவன், மாநகர உறுப்பினர்கள், பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொக்குவில் எல்லை வீதி - முதலாம் குறுக்கு வீதியின் புனரமைப்புக்கு 2020ஆம் ஆண்டு பாதீட்டில் முன்மொழியப்பட்டு, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், ஆணையாளரின் இழுத்தடிப்புக்கு மத்தியில் தற்போது தாரிடல் வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாநகர சபையின் கொக்குவில் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தெரிவித்தார்.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறை மாவட்ட மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு





(பாலமுனை நிருபர்)

கொவிட் தொற்றின் காரணமாக சிரமப்படும் மூவின மக்களுக்கும் உதவும் முகமாக, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த நிவாரண நிதியத்தின் மூலம் உலருணவுப் பொதிகள் வழங்கும் திட்டம், அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், கொரோனா தொற்றின் அச்சுறுத்தலினால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பயணத்தடை காரணமாக பாலமுனை கிராமத்தில் வருமானத்தை இழந்து நிர்க்கதிக்குள்ளான பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த மற்றும் வாழ்வாதாரத்தை இழந்த சுமார் 60 குடும்பங்களுக்கு உலருணவு பொருட்களை வழங்கிவைக்கும் நிகழ்வு பாலமுனையில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை அமைப்பாளர் பி.எம்.ஹீஸையிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.பி.பதுறுதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் அனர்த்த நிவாரணக் குழுவின் பாலமுனை இணைப்பாளர் கவிஞர் எஸ்.எச்.ஏ.முபீத், உறுப்பினர்களான எம்.எம்.நியாஸ், எச்.எம்.முஷாரப், ஐ.ஏ.ஹாதி, மௌலவி எம்.எச்.எம்.ஹாபில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் புதிதாக கொரோனா சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு



(கே.ஏ.ஹமீட்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் விடுதி நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் நேற்று முன்தினம் (30) திறந்துவைக்கப்பட்டது.

இதனால் இப்பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களுக்கு நிந்தவூர் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெறும் வசதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஏற்படுத்தித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி ஷகிலா இஸ்ஸதீன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி.சுகுணன், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூசா நக்பர், நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் பாருக் இப்றாஹீம் மற்றும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





விருதுகளின் வகை

- வருடத்திற்கான சிறந்த ஊடகவியலாளர் மேர்வின் டி சில்வா விருது*
- வருடத்திற்கான சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த தனித்துவ செய்திக்கான விருது*
- வருடத்திற்கான இளம் செய்தியாளர் டென்சில் பீரிஸ் விருது*
- வருடத்திற்கான சிறந்த சுகாதாரம் மற்றும் மருத்துவ கட்டுரையாளர்**
- வருடத்திற்கான சிறந்த சூழலியல் அறிக்கையாளர்**
- வருடத்திற்கான சிறந்த விளையாட்டு செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறப்பாக வடிமைக்கப்பட்ட பத்திரிகை*
- வருடத்திற்கான சிறந்த வணிக மற்றும் நிதியியல் செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறந்த கேலிச்சித்திரம்**
- விஷேட சூழ்நிலைகளின் போது அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது.**
- வருடத்திற்கான சிறந்த புகைப்பட ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த பத்தி எழுத்தாளர் பீ.ஏ.சிறிவர்த்தன விருது.**
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி எழுதப்பட்ட சிறந்த செய்தி / விவரணக்கட்டுரை**
- சமூக பிரச்சினைகள் தொடர்பான சிறந்த அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது.**
- வருடத்திற்கான சிறந்த விவரணக்கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது.**
- சிறந்த செய்தி இணையத்தளம்.**

* எந்தமொழியாயினும் ஒரே விருது
** சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருது

பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைக்குச் சொந்தமான இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பவற்றின் பிரதி குறித்த பத்திரிகை ஆசிரியரால் அல்லது இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : வியாழக்கிழமை - ஜூலை 15, 2021

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான விருதுவழங்கல் நிகழ்வு நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

வெற்றியாளர்கள் சுயாதீன நடுவர் குழாம் ஒன்றால் தெரிவு செய்யப்படுவர்

பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய அறிவுறுத்தல் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தை இல.96 , பேர்னாட் சொய்சா மாவத்தை, (கிருளவீதி), கொழும்பு - 5. முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.slpi.lk அல்லது www.pccsl.lk இணையத்தளங்களில் இருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யலாம்

ஒழுங்கமைப்பு : இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

TEGOSL

# கிண்ணியா தள வைத்தியசாலையில் தாதியர் பணிப்பகிஷ்கரிப்பு




(கியாஸ் ஷாபி)

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர் நேற்று (01) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை தாதிமார் சங்கம், பொது வைத்திய தாதிகள் சங்கம் முதலான சங்கங்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டன.

இதன்போது, தாதியர் கருத்து தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையில் ஏற்பட்டிருக்கின்ற குறைகளை நிவர்த்திசெய்யக் கோரி பல கட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் தீர்வு எட்டப்படாத நிலையில், சுகவீன விடுமுறையை ஆரம்பித்திருக்கின்றோம்.

தாதியருக்கும், மக்களுக்கும் பாதுகாப்பை வழங்குவதற்காக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். கொவிட்-19 காலத்தில் வைத்தியர்களை விட தாதியர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பதவி உயர்வு வழங்கப்படவில்லை. பாதுகாப்பு வழங்கப்படவில்லை மற்றும் விடுமுறை வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வைத்திய அத்தியட்சகர் ஏ.எம்.எம்.ஜிப்ரி, தாதியர் சங்கத் தலைவர் எனக்கு கடிதம் சமர்ப்பித்தார். தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக கூறினார்.

எங்களது வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் தாதியர் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் இடர்பாடுகள் ஏற்படவில்லை என்று தெரிவித்தார்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் இதுவரை 850 உடல்கள் நல்லடக்கம்

(மீராவோடை நிருபர் - எச்.எம்.எம்.பர்ஸான்)



கொரோனா தொற்றின் மூன்றாவது அலையின்போது தொற்றினால் மரணமடைந்த நபர்களின் உடல்கள் நல்லடக்கத்துக்காக நாளொன்றுக்கு 15 – 20 வரை வருகின்றன என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜனாஸா நல்லடக்கப் பணிகள் தற்போதுவரை ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்று வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஜனாஸா நல்லடக்கப் பணிகள் இடம்பெறும் இடத்தில் அவசியமென காணப்பட்ட முக்கிய தேவைகள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

தற்போது சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வரும் மஜ்மா நகர் பகுதியில் இடப்பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் தொடர்ந்தும் உடல்களை நல்லடக்கம் செய்ய கிரான் பிரதேச செயலாளர் மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபை ஆகிய பிரதேச எல்லைக்குட்பட்ட சாப்பமடு எனும் பகுதியை அடையாளப்படுத்தி அதில் நல்லடக்கம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் நேற்று (1) பிற்பகல் 2.30 மணி வரை 850 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.



அதில் 806 முஸ்லிம்களின் உடல்களும், 17 கிறிஸ்தவர்களின் உடல்களும், 16 இந்துக்களின் உடல்களும், 9 பௌத்தர்களின் உடல்களும் மற்றும் 2 வெளிநாட்டு பிரஜைகளின் உடல்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், நேற்று மாலை நல்லடக்கம் செய்வதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து உடல்கள் வருவதாகவும் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

# நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பிரிண்டர் வழங்கிவைப்பு

(கே.ஏ.ஹமிட்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான விமலவீர திசாநாயக்கவினால் நிந்தவூர் சுகாதார



வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பல் செயற்பாட்டு அச்சு இயந்திரம் (Multi Function Printer) வழங்கி வைக்கப்பட்டது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிந்தவூர் பிரதேச இளைஞர் அமைப்பாளரும், வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவின் நிந்தவூர் பிரதேச இணைப்பாளரும், கிழக்கு மாகாண கொவிட் தடுப்பு செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான ஆதம் பாசித் ஹுஸ்னி, சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூசா நக்பரிடம் இந்த பிரிண்டர் இயந்திரத்தை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# மாகாணசபை முறைமையை நீக்கிவிட்டு அதிகாரத்தை மத்திய மயப்படுத்தவே அரசாங்கம் விரும்புகிறது

## கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அன்ஷார் மௌலானா

(வீரமுனை நிருபர்)

விடுதலைப்புலிகள் ஏற்க மறுத்த ஒன்றை ஒரு வகையாக திணித்த விடயமே மாகாண சபை முறைமை என கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான அன்ஷார் மௌலானா தெரிவித்தார்.

மாகாண சபை முறைமை தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபை முறைமையினை தமிழீழ விடுதலைப் புலிகள் சுமுகமாக ஏற்று அதனை சமாளித்து வந்திருந்தால் இன்றைக்கு தமிழ்நாட்டைப் போல் மொழி மாநிலமாக வடக்கு-கிழக்கு இருந்திருக்கும். ஆனால், விடுதலைப்புலிகள் வேறு கோணத்தில் பார்த்ததால் சிதைந்துவிட்டது. அதிகாரப் பரவலாக்கம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டால், மாகாண சபை முறைமை நிச்சயம் இருக்கவேண்டும்.

நான் எப்பொழுதும் அதிகாரப் பரவலுக்கு ஆதரவானவன். அதிலும் தமிழ்த்தேசிய போராட்டத்திற்கு மதிப்புக்கொடுத்து அரசியல் வழிமுறையில் வந்தவன். என்னுடைய சகோதரர் மசூர் மௌலானா தமிழரசுக்கட்சியின் உறுப்பினர், செனட்டர்.

மருதமுனை மண்ணில் கால்தடம் பதிக்காத தமிழ்த் தலைவர்கள் கிடையாது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம், அமிர்தலிங்கத்தின் துணைவி மங்கையற்கரசி,



இராஜதுரை, தொண்டமான் என இப்படி மருதமுனைக்கும் தமிழ் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

ஆனால், மாகாணசபை முறைமை கோட்டாபய அரசுக்கு வேண்டாப் பொண்டாட்டியாக இருக்கிறது. வேண்டாப் பொண்டாட்டி கால் பட்டாலும் குற்றம், கை பட்டாலும் குற்றம். அரசின் அதிகாரத்தை மத்திய மயப்படுத்தவே அரசாங்கம் விரும்புகிறது. ஆனால், மாகாண சபை முறைமையை நீக்குவது இலேசான காரியமல்ல.

மாகாணசபை முறைமை வெள்ளை யானை என்று கூறப்படுகிறது. ஒரு கையால் கொடுத்து ஒரு கையால் எடுக்கிற அம்சம். 1990களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அரசாங்கத்தில், ரணில் விக்கிரமசிங்கவினால் மாகாண சபைக்குள்ளிருந்த பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக உருவாக்கம் பெற்றன. தற்போது கிழக்கு மாகாணத்தில் 49 பாடசாலைகள், ஆளுநர் மற்றும் அதிகாரிகளின் தீவிர செயற்பாடுகளால் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. இப்பொழுது தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டவை 1990களில் உருவாக்கப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கு நிகராகுமா என்ற கேள்வியும் நிலவுகிறது. மாகாணசபை முறைமையை தொடர்ந்தும் கோட்டாபய அரசு வலுப்படுத்தும் என்று நினைக்கவில்லை. வலுப்படுத்தாமல் விட்டாலும் பரவாயில்லை. இலங்கையின் அரசியல் ஆட்சி நிர்வாகங்களை இலங்கையர்களே தீர்மானிப்பதில்லை. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கேந்திரத்தை உணர்ந்த, இந்தியாவை பகைத்துக்கொண்டு இலங்கையின் அரசியல் வாழ்வு இல்லை. அந்த அடிப்படையில் சிங்கள மக்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாகாணசபை முறைமை நீடிக்கலாம். ஆனால், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடுதலான அதிகாரங்களைக் கொடுத்து சக்தி மிக்க நிறுவனங்களாக மாற்றுமிடத்து சுயாட்சி சாதாரண அடிமட்ட மக்களுக்கு வந்து சேரும் என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சமுர்த்தி பயனாளிகளுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு

(வி.சுகிர்தகுமார்)

இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சமுர்த்தி பயனாளிகளின் நன்மைகருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைவாக சமுர்த்தி



சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கான வீடுகளை மக்களின் பங்களிப்போடு அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நாவற்காடு பிரதேசத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்ட வீடானது ஜூலை மாதம் 01ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 7ஆம் திகதி வரையாக அமுல்படுத்தப்பட்டுள்ள சௌபாக்கியா வாரத்திற்கு அமைவாக நேற்று (01) திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் நேற்று இடம்பெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் க.பிரகஸ்பதி கலந்துகொண்டு வீட்டினைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் , ஆலையடிவேம்பு தெற்கு வலய முகாமையாளர் கே.அசோக்குமார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்



க.ஜெயந்தி, வி.சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் இந்து இளைஞர் பேரவையால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாட்டு விதிக்கப்பட்டிருந்த வேளை, அன்றாட உணவுக்காக சிரமப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பேரவையின் தலைவரும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன்




அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம், இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவியை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு வழங்கிவைத்தது.

இதனடிப்படையில் கிரான்குளம், செட்டி பாளையம், களுவன்கேணி உட்பட்ட கிராமங் களுக்கு பேரவையினால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பேரவையின் தலைவரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் பேரவையின் செயலாளர் சா.மதிசுதன், பேரவையின் பொருளாளர் ந.புவனசுந்தரம், பேரவையின் இணைப்பாளர் ச.விஜிதரன் ஆகியோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிவைத்தனர்.

# காரைதீவில் முச்சக்கரவண்டி விபத்து

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை - அக்கரைப்பற்று பிரதான



வீதியில் காரைதீவு பொதுச்சந்தைக்கு எதிரில் வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமல் முச்சக்கரவண்டி வீதியைவிட்டு விலகி வயல் காணிக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இவ்விபத்து நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் கடந்த வாரம் செங்கற்களை ஏற்றிவந்த லொறியொன்றும் இவ்வாறு விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுவதியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான பஸ் சாரதி – நடத்துநருக்கு 06 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவப்பொத்தானை பிரதேசத்தில் 19 வயதுடைய இளம் யுவதியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தனியார் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஹொரவப்பொத்தானை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் கெப்பித்திக்கொல்லாவ நீதிமன்ற நீதவான் மாலிந்த ஹர்ஷன டி சில்வா முன்னிலையில் நேற்று (01) ஆஜர்படுத்தியபோதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஹொரவப்பொத்தானை - அனுராதபுரம் பிரதான வீதி சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் எனவும் கல்பே பகுதியைச் சேர்ந்த 43 வயது மற்றும் நானுமில்லாவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது - ஹொரவப்பொத்தானை - கம்ம கஹவெவ கிராமத்தில் வசித்து வரும் 19 வயதுடைய திருமணமாகாத இளம் யுவதி ஹொரவப்பொத்தானையிலுள்ள ஒரு ஜவுளிக்கடையில் பணிபுரிந்து, கடந்த 28 ஆம் திகதி மாலை 5.45 மணியளவில் பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு சென்றுள்ளதாதாகவும், அந்த நேரத்தில் பஸ்ஸில் தனியாக இருந்ததாகவும், நடத்துனர் பஸ்ஸின் கதவுகளை மூடிவிட்டு வேறு பயணிகளை அழைத்துச் செல்லாமல் ஹொரவப்பொத்தானை - அனுராதபுரம் வீதியிலுள்ள நானுமில்லாவ வயல் பிரதேசத்துக்கு சென்றதாகவும் பாதிக்கப்பட்ட யுவதி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.


இதேவேளை குறித்த சந்தேக நபர்கள் பஸ்ஸில் இருந்ததாகவும் அதேநேரம் சம்பவ இடத்தில் மற்றுமொரு பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனருடன் குடித்துக் கொண்டிருந்ததாகவும், அவர்கள் தங்களைப் பார்க்க முடியாதபடி பஸ்ஸின் முன் கதவை மூடியிருந்ததாகவும், திறக்கத் முயன்ற போதிலும் சந்தேக நபர்கள் அவர்களைத் துரத்தியதாகவும் யுவதி பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இளம் யுவதி கடந்த 29ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட யுவதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் கெப்பித்திக்கொல்லாவ நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சிரமங்களுடன் பணியாற்றினால் அதன் பலன் எப்போதேனும் ஒரு நாள் நாட்டிற்கு உரித்தாகும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு







சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றினால் அதன் பிரதிபலன் எப்போதேனும் ஒருநாள் இந்நாட்டிற்கு உரித்தாகும் என்ற நம்பிக்கையுடன் பணியாற்றுவோம் - என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 500 கிராமங்களை "சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்களாக" அபிவிருத்திசெய்யும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதற்கமைய நுவரெலியா மந்தாரம்நுவர போஞ்சி விதை மற்றும் கோப்பி உற்பத்திக் கிராமம், பேராதனை உடுஈரியகொல்ல மலர் உற்பத்திக் கிராமம் மற்றும் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், பிரான்பட்டிருப்பு நல்லெண்ணெய் உற்பத்திக் கிராமம் என்பன "சௌபாக்கியா உற்பத்தி கிராமம்" என பெயரிடப்பட்டு அதற்கான டிஜிட்டல் நினைவுப் பலகைகள் பிரதமரின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டன.

குருநாகல் கனேவத்த கும்புக்கெடே கிராமம் மற்றும் கம்பஹா மீரிகம கீனதெனிய கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட "சௌபாக்கியா செனஹசே நவாதென" வீடுகள் இந்நிகழ்வின்போது அவ்வீடுகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

மக்களுக்கு செயற்றிறனான மற்றும் துரித சேவையை வழங்குவதற்கு சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் நேற்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதிவரை "சௌபாக்கியா – சமுர்த்தி வாரம்" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது."சௌபாக்கியா உற்பத்திக் கிராமம்" ஆரம்ப நிகழ்வில் பிரதமர் மேலும் கூறியதாவது,

"நமது நாட்டின் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றம் குறித்து நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறான உலகளாவிய தொற்று நிலைமைக்கு மத்தியில் இம்மக்களுக்காக ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் எவ்வாறு பொறுப்பை நிறைவேற்றுவது என்பது குறித்து சிந்தித்தோம்.

கொடுப்பனவுகளை வழங்கி இம்மக்களை ஒரே இடத்தில் இருப்பதை மாற்றவேண்டும் என நாம் விரும்பினோம்.

சௌபாக்கிய சமுர்த்தி வாரம் அதற்கான மற்றுமொரு வாய்ப்பாக அமையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி திட்டத்திற்கு தற்போது 27 ஆண்டுகளாகின்றன. வறுமைக்கோட்டிலுள்ள மக்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்தும் நோக்கிலேயே சமுர்த்தி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அன்று நாம் எதிர்பார்த்த பலன் எமக்குக் கிடைத்துள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

சமுர்த்தி திட்டத்தினூடாக அன்று கொடுப்பனவுகளை பெற்றவர்கள் இன்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்டு இருப்பார்களாயின் நமது எதிர்பார்ப்பு இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதே அதன்மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் மாத்திரம் யாரும் செல்வந்தராக முடியாது. அவர்களுக்கு சரியான வருமான மார்க்கத்தை உருவாக்கிக்கொடுத்து உரிய முறையில் வழிகாட்ட வேண்டும். அதனை உணர்ந்து அன்று நாம் மஹிந்த சிந்தனை ஊடாக சமுர்த்தி திட்டத்தை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டோம்.

சமுர்த்தி பயனாளர்களின் குடும்பங்களை சேர்ந்த இளைஞர், யுவதிகளை தொழிற்பயிற்சி திட்டங்களுக்கு வழிநடத்தி திறமையான பணியாளர்களாக உருவாக்கினோம். அதன் மூலம் பல தொழில்முனைவோர்களை உருவாக்க எம்மால் முடிந்தது என்று நாம் நம்புகின்றோம். அதுமாத்திரமன்றி அவர்களை அரச மற்றும் தனியார்துறையில் மாத்திரமல்லாமல் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பில் ஈடுபடுத்த முடிந்தது. அதன்மூலம் பலரை நன்கொடை மற்றும் கொடுப்பனவுகளில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து மீட்க முடிந்தது.

சுபீட்சத்தின் நோக்கில் செயற்றிறனான குடிமகன் போன்றே மகிழ்ச்சியாக வாழும் குடும்பம் எனும் எண்ணக்கருவை முன்னோக்கி நகர்த்தியுள்ளோம். இதனூடாக முழுமையான வதிவிட பொருளாதாரத்தை ஏற்படுத்தி கிராம மட்டத்திலும் அம்மக்களை வளப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

ஆனால், கடந்த அரசாங்கத்தில் குறைந்த வருமானம் ஈட்டும் மக்கள் திரும்பிக்கூடப் பார்க்கப்படவில்லை. அனைத்தும் அவர்களது கட்சியினருக்கு மாத்திரமே என இப்பாரிய திட்டம் மிகவும் குறுகிய இடத்தில் குவிந்திருந்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். மக்களை மேம்படுத்தாது அவர்களை அவ்விடத்திலேயே முடங்கச்செய்து அரசியல் இலாபம் தேடுவதே அவர்களது அரசியல் தந்திரோபாயமாக காணப்பட்டது. நாம் ஒருபோதும் அவ்வாறான தொரு நிலைக்குத் தள்ளப்படவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமுர்த்திக்காக நாம் ஆண்டுக்கு 50 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவிடுகிறோம். சமுர்த்தி பயனாளர் குடும்பங்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு எமது அரசாங்கம் இதுவரை பல புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. அதற்கமைய வீட்டு உற்பத்திகளை மேம்படுத்தவும், அவர்களது வருமானத்தை அதிகரிக்கச்செய்யவும் இன்று ஆரம்பிக்கப்படும் இந்த சௌபாக்கியா உற்பத்தி கிராமம் வேலைத்திட்டத்தினூடாக முடியும் என நாம் நம்புகின்றோம்.

எமது இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்ததுபோன்று, நாடு முழுவதும் 500 கிராமங்களை உற்பத்திக் கிராமங்களாக இனங்காணப்பட்டு அபிவிருத்திசெய்வோம். அதில் சமுர்த்தி பயனாளர்கள் மாத்திரமன்றி குறைந்த வருமானம் ஈட்டுவோர் மற்றும் உற்பத்தி நடவடிக்கையில் பங்களிப்புசெய்யும் அனைவரும் இணைத்துக்கொள்ளப்படுவர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

தொற்று நிலைமைக்கு மத்தியில் முழு உலகமும் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு உள்ளாகியுள்ளது. நமது நாடும் அப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. ஆனால், அனைவரதும் ஒத்துழைப்புடன் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை முறையாக முன்னோக்கி முன்னெடுத்துச் செல்ல எமக்கு இன்று முடிந்துள்ளது. அது தொடர்பில் மக்கள் நம்பிக்கையுடன் செயலாற்றுகின்றமை அரசாங்கத்திற்கு வழங்கும் பலம் என்பதை நான் இங்கு நினைவூட்ட வேண்டும்.

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டுசெல்லும் நோக்கில் நாம் பணியாற்றி வருகின்றோம் என்பதை மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இன்று ஆரம்பிக்கப்படும் இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக கிராம மக்களை நேரடியாக நாட்டின் உற்பத்தி செயற்பாட்டில் பங்களிக்கசெய்ய வாய்ப்புள்ளது. அவர்களுக்கு மாற்று வருமான மார்க்கம் எற்படுத்தப்படுவதன் மூலம் அவர்களது வாழ்க்கை நிலையும் உயர்வடையும்.

இன்று இந்த வீட்டை பெற்றுக்கொள்ளும் மக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் நாளைமுதல் புதிய வாழ்க்கையை அனுபவிக்க போகின்றார்கள். புதிய எதிர்பார்ப்புகளுடன் அவர்களுக்கு பணியாற்ற முடியும்.

கொவிட் தொற்று நிலைமையை காரணங்காட்டி நாம் ஒன்றும் செய்யாதிருப்பதை காணவே எமது எதிர்க்கட்சி விரும்புகிறது.

கொவிட் இல்லாத காலத்திலும் ஒன்றும் செய்யாதவர்கள், தற்போது ஆட்சியில் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை கண்டிருக்கலாம். இவை மக்களுக்கு மறைக்கக்கூடியவை அல்ல.

அதனால் கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் நாம் பணியாற்றினால் அதன் பிரதிபலன் எப்போதேனும் எமது நாட்டிற்கு உரித்தாகும் என்ற நம்பிக்கையுடன் நாம் பணியாற்றுவோம்.

இன்று இந்த அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக கிராம பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படும் இராஜாங்க அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், சௌபாக்கியா மேம்பாட்டு பணியகம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூருகின்றேன்" - என பிரதமர் தெரிவித்தார்.

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறியதாவது,

சுபீட்சத்தின் நோக்கில் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பை பிரதமரின் வழிகாட்டுதலின்கீழ் இந்த உற்பத்திக் கிராமம் எண்ணக்கருவை செயற்படுத்தினோம்.

நம் நாட்டில் திறமைகள் உள்ள, அர்ப்பணிப்பு உள்ள மற்றும் திறமையான சிறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய பிற வருமான ஆதாரங்களை உருவாக்கக்கூடிய குழுவினரை இனங்கண்டு அவர்களை இந்த கிராம எண்ணக்கருவிற்குள் உள்ளீர்த்து அவர்களை வருமானம் ஈட்டும் குழுவாக மாற்றுவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தி ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைகளை செயற்படுத்தி இந்நாட்டை சுபீட்சமான நாடாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என நான் இங்கு உறுதியளிக்கிறேன். இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு புதிய தோற்றத்தை ஏற்படுத்தினோம். சமுர்த்தி வீடமைப்பு சீட்டிழுப்பு ஊடாக செயற்படுத்தப்படும் வீடமைப்பு வேலைத்திட்டம் அதில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும்.

அதற்கமைய 2020ஆம் ஆண்டிற்கான உங்களது வேலைத்திட்டத்திற்கு அமையவும் 2021ஆம் ஆண்டிற்கான சமுர்த்தி திணைக்களத்தின் வேலைத்திட்டத்தின் ஊடாகவும் செயற்பட்டு குறைந்த வருமானம் பெறும் மற்றும் மிகவும் கஷ்ட பிரதேசங்களில் வசிக்கும் குழுவினருக்கு 1000 வீடுகளை அமைத்துக் கொடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கமைய 2020இல் ஆரம்பித்த வீட்டை உங்களது கரங்களினால் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் எமக்கு வழங்கிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எமது அமைச்சும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் ஒன்றிணைந்து பணியாற்றினோம். அதேபோன்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் செயற்படுத்தப்படும் தொழில்முனைவோர் திட்டத்திற்காகவும் நாம் ஒன்றிணைந்து செயற்பட்டு அத்தொழில்முனைவோரை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்கு ஓர் அமைச்சு என்ற ரீதியில் தொடர்புபடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சீ.பீ.ரத்நாயக்க, நாமல் ராஜபக்ஷ, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, காஞ்சன விஜேசேகர, அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷுமன், சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் திலகசிறி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தனிமைப்படுத்தல் மீறல்: மேலும் 403 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 403 பேர் நேற்றுக்காலை முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம்முதல் இதுவரை 45,935 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, மாகாணங்களுக்கிடையில் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், பயணக் கட்டுப்பாட்டை மீறி பயணிக்கவேண்டாம் என மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை மீறி பயணித்த 59 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

# 1,786 கொரோனா நோயாளர்கள் பதிவாகிய பிரதேச விபரங்கள்

நாட்டில் நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் நாட்டில் புதிதாக 1,864 கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 365 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 221 பேரும் கண்டி மாவட்டத்தில் 81 பேரும் யாழ். மாவட்டத்தில் 23 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 33 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 45 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 97 பேரும் பதுளை மாவட்டத்தில் 40 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 100 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 07 பேரும் வவுனியா மாவட்டத்தில் 07 பேரும் மன்னார் மாவட்டத்தில் 08 பேரும் நோயாளர்களாக பதிவாகியுள்ளனர்.

இதனிடையே, நாட்டில் நேற்று முன்தினம் 46 கொரோனா மரணங்கள் உறுதிசெய்யப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டிருந்தார்.

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான தபால் பொருட்களுக்கு விசேட வரி

## நேற்றுமுதல் அமுல்

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் பொருட்களுக்கு விதிக்கப்படும் மறு சீரமைக்கப்பட்ட வரிக் கொள்கை நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

இதற்கமைய ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 26 நாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தவிர ஏனைய தபால் பொருட்களுக்கு நேற்று முதல் தபால் வரிக் கொள்கை அமுலாவதாக தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளமைக்கு அமைய தபால் நுகர்வோர், இணையவழி விற்பனையில் ஈடுபடுவோர் மற்றும் இணையவழி மூலம் விற்பனைசெய்யப்படும் பொருட்களுக்கு இந்த புதிய வரிக் கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி 150 யூரோவுக்கும் குறைந்த பெறுமதியுடைய அனைத்து தபால் பொருட்களையும் குறித்த நாடுகளுக்கு அனுப்பு வோரிடமிருந்து நேரடி வரி அறவிடப்படும் என தபால்மா அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

அதேபோல் 150 யூரோவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களை அனுப்பினால் நாட்டில் கடைப்பிடிக்கப்படும் வரிக் கொள்கைக்கு மேலதிகமாக ஏனைய சுங்கக் கொள்கைகளுக்கு உட்பட்டதாக வரி அறவிடப்படும் எனவும் அந்த வரி பணம் பொருட்களை பெறுவோரிடம் இருந்து அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், வெட் மற்றும் நடவடிக்கை கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட நாட்டின் தபால் நிர்வாகம் அல்லது சுங்கத்தால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நுகர்வோர் பொறுப்பேற்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மேற்குறித்த வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு இலங்கை தபால் திணைக்களம் பொறுப்பேற்காது என தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# 38 பயணிகளுடன் பயணித்த பஸ் பொலிஸாரினால் மறிப்பு!

## மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வந்தது



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மட்டக் களப்பிலிருந்து கொழும்பு வந்த தனியார் பஸ்ஸின் சாரதி, நடத்துனர் மற்றும் பயணிகள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, பஸ்ஸில் 38 பயணிகள் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை மீறி பயணித்த குற்றச்சாட்டில் கிராண்ட்பாஸில் வைத்து குறித்த பஸ் இவ்வாறு பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

# இலங்கை விமானங்களுக்கு துருக்கி அரசு தடை விதிப்பு

இலங்கை விமானங்களுக்கு துருக்கி அரசாங்க மானது தடைவிதித்துள்ளது. இத்தடையானது பங்களாதேஷ், பிரேஸில், தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவிப்பினை துருக்கியின் உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ளதுடன், இத்தடையானது நேற்றுமுதல் மறு அறிவித்தல் வரும்வரை அமுலில் இருக்கும் எனவும் அறிவித்துள்ளது.

கொவிட் – 19 வைரஸின் புதிய மாறு பாடானது மேற்குறித்த நாடுகளில் நிலவி வருவதுடன், தொற்றுநோயின் ஆபத்தானது அதிகரித்துள்ளதாகவும் அவ்வமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய துருக்கி அரசாங்கமானது மேற்படி நாடுகளின் ஊடான தரை, ஆகாயம் மற்றும் கடல் வழி பயணங்களுக்கும் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் பொருளாதாரம் பாதிப்பு: சீனா – பங்களாதேஷிடம் இலங்கை கையேந்தும் நிலைமை!

## ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குற்றச்சாட்டு

தற்போதைய அரசு பல பில்லியன் கணக்கான பணத்தை அச்சடிக்கின்றது. இதனால் ரூபாவின் பெறுமதியே வீழ்ச்சியடையும். இன்று தடுப்பூசிகளைப் பெறுவதற்கும் கடன் கோரும் நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச கடன்களை அடைக்க பங்களாதோஷ், இந்தியா மற்றும் சீனாவிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இன்று ஷானி அபேயசேகர தனது 35 வருட சேவையிலிருந்து ஓய்வுபெற்று செல்கிறார். இலங்கையின் பொலிஸ் சேவைக்கு மகத்தான பங்களிப்பைச்செய்து குற்றவியல்துறைக்கு கீர்த்தியைப் பெற்றுக்கொடுத்த சிறந்த அதிகாரி. அவருடைய ஓய்வு வாழ்விற்கு வாழ்த்துகளைத் தெரிவித்து இன்றைய ஊடக சந்திப்பை ஆரம்பிக்க நினைக்கிறேன். நேற்று அவருடைய பிறந்தநாள். இன்று வரும்போது அவருடைய உயிருக்கு ஆபத்துள்ளதான செய்தியொன்றை கேள்விப்பட்டேன். நாட்டின் தற்போதுள்ள சட்டம் மற்றும் ஒழுங்குகள் குறித்து இங்கு தீர்வுகளை முன்வைக்க நான் விரும்பவில்லை. அது குறித்த தீர்வுகளை வழங்கும் பொறுப்பை மக்களிடம் ஒப்படைக்க விரும்புகிறேன்.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு புதிய அரசியல். எமது கட்சியின் பிரதான இலக்கு. எனக்கு பின்னாலுள்ள திரையில் காண்பிக்கப்படுகிறது. அதுதான் மக்களுக்கான எதிர்க்கட்சியாகும். சம்பிரதாய எதிர்க்கட்சியின் செயற்பாடுகளுக்கப்பால் - அற்ப நோக்குகளுக்கப்பால் செயற்படுவதற்கு எமது கட்சியின் முன்னோடிகள் தீர்மானித்துள்ளனர். எமது முதலாவது இலக்கு நாடும் அதன் மக்களுமாகும்.

ரோஜாப்பூக்களைக்கொண்ட காலம் அல்ல எமது நாட்டின் எதிர்காலம். மாறாக கடினமான எதிர்காலம் ஒன்றை எதிர்நோக்கியுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டிலுள்ள பல புத்திஜீவிகள், துறை சார்ந்தவர்கள், தொழில்வல்லுநர்கள், இலங்கையை பிறப்பிடமாகக்கொண்ட வெளிநாட்டு புத்திஜீவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு பல குழுக்களை அமைத்துள்ளோம். விருப்பமுள்ள - ஆர்வமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி ஒன்றுகூடி பல்வேறு பரப்புகள் குறித்து விழிப்பாக இருப்பதோடு, எதிர்காலத்தில் ஆட்சியமைக்கவுள்ள பிரதான எதிர்க்கட்சியாக பல்வேறு மாற்றீடுகள் பற்றியும் கலந்தாலோசித்து வருகிறோம்.

அந்தவகையில் வர்த்தகக் குழுவில் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும், எரான் விக்ரமரத்னவும் செயற்படுகின்றனர். பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இதே இடத்தில் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நடத்திய ஓர் ஊடக சந்திப்பில் மேற்கொள் காட்டியதை நான் மீண்டும் மேற்கொள் காட்ட விரும்புகிறேன். “எண்ணெய் விலை அதிகரிக்காவிட்டால் நாட்டின் வங்கிக் கட்டமைப்பு சரிந்துவிடும் என மத்திய வங்கி தன்னிடம் கூறியதாக அமைச்சர் கம்மன்பில தெரிவித்தார்” - இதைக் கூறுவது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அல்ல, அமைச்சர் உதய கம்மன்பில.

நாடு இப்போது எதிர்நோக்கியுள்ள நிலையில், வெளிவருவது கடினம். எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள உன்மையான தகவல்களை நாட்டிற்கு கூற வேண்டும். வாராந்தம் மத்திய வங்கி வெளியிடும் அறிக்கையில் அந்நியச்செலாவணி கையிருப்பு விபரங்களை முதல் பக்கத்தில் வெளியிடும். ஆனால், இந்தத் தரவுகள் கடந்த அறிக்கைகளில் மறைக்கப்பட்டுள்ளன. தற்போது அந்தத் தகவல்களை வெளிப்படுத்துவது இடை நிறுத்தப்பட்டுள்ளது. இது பிழையான விடயமாகும். மக்களுக்கு பொய் கூறவேண்டியதில்லை.

நாடு பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதொரு நிலையில் அற்ப அரசியல் இலக்குகளுக்காக செயற்படாமல் யதார்த்தமாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்குமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கிறோம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் உதய கம்மன்பில, பசில் போன்றவர்களின் நாடகங்களை அரங்கேற்றி மக்களை மீண்டும் ஏமாற்றுவது சாத்தியமில்லை. மக்களுக்கு இன்றைய பிரதான பிரச்சினை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் நாமலா அல்லது பசிலா என்பதல்ல. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் இயலுமையுள்ளதாக நான் நினைக்கவில்லை.

பொருட்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது, மக்களிடம் பணம் இல்லை, வேலை இழப்புகள் இடம்பெறுகின்றன, சம்பளம் குறைக்கப்படுகிறது, நாளாந்த தொழிலில் ஈடுபடுபவர்கள் வீட்டில் பிள்ளைகளுக்கு உணவளிக்க வசதிகள் இல்லை, வங்கிகளில் பெற்ற கடன்களை மீள அடைக்க முடியாத நிலை, வரலாற்றில் என்றுமில்லாத வகையில் இந்நாட்டுப் பெண்கள் அடகுக் கடைகளுக்கு முன்னால் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள், இவற்றுக்கு மத்தியில் உயர்ந்த வட்டி வீதத்தில் பெற்ற கடன்களால் அமைக்கப்பட்ட மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுகம், தாமரைக்கோபுரம் என்பன நாட்டுக்கு சுமையாக மாறியுள்ளன.



இவற்றுக்கான கடன்களை அடைக்க எங்களிடம் அந்நியசெலாவணி கையிருப்பு போதுமானதாக இல்லை. ஆகையால் இறக்குமதிகளை மட்டுப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு நேர்ந்துள்ளது.

பல பில்லியன் கணக்கான பணத்தை அச்சடிக்கின்றனர். இதனால் ரூபாவின் பெறுமதியே வீழ்ச்சியடையும். இன்று தடுப்பூசிகளைப் பெறுவதற்கும் கடன் கோரும் நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச கடன்களை அடைக்க பங்களாதேஷ், இந்தியா மற்றும் சீனாவிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலக வங்கியிடம் எமது நம்பிக்கை பின்னடைவை எதிர்தோக்கி யுள்ளது. கடன்களை வழங்க பின்வாங்குகிறார்கள். இது எமது பொருளாதார நடைமுறைகளின் பிரச்சினைகளால் வந்தது.

கொவிட்டால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பல நாடுகள் பல இன்னல்களுக்கு மத்தியிலும் முறையான திட்டமிடல்களை முன்னெடுத்ததால் அதிலிருந்து படிப்படியாக வெற்றிகரமாக மீண்டுவருவதற்கான முயற்சியில் இருப்பதை காண்கிறோம். சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்து தூரநோக்கில் செயற்படாமையின் விளைவுகளைத்தான் இன்று சந்திக்கிறோம். இந்தப் பிரச்சினைகள் போதாது என்பதற்காக இன்னும் பல பிரச்சினைகளை தாமாகவே தேடிக் கொள்கிறோம்.

ஐரோப்பிய நாடாளுமன்றம் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களில் 90 வீத உறுப்பினர்கள் ஏகமனதாக இதற்கு சார்பாக வாக்களித்துள்ளனர். அப்படி நிறைவேற்றியுள்ள பிரேரணையில் பல விடயங்களை அடையாளப்படுத்தியுள்ளனர். நாட்டின் நீதிமன்ற சுயாதீனம், சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தின் இருப்பு, ஆட்சியில் அரசாங்கம் செயற்படும் விதம் குறித்த விடயங்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை தன்டனைக்குட்படுத்துவது, 20ஆவது திருத்தம், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மூலம் இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட தாக்குதல், கடத்தல், இலஞ்சம், துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு நேரடியாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வெளிப்படையாக விடுதலைசெய்தமை.

இவை எல்லாவற்றையும் அடிப்படையாகக்கொண்டு ஜீஎஸ்பி வரிச்சலுகையை கைவிடுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 30 வீதம் ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதிசெய்யப்படுகிறது. இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் மேலும் வெகுவாக பின்னடைவை நோக்கியே நகரும். அதேபோல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பிறிதொரு பிரேரணையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள், ஜனநாயக வாய்ப்பிற்கு இடமளிக்காமை போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மனித உரிமை பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்று சர்வதேச ஜனநாயக சுட்டிகளிலும், பொருளாதார சுட்டிகளிலும் எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக காட்டுகிறது. இதுதான் யதார்த்தம். ஆஜர்ன்டினா, கிறீஸ், சேர்பியா, சிம்பாபே ஆகிய நாடுகளின் நிலையை இலங்கை கிட்டியுள்ளது. மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்குப் பதிலாக மக்களுடைய மனித உரிமைகளை அரசு மழுங்கடிக்கிறது. ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து சகல தரப்பினையும் இணைத்துக் கொண்டு சவால்களை வெற்றிகொள்ள பொறுப்புடன் கூட்டுப் பன்முகத்துடன் செயற்படுவதற்கு நடவடிக்கைகளுக்குள் பிரவேசிக்குமாறு அரசாங்கத்தை வினயமாக வேண்டிக்கொள்கிறேன். எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மீட்பது சுலபமாக இருக்காது. இந்த அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை மற்றும் நெருக்கமான நண்பர்களின் ஒற்றுமை காரணமாக, உலகம் நம்மை ஓரங்கட்டும் நிலை ஏற்பட்டுள்ளது, உலகம் நம்மை நம்பாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உலக நாடுகள் எமக்கு கடன்களை வழங்க மறுக்கின்றன. இதை எதிர்கொள்ளக்கூடிய திறமையான குழு எதிர்க்கட்சியில் உள்ளது.

சுதந்திரத்திற்குப் பிறகு ஜப்பானுக்கு அடுத்தபடியாக இருந்த ஒரு நாடு இது. இன்று நம் நாட்டை கடந்துசெல்ல வேறு நாடுகள் இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கொவிட்டின் ஆபத்துகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் முதலில் பேசியபோது, அவர் அவமதிக்கப்பட்டார். இன்று அனைத்தும் உண்மை என உறுதியாகியுள்ளது. அப்போது ரணசிங்க பிரேமதாசவை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு ஓர் இளைஞனாக பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டோம். அப்போதைய நிலையில் பிரேமதாச போன்றவர்கள் ஜனாதிபதியாக ஆகுவது நினைத்துப் பார்க்கமுடியாததொரு சந்தர்ப்பமாகும்.

ஆனால் அன்று வெற்றிபெற்றோம். சஜித் பிரேமதாச இப்போது ஒரு பெரிய முயற்சியை செய்துவருகிறார். அவரைச் சுற்றி திறமையானவர்கள் உள்ளனர். இந்த அரசாங்கம் அதன் பிரச்சினைகளுக்கு பதில்கள் இல்லாததால் ஏனையோரை அடக்க முயற்சிக்கிறது - என்று தெரிவித்தார் இம்தியாஸ்.

## நாட்டில் 3.077பேர் கொரோனாவிற்கு பலி

நாட்டில் நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றினால் மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையானது 3.077 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

31 பெண்கள் மற்றும் 16 ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும், உயிரிழந்த பெண்களுள் 21 பேர் 60 வயதிற்கு மேற்பட்டவர் களாகவுள்ளதுடன், அதில் 10 பேர் 30 மற்றும் 59 வயதிற்கு இடைப்பட்ட வர்களாகவுள்ளனர்.

உயிரிழந்த ஆண்களுள் 13 பேர் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாகவுள்ளதுடன், 30 மற்றும் 59 வயதிற்கு இடைப்பட்ட இரு ஆண்கள் மற்றும் 30 வயதிற்கு குறைந்த ஆண் ஒருவருமே மேற்படி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## உடப்பு – பாரிப்பாடு கடற்கரையில் பெண்ணின் சடலம் ஒதுங்கியது

**புத்தளம் – உடப்பு, பாரிப்பாடு கடற்கரையோரத்தில் பெண்ணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.**

**நேற்றுக் காலை இவ்வாறு சடலம் கரையொதுங்கியதாக பொலிஸார் கூறினர்.**

**சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது. உயிரிழந்துள்ள பெண் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.**

**சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

## மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

நாட்டில் மூன்று மாவட்டங்களின் சில பகுதிகள் நேற்றுக் காலை 06 மணிமுதல் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி, ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதனடிப்படையில், யாழ். மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் கிராமசேவகர் பிரிவின் கள்ளித்தெரு பகுதி மற்றும் கள்வன்தாழ்வு பகுதி ஆகியன தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பொலிஸ் பிரிவின் டன்சினன் கிராமசேவகர் பிரிவின் மத்திய பிரிவு தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தின் கண்டி பொலிஸ் பிரிவின் கீழுள்ள சுதுஹும்பல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் வெலமெத பாரகம பகுதி முடக்கப்பட்டுள்ளது.

## மதுரங்குளியில் மனித எலும்புக்கூடுகள்

புத்தளம் – கொழும்பு வீதி, மதுரங்குளி - செம்பெட்டே பிரதேசத் திலுள்ள காணியொன்றிலிருந்து மனித எலும்புக்கூடுகள் மற்றும் துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ்.அசேல டி சில்வா, முந்தல் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்திலுள்ள காணியில் மனித உடல் எச்சங்கள் மற்றும் துப்பாக்கி கிடப்பதைக் கண்டு பிரதேச மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மனித உடல் எச்சங்களையும் துப்பாக்கியையும் கைப்பற்றினர்.

சில காலத்துக்கு முன்பு உயிரிழந்த ஒருவர் அல்லது இருவரின் உடல் எச்சங்களாக இவை இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியே இதன்போது கைப்பற்றப் பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊழியர்களை பணிநீக்கம் செய்யாது அவர்களை பாதுகாக்க வேண்டும்!

### தொழிலதிபர்கள் - வர்த்தக சமூகத்தினரிடம் பிரதமர் மஹிந்த வேண்டுகோள்





ஊழியர்களை பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாக அவர்களை பாதுகாத்து இந்த தொற்று நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் அனைத்து தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை ஆடை ப்ராண்ட் சங்கம் மற்றும் இலங்கை சில்லறை விற்பனையாளர்கள் சங்கம் ஆகியன எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வங்கிக் கடன் நிவாரணம் பெற்றுக் கொள்ளல், ஆடைத் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றல், கொவிட் வழிகாட்டுதல்களுக்கமைய ஆடை விற்பனை நிலையங்களை திறக்க அனுமதி பெறல், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தனர்.

பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி செயற்பாட்டிற்காக தனியான அமைச்சு அறிமுகப்படுத்தப்பட்டமை தொடர்பில் இலங்கை ஆடை பிராண்ட் சங்கத்தின் தலைவர் லலந்த வதுதுர இதன்போது பிரதமருக்கு தமது சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மற்றும் கொவிட்-19 உலகளாவிய தொற்று நிலைமை காரணமாக இதுவரை சுமார் 24 மாத காலங்களாக தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு நிதி அமைச்சின் ஊடாக அவசர நிவாரணங்களை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து ஊழியர்களை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளமையால் அவர் களை பணிநீக்கம் செய்வதை தவிர மாற்று வழி இல்லை எனத் தெரிவித்த இச்சங்கங்களின் பிரதிநிதிகள் அவ்வாறு ஊழியர்களை நீக்குவதும் கடினமானதொரு செயற்பாடாக இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

குறித்த கலந்துரையாடலில், கைத் தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச, தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் சுஜீவா பள்ளியகுரு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன உள்ளிட்ட நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தீக்கிரையான கப்பலின் எஞ்சியுள்ள பாகங்களை தேடும் பணிகள் ஆரம்பம்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதை தொடர்ந்து நாட்டின் கடற்பரப்பில் எஞ்சியுள்ள கொள்கலன்கள் உள்ளிட்ட பாகங்களைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படைக்குச் சொந்த மான கப்பலினூடாக ஆழ்கடல் பகுதியை ஸ்கேன் செய்து, எஞ்சிய பாகங்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார்.

இந்த தேடுதல் நடவடிக்கை இன்று டன் நிறைவுசெய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

இதன்பின்னர் ஆழ்கடல் பகுதியில் எஞ்சியுள்ள கொள்கலன்கள் உள் ளிட்ட பாகங்களை அகற்றுமாறு கப்பல் நிறுவனம் மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதுவரையில் கப்பல் மூழ்கியுள்ள கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மீன்பிடிப் படகுகள் உள்ளிட்ட உடைமை களுக்கு ஏற்படக்கூடிய சேதத்தை தடுக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த தடையை விரைவில் நீக்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறியுள் ளார்.நீர்கொழும்பு, கொழும்பு, பாணந்துறை மற்றும் களுத்துறை கடற்பிராந்தியங்களில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கடந்த மே மாதம் 22 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# யாழ்ப்பாணப் படையினரால் மிளகாய் உற்பத்தி






இராணுவத் தளபதியின் துரு மித்துரு நவ ரட்டக் திட்டத்தின்கீழ் விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை இலக்காகக்கொண்டு யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் விவசாய பண்ணையில் உற்பத்திசெய்யப்பட்ட மிளகாய் சகாய விலையில் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டலுக்கமைய திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## இல்லாத அமைப்பொன்றின் பெயரில் அதிகாரிகளுக்கு எதிராக கடிதங்கள்



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கல்வித்துறைசார் உயரதிகாரிகள் மீது அவதூறு பரப்பி இல்லாத அமைப்பின் பெயரில் போலி கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

'கல்வி, கலாசார மேம்பாட்டு இணையம்' என்ற இல்லாத அமைப்பின் பெயரில் கல்வி அதிகாரிகள் மீது இல்லாத குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் எழுதி மாகாண மட்ட உயரதிகாரிகளுக்கு போலி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்படி இந்த போலி அமைப்பானது கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டு இயங்கிவருகின்ற கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் பெயரை ஒத்ததாக இருப்பதன் காரணமாக பலரும் கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்திடம் தொடர்புகொண்டு வினவியிருந்த நிலையில் அவர்கள் இது குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் திட்டமிட்டு காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு அமைப்புகளின் பெயர்களில் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும் இதனை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் கல்வி கலாசார அபிவிருத்தி அமையம் தெரிவித்துள்ளது.

எனவே இவ்வாறான போலி அமைப்புகள் தங்களின் சுயலாப தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்காக திட்டமிட்டு அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் உயரதிகாரிகளும் அவதானமாக இருக்க வேண்டும் என்று மாவட்ட கல்வித்துறை சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இராணுவம் - பொலிஸாரால் வவுனியா நகரப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனை





வவுனியா நகரப்பகுதி இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், சுகாதாரப் பிரிவினரால் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் வவுனியா நகரின் பசார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை உள்வட்ட வீதி என்பன இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு குறித்த பகுதியிலிருந்து மக்கள் வெளியேற தடைவிதிக்கப்பட்டு நான்கு இடங்களில் சுகாதாரப் பிரிவினரால் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.


பசார் வீதி சந்தி, தர்மலிங்கம் வீதி சந்தி, சந்தை உள்வட்ட வீதி சந்தி, மில் வீதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி என்பவற்றில் வைத்து சுகாதாரப் பிரிவினரால் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் பணியாற்றியோர், நகருக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தோர், வாகனச் சாரதிகள் என சுமார் 400இற்கு மேற்பட்டவர்களுக்கு இதன்போது பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், பிசிஆர் எடுத்த பின்பே மக்கள் நகரிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

பிசிஆர் முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

# மன்னார் பொது வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களால் 2 நாள் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுப்பு

## நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் நிலை


(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று வியாழக்கிழமை காலைமுதல் இரண்டு நாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தபோதும், அவர்களின் பிரச்சினைகளுக்கு இதுவரை எவ்வித தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று வியாழக்கிழமை காலைமுதல் 2 நாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அகில இலங்கை தாதியர் சங்கம் உள்ளிட்ட மூன்று சங்கங்கள் இணைந்து குறித்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் கடமைக்குச் செல்லவில்லை.

தாதியர்களின் சுகயீன விடுமுறைப் போராட்டம் காரணமாக மன்னார் பொது வைத்தியசாலையில் பல இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

நோயாளர் விடுதிகளில் தாதியர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகள் இடம்பெறவில்லை, வெளிநோயாளர் பிரிவில் தாதியர்களினால் முன்னெடுக்கும் பணிகள் இடம்பெறவில்லை. உயிர் காக்கும் நடவடிக்கைகள் மாத்திரமே தாதிய உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இடம்பெற்று வருகின்றன.

தாதிய உத்தியோகத்தர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் தமது போராட்டம் தொடரும் என மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் எச்சரித்துள்ளனர்.

தமது 2ஆவது நாள் சுகயீன விடுமுறைப் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சுகயீன விடுமுறைப் போராட்டத்தின் காரணமாக மன்னார் பொது வைத்தியசாலைக்கு பல்வேறு தேவைகளுக்காக வந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வு



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி கண்டாவளை உமையாள்புரம் பிரதேசத்தில் அதிகளவில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உமையாள்புரம் பிரதேசம் ஆனையிறவு கடல்நீரேரிக்கு அருகிலுள்ள கிராமம். இதன் காரணமாக கிராமத்தின் பெரும்பாலான பகுதிகள் உவராக காணப்படுகின்றன.

உவராக காணப்படும் பிரதேசத்தின் அளவு அதிகரித்துவரும் நிலையில், குறித்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் இதனை விரைவுபடுத்தும் எனத் தெரிவித்துள்ள பொது மக்கள், கரைச்சி பிரதேச சபையின் கழிவகற்றும் பகுதியில் சட்டவிரோதமாக உழவு இயந்திரங்கள் மூலம் அகழப்படும் மணல் சேமிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து ரிப்பர்களில் எடுத்துச்செல்லப்படுவதாகவும், தொடர்ச்சியாக இவ்வாறு இடம்பெற்று வருகின்றதெனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக அடிக்கடி வாள்வெட்டுச் சம்பவங்களும், குழு மோதல்களும் இடம்பெறுகின்றன என்றும் கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் எவரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை எனவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே உமையாள்புரம் கிராமத்தின் எதிர்காலம் கருதி அதிகரித்துள்ள சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தவறின் முழுக் கிராமமும் இன்னும் ஒருசில வருடங்களில் உவர் நிலமாக மாறிவிடும் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## 777 கிலோ மஞ்சள் மூடைகள் மீட்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சௌத்பார் பகுதியில் 777 கிலோ 600 கிராம் மஞ்சள் மூடைகளுடன் நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டள்ளதுடன், அவற்றை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் சௌத்பார் பகுதியில் நேற்றுக் காலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 777 கிலோ 600 கிராம் மஞ்சள் மூடைகளுடன் மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களும் வேன், முச்சக்கர வண்டி மற்றும் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள் ளன.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள், வாகனங் கள், சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸ் நிலையத் தில் மேலதிக விசாரணைகளுக்காத தடுத்துவைக்கப் பட்டுள்ள நிலையில் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் சமுர்த்தி பயனாளிக்கு வீடு கையளிப்பும் அடிக்கல் நாட்டும் விழாவும்








(வவுனியா நிருபர்)

தேசிய சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு மரக்காரம்பளை கிராத்தில் உற்பத்திக் கிராம கட்டிடத்தின் அடிக்கல் நாட்டுவிழாவும் பூவரசங்குளம் பகுதியில் வீடு கையளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமாகிய குலசிங்கம் திலீபனும் சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேனவும் விருந்தினர்களாக வவுனியா தெற்கு தமிழ் பிரதே சபை தவிசாளர், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பட்டதாரி பயிலுனர்கள், திட்டப் பயனாளிகள், பொதுமக்கள் என பலர் கொவிட் பாதுகாப்பு நடைமுறைகளுடன் சமூக இடைவெளி பேணி கலந்துகொண்டனர்.

வீடு கையளிப்பு வைபவத்தில் பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்கள் நாடா வெட்டி திறந்துவைத்ததுடன் அடிக்கல் நாட்டு வைபவத்தினையும் ஆரம்பித்துவைத்தனர்.

# உலக செய்திகள்

## கனடாவில் கடும் வெயில்: 5 நாட்களில் 486 பேர் பலி

கனடாவில் சுட்டெரித்துவரும் வெயிலில் சிக்கி 486 பேர் உயிரிழந்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வான்கூவர் (Vancouver), லைட்டான் (Lytton)உள்ளிட்ட இடங்களில் கடந்த சில நாட்களாக 121 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவாகிவருகிறது.

தகிக்கும் வெப்பத்தால் அங்கு கடந்த 5 நாட்களில் 486 உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

## கொவிஷீல்டுக்கு 'கீரீன் பாஸ்': ஐரோப்பிய நாடுகள் ஒப்புதல்

கொவிஷீல்ட் கொரோனா தடுப்பூசி போட்டவர்களுக்கு 'கீரீன் பாஸ்' தர ஐரோப்பிய நாடுகளில் சில ஒப்புதல் அளித்துள்ளன.

கொவிஷீல்டை ஏற்காவிட்டால் ஐரோப்பிய பயணிகள் கட்டாய தனிமை என இந்தியா எச்சரித்திருந்த நிலையில், ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மன், ஸ்லோவேனியா, கிரீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஒப்புதல் வழங்கியுள்ளன.

ஐரோப்பாவில் புதிய தடுப்பூசி பாஸ்போர்ட் நடைமுறை அமுலுக்கு வந்த நிலையில் கொவிஷீல்டுக்கு கீரீன் சிக்னல் கிடைத்துள்ளது.

## ஒலிம்பிக் தகுதி சுற்றில் கர்ப்பிணி வீராங்கனை..!




அமெரிக்காவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் தகுதிச்சுற்றில் கர்ப்பிணியாக இருக்கும் அந்நாட்டை சேர்ந்த தடகள வீராங்கனை லிண்ட்சே ஃப்ளாச் (Lindsay flach) பங்கேற்றுள்ளார்.

ஜப்பானில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிச்சுற்றில் 18 வார கால கர்ப்பிணியாக இருக்கும் தடகள வீராங்கனை லின்சே பங்கேற்றார்.

தகுதிச்சுற்றில் பங்கேற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டு, வித்தியாசமான அனுபவமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், ஷாட்புட், ஜாவ்லின் உள்ளிட்ட 7 விளையாட்டுகளை உள்ளடக்கிய ஹெப்டத்லான் போட்டியில் பங்கேற்ற அவர், 18 பேரில் 15ஆவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிதீவிர வைரஸாக உருமாற்றமடைந்த 'டெல்ட்டா'



**அல்பா வைரஸ் - 172 நாடுகளில்**

**பீட்டா வைரஸ் - 120 நாடுகளில்**

## உலகை ஆக்கிரமிக்கும் அபாயம்; 100 நாடுகளில் தாக்கம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

"உலகின் 96இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் அதிதீவிர வைரஸாக உருமாற்றமடைந்து எதிர்வரும் மாதங்களில் ஆதிக்கம் செலுத்தும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயசஸ் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை கண்டறியப்பட்ட கோவிட் வைரஸ்களிலேயே, டெல்ட்டா வகை கொவிட் வைரஸ், மிக அதிகமாக பரவும் அபாயம் கொண்டிருக்கிறது. தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத



மக்களிடையே இது மிக வேகமாகப் பரவி வருகிறது.

டெல்டா வகை உருமாற்ற வைரஸ் ஏறக்குறைய 100 நாடுகளுக்கு பரவிவிட்டது. இதுவரை 96 நாடுகளில் டெல்ட்டா வகை உருமாற்றம் அடைந்த வைரஸால் பாதிக்கப்பட்டோர் கண்டறியப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த வைரஸை அடையாளம் காண தேவையான உருமாற்றம் குறைவாக இருப்பதால், இந்த வைரஸின் வரிசைப்படுத்தும் செயல்திறன் குறைந்து மதிப்பிடப்படுகிறது.

இந்த டெல்ட்டா உருமாற்ற வைரஸ் பாதிக்கப்பட்ட நாடுகளில் தொற்று வேகமாகப் பரவுகிறது, வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த டெல்ட்டா உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ், பிரிட்டனில் கண்டறியப்பட்ட அல்பா உருமாற்ற வைரஸைவிட 55 சதவீதம் தீவிரமாக பரவும் தன்மை கொண்டதாக இருக்கிறது.

துனிசியா, மொசாம்பிக், உகண்டா, நைஜீரியா, மலாவி உள்ளிட்ட 11 நாடுகளில் டெல்ட்டா உருமாற்ற வைரஸ் பரவியுள்ளது. இந்த வைரஸ் பரவல் காரணமாக புதிதாக பாதிக்கப்படுவோர் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

டெல்ட்டா உருமாற்ற வைரஸ் எதிர்வரும் மாதங்களில் மற்ற உருமாற்ற வைரஸ்களைவிட வீரியம் மிக்கதாக மாறக்கூடும், உலகளவில் அதிகமான நாடுகளில் பரவுவதற்கும் வாய்ப்புள்ளது.

அதாவது, குறிப்பாக தடுப்பூசி செலுத்தும் அளவு குறைவாக இருக்கும் நாடுகளில் நீண்டகாலத்துக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தேவைப்படும். இந்த தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிட்ட இலக்கு வைத்தும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள்ளும் செயற்படுத்தப்பட வேண்டும். இந்த தடுப்பு நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார உறுப்பு நாடுகளும் உதவவேண்டும்.

அல்பா உருமாற்ற வைரஸ் தற்போது 172 நாடுகளில் காணப்படுகிறது. பீட்டா வகை வைரஸ் 120 நாடுகளிலும், டெல்டா வகை உருமாற்ற வைரஸ் புதிதாக 11 நாடுகளிலும் என 96 நாடுகளில் பரவியுள்ளன.

உருமாறிய டெல்ட்டா வகை வைரஸ், மிக விரைவாக மேலும் அதிதீவிர வைரஸாக உருமாற்றம் அடைந்து எதிர்வரும் மாதங்களில் ஆதிக்கம் செலுத்தும்."

- இவ்வாறு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகும் டெல்ட்டா**

இந்நிலையில், "கொரோனாவை முழுமையாக விரட்டும் அமெரிக்காவின் முயற்சிக்கு உருமாற்றமடைந்த டெல்ட்டா கொரோனா வைரஸ் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது" - என அமெரிக்க ஜனாதிபதியின் தலைமை மருத்துவ ஆலோசகர் எண்டனி ஃபாசி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து எண்டனி ஃபாசி மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்ட்டா வைரஸ் அதிக தொற்று தன்மை கொண்டுள்ளது.

அமெரிக்காவில் பரவும் கொரோனா வைரஸில் கடந்த வாரத்தில் 20% பேருக்கு டெல்ட்டா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் இந்த சதவீதம் 10% ஆக இருந்தது. பிரிட்டனிலும் இதே நிலைதான்.

கொரோனாவை விரட்ட நினைக்கும் அமெரிக்காவின் முயற்சிக்கு டெல்ட்டா வைரஸ் அச்சுறுத்தலாகவுள்ளது. இதில் நல்ல செய்தி என்னவென்றால் அமெரிக்காவின் தடுப்பூசிகள் டெல்ட்டா வைரஸுக்கு எதிராக சிறப்பாக செயற்படுகின்றன. நம்மிடம் கருவியுள்ளது. அதனை சரியாக பயன்படுத்தி இந்த தொற்றை அழிக்கவேண்டும்."

- இவ்வாறு ஃபாசி தெரிவித்துள்ளார்.

## 18.30 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு



உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18.30 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39.63 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதியில் கண்டறியப்பட்ட கோவிட் - 19 வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்ட மக்கள் பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளபோதும் நாளுக்கு நாள் பாதிக்கப்படுவோர் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உலகளவில் இந்தியா உட்பட பல நாடுகளின் தற்போது கொரோனா 2ஆம் அலையின் வேகம் சற்று தணிந்துள்ளபோதிலும் முற்றாக நீங்கவில்லை. அதேசமயம் ஒருசில நாடுகளில் அதன் தாக்கம் தீவிரமாகவே இருந்து வருகிறது.

கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்நிலையில், உலகளவில் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 18,30,47,755 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 39,64,411 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 16,76,07,526 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 1,14,55,431 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன் அவர்களில் 79,178 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சொல்லவும் முடியல விழுங்கவும் முடியல..!

### தவிக்கிறது வடகொரியா

உலகத்தை ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் உருவான சீனாவின் அண்டை நாடாக வடகொரியா உள்ளது. அதேபோல், இதுவும் சீனாவைபோல் தீவிரமான கம்யூனிஸ்ட் நாடு. உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியபோதிலும், தனது நாட்டில் இதுவரையில் ஒருவர் கூட அதனால் பாதிக்கப்படவில்லை என்று வடகொரிய அரசு மார்தட்டி வருகிறது. இதை உலக மருத்துவ நிபுணர்கள் யாரும் நம்பத் தயாராக இல்லை. ஆனால், வைரஸ் பரவல் ஆரம்பித்ததுமே சீனா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகளுடனான தனது நாட்டு எல்லையை கடந்தாண்டே அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் மூட உத்தரவிட்டார்.



தனது நாட்டில் கொரோனா பாதிப்பே இல்லை என்று வடகொரியா கூறி வந்தாலும், உண்மை நிலவரம் வேறாக இருப்பதாக கிம்மின் சமீபத்திய செயற்பாடுகள் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளன.

வடகொரியாவில் மருத்துவ, சுகாதார வசதிகள் மிகவும் மோசமாக இருக்கிறது. மருத்துவமனைகள், சிகிச்சை கருவிகள், மருந்துகள் போன்ற அடிப்படை வசதிகள் போதிய அளவுக்கு கிடையாது. இதனால், வைரஸால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையை அது மூடி மறைப்பதாக கருதப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாமலும், வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியாமலும் வடகொரிய அரசு திணறுவதாக தெரிகிறது.

மேலும், அணு ஆயுத திட்டங்களில் ஈடுபடு வதால் அந்நாட்டின் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டு இருப்பதாலும், எல்லைகள் மூடப்பட்டு இருப்பதாலும் உணவுப் பொருட்களுக்கு கடும் பஞ்சம் ஏற்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த சிக்கலை சரியாக கையாளாத அதிகாரிகள் மீது ஜனாதிபதி கிம் கடும் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிகிறது. இதனால், தனது நாட்டில் வைரஸே இல்லை என்று கூறி வந்ததால், அதை வெளி உலகுக்கு இப்போது கூறி உதவி கேட்க முடியாமல் கிம் திண்டாடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## 'டெல்ட்டா'வால் பிரான்ஸில் கொரோனா 4ஆம் அலை அபாயம்

பிரான்ஸில் செப்டெம்பர் மாதம் கொரோனாவின் நான்காம் அலை ஏற்பட வாய்ப்புள்ளது என அந்நாட்டு அரசின் அறிவியல் ஆலோசகர் ஃபோண்டனெட் (Fontanet ) எச்சரித்துள்ளார்.

பிரான்ஸில் கடந்த சில நாட்களாக டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. இது கொரோனா நான்காம் அலைக்கு வழி வகுக்கும் என எச்சரித்துள்ள பேராசிரியர் ஃபோண்டனெட் ( Fontanet ), "2 டோஸ் தடுப்பூசி செலுத்தியவர்கள் கொரோனா வைரஸின் தீவிர பாதிப்பிலிருந்து விரைவில் மீண்டு விடலாம்" - என்றார்.

பிரான்ஸில் கொரோனாவால் இதுவரை 57,75,301பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1,11,082 பேர் உயிரிழந்துள்ளனர்.

இன்னும் 2 மாதங்களில் பாடசாலைகள் திறக்கப்படவுள்ளதால் தடுப்பூசி செலுத்தும் பணிகளைத் தீவிரப்படுத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# அத்துமீறிய பிரிட்டன் கப்பல்; அமெரிக்கா உதவி: 3ஆம் உலகப் போர் குறித்து ரஷ்யா மிரட்டல்

தங்களது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பிரிட்டன் போர்க்கப்பலுக்கு, அமெரிக்காவின் கண்காணிப்பு விமானம் உதவி செய்ததாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைனின் அங்கமாக இருந்த கிரிமீயாவை ரஷ்யா கடந்த 2014ஆம் ஆண்டு தங்களது எல்லையுடன் இணைத்துக்கொண்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அமெரிக்காவும், பிரிட்டனும் ரஷ்யா மீது, பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

கடந்த வாரம் கிரீமியா அருகே கருங்கடல் பகுதியில் பிரிட்டன் கடற்படைக்குச் சொந்தமான டிபண்டர் கப்பல் கடந்த 23ஆம் திகதி அத்துமீறி நுழைந்ததாக ரஷ்யா குற்றஞ்சாட்டியது. அதையடுத்து, பிரிட்டன் கப்பலை எச்சரிக்கும் வகையில் தங்களது போர்க்கப்பல்கள் சுட்டதாகவும், பிரிட்டன் கப்பல் சென்ற பாதையின் குறுக்கே போர் விமானம் மூலம் குண்டுவீச்சு நடத்தியதாகவும் ரஷ்யா கூறியது. ஆனால், இதை பிரிட்டன் மறுத்துள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வாரம் கிரீமியா கடல் எல்லைக்குள் பிரிட்டன் கப்பல் அத்துமீறி நுழைந்தபோது, அமெரிக்காவின் கண்காணிப்பு விமானம் அந்தக் கப்பலுடன் தொடர்பில் இருந்து உதவிகள் செய்துள்ளது. அந்தச் சம்பவத்தின்போது ரஷ்யாவின்



எதிர்வினைகள் குறித்து அறிந்துகொண்டு, அதனை பிரிட்டன் கப்பலிடம் தெரிவிக்கும் செயலில் அமெரிக்க விமானம் ஈடுபட்டது.

**3ஆம் உலகப் போர்!**

பிரிட்டன் கப்பலை நாங்கள் மூழ்கடித்திருந்தால்கூட மூன்றாம் உலகப் போர் மூண்டிருக்காது. அத்தகைய ஒரு போரில் இனி எங்களை வெல்ல முடியாது என்பது மேலை நாடுகளுக்கு நன்றாகவே தெரியும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது சர்வதேச அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

# சீனாவை அடிமைப்படுத்த முடியாது: முயற்சித்தால் இரத்தக்களரியை சந்திப்பார்

### ஜனாதிபதி ஜி ஜின்பிங் எச்சரிக்கை

"சீனாவை எவரும் அடிமைப்படுத்த முடியாது. அவ்வாறு செய்ய முயல்பவர்கள் இரத்தக்களரியை சந்திப்பார்கள்" - என அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள், தியானன்மென் கேட் சதுக்கத்தில் நடந்தது. இந்த விழாவை, சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும், அந்நாட்டு ஜனாதிபதியுமான ஜி ஜின்பிங் தொடங்கிவைத்தார்.

மாவோ ஷியோடோங் போல் உடை அணிந்திருந்த அவர் விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றியதாவது:

தன்னம்பிக்கை காரணமாக, சீன மக்கள் வலிமையான வர்களாக திகழ்கின்றனர். சீனாவை அடிமைப்படுத்தும் காலம் நிறைவு பெற்றுவிட்டது. எந்த நாட்டையும் நாம் அடிமைப் படுத்தியது கிடையாது; அடக்கியது இல்லை; அடக்குமுறைகளை ஏவியதும் இல்லை. கடந்த காலங்களிலும் இதனைத்தான் செய்தோம். தற்போதும் இதையே செய்கிறோம். எதிர்காலத்திலும் இதுவே தொடரும்.



அதேபோல், எந்த வெளிநாட்டு சக்திகளும் சீனாவை அடக்கவோ, அடக்குமுறைகளை ஏவவோ அடிமைப்படுத்தவோ அனுமதிக்க முடியாது. அவ்வாறு செய்ய முயல்பவர்கள், 140 கோடி மக்கள்கொண்ட இரும்புச்சுவர் முன்னர் இரத்தக்களரியை சந்திப்பார்கள். தலைக்குனிவு ஏற்படும். இராணுவத்தின் மீதான கட்சியின் கட்டுப்பாடுகள் தொடரும். ஹொங்கொங் மீதான உரிமையை சீனா நிலைநாட்டியுள்ளது. தாய்வானும், சீனாவின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ் .வீரசிங்கம் மண்டபத்தில் இரத்த தான முகாம்



இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு, யாழ். மாவட்ட மின்னியலாளர்கள் மற்றும் லயன்ஸ் கழகம், பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் சி.ஜெயசூரியன் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற இரத்தத் தட்டுப்பாட்டினை பூர்த்தி செய்யும் முகமாக எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று 10ஆவது முகாம் காலை 9.30 மணியிலிருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது. குறித்த இரத்த தான முகாமில் மின்னியலாளர்கள் உட்பட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# கோப்பாய் தாக்குதலில் 7 பேர் காயம்; மூன்று விசேட குழுக்கள் விசாரணை

யாழ்ப்பாணம் – கோப்பாய், செல்வபுரம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்விசாரணைக்கு மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தாக்குதலில் 7 பேர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

05 மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 14 பேரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் தங்கியிருந்த கட்டடம் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் யார் என இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# விவசாயிகளின் போராட்டங்களை தடுக்க அவர்களில் ஒருவர் கொல்லப்படக் கூடும்!

## எச்சரிக்கிறார் நளின் பண்டார எம்.பி.

விவசாயிகளின் போராட்டங்களைத் தடுக்க ஒரு விவசாயி கொல்லப்பட்டு தூக்கிலிடப்பட வாய்ப்புள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

உடனடி மரணத்தின் ஐந்து அறிகுறிகளைப் பற்றி புத்தர் தெரிவித்துள்ளார். அதன் முதல் காட்சி தீப்பிழம்புகள் வெளியாகுவதாகும். அதை இந்த நாட்டில் கப்பல்கள் எரியும்போது கண்டோம். இரண்டாவதாக, இருளின் காட்சி. அதை நாட்டை மூடியதிலிருந்து கண்டோம், நாடு முழுவதும் இருட்டாகிவிட்டது. மூன்றாவது இந்த நாட்களில் வனவிலங்குகள் மற்றும் காடுகளின் காட்சியாகும். அதை தற்போது விலங்குகள் இறந்து காடழிப்பு போன்றவற்றில் காண்கிறோம்.நான்காவது உறவினர்களின் இறப்பு. அதை கொவிட்டால் 3000 பேர் இறந்ததில் கண்டோம். ஐந்தாவது சகுனங்களின் பார்வை மூலம் அரசாங்கம் மரணத்தின் விளிம்பில் உள்ளது. இவ்வாறு சுருக்கமாக கூறலாம்.

பணத்தை அச்சிடுவதில் எங்கள் நாடு முதலிடத்தில் உள்ளது. ஒரு டிரில்லியன் ரூபா அச்சிடப்பட்டு 11280 மில்லியன் கோடிகளில் 1.28 மில்லியன் ரூபா மற்றும் 5000 ரூபா தாள்களில் 22.5 மில்லியன் என கடந்த வாரம் 208 மில்லியன்கள் அச்சிடப்பட்டதாகவும் கூறப்பட்டது, எரிவாயு விலை அதிகரிக்காவிட்டால் வங்கிக் கட்டமைப்பு சரிந்து விடும் என்றும் நாடு பொருளாதார மந்தநிலையில் மூழ்கிவிடும் என்று அமைச்சர் கம்மன்பில கூறினார்.

நல்லாட்சி அரசாங்கம் அரிசி சந்தையை வெற்றிகரமாக நிர்வகித்தது. கலாநிதி ஹர்ஷ டி சில்வா வெற்றிகரமாக இதை முன்னெடுத்தார். அவர்களின் மூலம் சக்தி அரிசி சந்தையில் காணப்பட்டது. அந்த சக்தியே அரிசியை உற்பத்தி செய்து அரிசி மாஃபியாவிற்கு எதிராக ஒரு வெற்றிகரமான திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன்மூலம் மக்களுக்கு ரூ.80 முதல் 82 விலைகளில் அரிசி பெற முடிந்தது. அதனால்தான் விலை அதிகரிக்கவில்லை.



நாட்டையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒரு மாற்றுத் திட்டம் உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது சஜித் பிரேமதாச என்ற ஒரு நபர் மட்டுமல்ல, அவரைச் சுற்றி ஒரு திறமையான குழு உள்ளது. பொருளாதாரம் குறித்த பார்வை கொண்ட திறமையான நபர்கள் எங்களிடம் உள்ளனர்.கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன மற்றும் கபீர் ஹஷீம் போன்றவர்களே அவர்கள்.

ராஜபக்ஷக்கள் வேறொரு ராஜபக்ஷவை நியமிக்க முயற்சிக்கின்றனர். பெசில் வருவதில் எங்களுக்கு ஆச்சரியமில்லை. 20 ஆவது திருத்த சமயத்தில் அவர் அமெரிக்க பிரஜை. அதை மாற்றாது தமது நாடாளுமன்ற வருகைக்காக அதில் திருத்தங்களைக் கொண்டு வந்தவர் அவர். 2015 இல் தோல்வியடைந்தமைக்கு பெசிலைக் காரணம்காட்டி குற்றஞ்சாட்டிய அனைவரும் இன்று மீண்டும் பெசிலைக் கொண்டு வரப் பார்க்கிறார்கள்.இன்று கோட்டாபய பற்றி எவரும் கதைப்பதில்லை. சேர் தோல்வி என்பது சகலருக்கும் தெரியும்.

இன்று, இந்த நாட்டில் உள்ள நான்கு அழகான இடங்கள் விற்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இவைபோன்ற 4 இடங்களை தனியார் துறையினர் கையகப்படுத்தும் முயற்சிகள் நடந்து வருவதாக அறியப்படுகிறது. இதை வெளிப்படுத்தியது மொட்டுக் கட்சியின் தொழிற்சங்கத்தினர்.அதுவும் ஒரு அமைச்சரின் புதல்வி தான் இதை முன்னெடுப்பதாக அறியமுடிகிறது. அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஒரு மோசமான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.அது ஷானி அபேயசேகரவை இலக்கு வைத்தா அவ்வாறு கூறப்பட்டது என்பது சந்தேகமே.எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு இடமளியுங்கள். சஜித் பிரேமதாச கொவிட் நடவடிக்கை மற்றும் அபாயங்கள் குறித்து என்ன சொன்னார் என்பதையும், அரசாங்கம் அதற்கு எவ்வாறு பதிலளித்தது என்பதையும், நினைவில் வையுங்கள். திறமையானவர்களை அரசாங்கம் நீக்கிவிட்டு சாதாரணமானவர்களை நியமித்துள்ளனர். அனில் ஜயசிங்கவை ஒதுக்கி வைத்தார்கள்.

இன்று நாட்டின் விவசாயிகள் உதவியற்றவர்களாக இருக்கிறார்கள். அப்போது அரிசி இறக்குமதி செய்யப்பட்டதை நினைவில் கொள்கிறோம். இப்போது நச்சுத்தன்மையற்ற உணவு என்று கூறி விவசாயியையும் நுகர்வோரையும் உதவியற்றவர்களாக மாற்றிவிட்டு இறக்குமதிக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். பசளைகளுக்காக திருத்த யோசனையை சமர்ப்பித்து மாற்றுவதன் மூலம் அரசாங்கம் அதை மீண்டும் செய்ய முயற்சிக்கிறது.

பொருளாதாரத்திலிருந்து விடுபட அரசாங்கம் அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது. பலர் தமது இருக்கைகளை சுத்தம் செய்ய வேண்டி வரும். நம்மைப் பற்றி சிந்திப்பதை நிறுத்திவிட்டு நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஜோன்ஸ்டனின் அறிக்கை தீவிரமானது,அவ்வாறு இல்லாது போனால் அல்லது விவசாயிகளின் போராட்டங்களைத் தடுக்க ஒரு விவசாயி கொல்லப்பட்டு தூக்கிலிடப்பட வாய்ப்புண்டு.

திஸ்ஸ குளத்தின் அகழ்வாராய்ச்சியை சீனாவுக்குக் கொடுப்பதன் மூலம் அரசாங்கத்தின் தோல்வியை மீண்டும் ஒப்புவித்துள்ளனர் - என்றார்.






பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் கொழும்பு, கொம்பனித்தெருவில் நேற்று (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)




கொழும்பு, கொம்பனித்தெரு வேகந்தவில் பாதுகாப்பற்ற கட்டடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளோர் தமக்கு வேறு இருப்பிடங்களை வழங்கக்கோரி நேற்று (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# பொலிஸ் நிலையங்களுக்கு 2000 முச்சக்கரவண்டிகள் வழங்கிவைப்பு




பிரஜா பொலிஸ் எண்ணக்கருவை பலப்படுத்தி குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் உளவுத்துறை மற்றும் சிவில் கடமைகள் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிசெய்யும் செயற்பாட்டிற்கு தேவையான 2 ஆயிரம் முச்சக்கரவண்டிகளை இலங்கை பொலிஸுக்கு குறியீட்டு ரீதியாக வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (01) அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அரசின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கமைய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வலுவான போக்குவரத்து அமைப்பு காணப்பட வேண்டியதன் அவசியத்தை கண்டறிந்து நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களுக்கு இந்த முச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டு வருகின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இதன்போது குறியீட்டு ரீதியாக மீகொட, கொத்தட்டுவ, யக்கல, பெம்முல்ல, பல்லேவெல, மிஹிஜய செவன, குருந்துவத்த, எகொடஉயன மற்றும் மத்தேகொட பொலிஸ் நிலையங்களுக்கான முச்சக்கரவண்டிகள் அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

முச்சக்கரவண்டிகளை குறித்த பொலிஸ் நிலையங்களின் குற்றத்தடுப்பு மற்றும் விசாரணை, பல்வேறு முறைப்பாடுகளை விசாரித்தல், 119 அவசர அழைப்புகளுக்காக ஈடுபடுத்தல், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு மற்றும் ஊழல் தடுப்பு பணிகளுக்காக பயன்படுத்தல், உளவுத்துறை பணிகள் மற்றும் சிவில் கடமைகளுக்காக பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்புறங்களை விரைவில் அணுகும் வசதிக்கமைய பொலிஸ் மற்றும் பொதுமக்களுக்கு இடையிலான உறவை பலப்படுத்தி பிரஜா பொலிஸ் எண்ணக்கருவை மேம்படுத்தும் நடவடிக்கையும் இவ்வேலைத்திட்டத்தினூடாக செயற்படுத்தப்படும். வரிக் கட்டணமின்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த முச்சக்கரவண்டிகளுக்காக அரசாங்கம் 829 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இடம்பெற்ற நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வுபெற்ற) கலாநிதி சரத் வீரசேகர, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜகத் அல்விஸ், பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# சிக்கன கடனுதவி சங்கத்தில் நிதி மோசடி; ஆசிரியர் சங்கம் ஆணையரிடம் புகார்

(இரத்தினபுரி)

வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் கூட்டுறவு மற்றும் சிக்கன, கடனுதவி சங்கம் (EDCS) உறுப்பினர்களின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். மேற்படி நிதிமோசடி தொடர்பாக சுந்தரலிங்கம் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட இந்நாட்டின் பெரும்பான்மையான ஆசிரியர்களின் அங்கத்துவதுடன் செயற்படும் மேற்படி சங்கம் எந்த வகையிலும் தமது சேவையினை சங்கத்திற்கு வழங்காத வெளி நபர்களுக்கு மாதாந்த சம்பளமாக பெருந்தொகைப் பணத்தை செலவளித்துள்ளமை தொடர்பில் எமது ஆசிரியர் சங்கத்திற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன் சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரை பல மில்லியன் ரூபா பணம் தமது அரசியல் நண்பர்கள் 300 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நாட்சம்பளம் என்ற அடிப்படையிலும் மற்றும் சங்கத்தின் வெவ்வேறுபட்ட பிரிவுகளுக்கும் அதன்



காரியங்களுக்கும் என மேற்படி சம்பளப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக அனைத்துக் காரியாலய நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தல் ஒழுங்கின் கீழ் மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் சேவைக்கு அழைக்கப்படாத சந்தர்ப்பத்திலும் அவர்கள் சேவைக்கு வருகை தந்ததாக குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு தொடர்ந்தும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க கடந்த ஏப்ரல் மாதம் 8 மில்லியன் ரூபாவும், மே மாதம் 7.8 மில்லியன் ரூபாவும், ஜூன் மாதம் 7.8 மில்லியன் ரூபாவும் முறைகேடான முறையில் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் நிர்வாகத்தினரால் உறுப்பினர்களின் பணம் தான்தோன்றித்தனமாக தனது அரசியல் நண்பர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு நாட்சம்பளமாக அநீதியான விதத்தில் வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கடிதம் ஊடாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கவனத்திற்கு தமது சங்கம் கொண்டுவந்துள்ளது.

சங்கத்தில் அங்கத்தவர்களின் பணம் முறைகேடான விதத்தில் பயன்படுத்துவது தொடர்பாக தாங்கள் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்றும், இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனவும் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றோம்.

2016 ஆண்டு கல்வி கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக பொறுப்பினை ஏற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கியதோடு, அங்கத்தவர்களின் பணமும் சங்கத்தினால் பாதுகாக்கப்பட்டது. பின் 2019 ஆண்டு நிர்வாக பொறுப்பினை ஏற்ற பொது ஜன பெரமுன ஆசிரியர் பிரதிநிதிகளின் கீழ் இவ்வாறான முறைகேடான சம்பவங்கள் நடைபெறுவதாக கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தாம் குறிப்பிட்டுள்ளதாக கல்வி கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் உப தலைவர் பிரதீப் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக பதவியேற்ற ஹட்சன் சமரசிங்கவை அவரது அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை சந்தித்தபோது புரவலர் ஹாசிம் உமர் அவருக்கு நினைவுச்சின்னம் வழங்கினார். தென்றல் அலைவரிசையின் உதவிப் பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.தாஜும் உடன் காணப்படுகிறார்.

# உயிரியல் பாதுகாப்பு வளையத்திற்கு உட்படுத்தப்பட்ட 13 இலங்கை வீரர்கள்



இந்திய அணியுடன் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இரு தொடர்களுக்காக, இலங்கைக் கிரிக்கெட் அணியின் 13 வீரர்கள் தற்போது கொழும்பில் உயிரியல் பாதுகாப்பு வளையத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குசல் பெரேரா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது தற்போது ஒயின் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணியுடன் இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இலங்கை கிரிக்கெட் அணியானது அடுத்ததாக ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணியுடன் சொந்த மண்ணில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்கேற்கும் இந்திய அணியின் வீரர்கள் தற்போது இலங்கை வந்து தனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த தொடருக்காக 13 இலங்கை அணி வீரர்கள் தற்போது கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் உயிரியல் பாதுகாப்பு வளையத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அஷான் பிரியஞ்சன், அசேல குணரத்ன, அஞ்சலோ பெரேரா, சந்துன் வீரகொடி, மலிந்த சிறிவர்த்தன, டில்ஷான் முனவீர, சத்துரங்க டி சில்வா, ரொஷேன் சில்வா, பிரபாத் ஜயசூரிய, லஹிரு மதுஷங்க, ஜெப்ரி வென்டஸ்சே, மலிந்த புஷ்பகுமார மற்றும் லகிரு கமகே ஆகியோரே இவ்வாறு உயிரியல் பாதுகாப்பு வளையத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோர் இந்திய அணியுடனான தொடரில் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், குறித்த இருவரும் இதுவரையில் இணையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இத்தாலிக்கு செல்ல வேண்டாம்!

## ரசிகர்களுக்கு எச்சரிக்கை



யூரோ கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பமாகும் நிலையில், குறித்த காலிறுதிப் போட்டியைக் காண இங்கிலாந்து ரசிகர்கள், இத்தாலிக்கு செல்லவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவின் பல நாடுகளில் நடைபெற்று வருகின்ற யூரோ கிண்ண கால்பந்து தொடரில், வெம்ப்ளி மைதானத்தில் நடைபெற்ற நொக் அவுட் சுற்று போட்டியில் ஜேர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அதன்படி நாளை சனிக்கிழமை இங்கிலாந்து மற்றும் உக்ரைன் அணிகளுக்கிடையில், இத்தாலியின் ரோம் நகரத்தில் உள்ள ஸ்டேடியோ ஒலிம்பிகோ அரங்கில் காலிறுதிப்போட்டி நடைபெறவுள்ளது. குறித்த காலிறுதிப் போட்டியைக் காண இங்கிலாந்து ரசிகர்கள் இத்தாலிக்குச் செல்ல ஆர்வமாக உள்ளனர்.

இந்நிலையில், அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பிரித்தானிய அரசானது, ரசிகர்களை இத்தாலிக்கு செல்லவேண்டாம் என எச்சரித்துள்ளது. மாறாக காலிறுதிப் போட்டியை வீட்டிலிருந்தே தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

பிரித்தானியாவின் பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய நாடுகளின் பட்டியலில், இத்தாலி மஞ்சள் நிற நாடுகளின் பட்டியலில் உள்ளது. அதாவது, அந்நாட்டிலிருந்து பிரித்தானியாவுக்கு வருபவர்கள், 5 நாட்கள் தனிமைப் படுத்திக்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதேபோல், பிரித்தானியாவிலிருந்து வரும் பயணிகளுக்கு இத்தாலி அரசு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மெண்டிஸ், டிக்வெல்ல, குணதிலக்க ஆகியோருக்கு ஒரு வருட தடை?



இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மீறி நள்ளிரவில் வீதியில் உலாவித்திரிந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், கிரிக்கெட் விளையாட்டிலிருந்து இடைக்கால தடைக்குள்ளாகியுள்ள குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோருக்கு ஒரு வருட சர்வதேச போட்டித்தடை விதிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நிறைவு பெற்று தற்போது அடுத்த தொடரான ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நடைபெற்று வருகிறது.

முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி ஆரம்பமாகுவதற்கு முதல் நாளன்று, இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகிய மூவரும் உயிரியல் பாதுகாப்பு வளையத்தை மீறி வீதியில் சுற்றித்திரிந்த வீடியோவானது சமூக வலைதளங்களில் வைரலாகியது. அதனைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் சபையின் அதிரடி உத்தரவுக்கமைய குறித்த மூவரும் நாட்டுக்கு அழைக்கப்பட்டனர்.

தற்போது நாடு திரும்பியுள்ள மூவரும் காலியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த மூவருக்கும் ஒரு வருட சர்வதேச போட்டித்தடை விதிக்கப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஒலிம்பிக் பதக்கங்களின் கதை

(ரமணி)



விளையாட்டு வீரர்களின் கனவுகளில் ஒலிம்பிக் பதக்கமும் ஒன்று. போட்டியில் வெற்றி பெற்றதும் நாட்டின் தேசியகீதம் இசைக்க, தேசியக்கொடி உயரே பறக்க, கழுத்தில் அணியப்படும் வெற்றிப் பதக்கத்தை முத்த மிடும்போது ஏற்படும் மகிழ்ச்சியும், பெருமையும் காலத்தால் அழியாதது. அந்தப் பதக்கத்தைப் பற்றிய சில சுவாரஸ்ய தகவல்கள் இதோ.

கிரேக்கர்களின் வெற்றிக் கடவுளாக பார்க்கப்படும் நைக் என்ற பெண் கடவுளின் உருவம், ஒலிம்பிக் போட்டிகளின் அதிகாரபூர்வ பெயர் (XXXII Olympaid Tokyo 2020), ஒலிம்பிக்கின் சின்னமான 5 வளையங்கள் ஆகியன ஒலிம்பிக் பதக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கும். பதக்கத்தின் விட்டம் 85 மி.மீ. அளவில் இருக்கும். தடிமன் குறைந்த பட்சம் 7.7 மி.மீ. ஆகவும், அதிகபட்சம் 12.1 மி.மீ. ஆகவும் இருக்கும்.

தங்கப் பதக்கம் 556 கிராம், வெள்ளி 550 கிராம், வெண்கலம் 450 கிராம் என்ற நிறையில் இருக்கும்.

தங்கப்பதக்கமானது 6 கிராம் அளவிற்கு தங்கமும், சுத்தமான வெள்ளியும் கொண்டு தயார் செய்யப்படுகிறது. வெள்ளிப்பதக்கமானது முற்றிலுமாக வெள்ளியை கொண்டே தயார் செய்யப்படுகிறது. வெண்கலப் பதக்கமானது 95 சதவீதம் கொப்பர் மற்றும் 5 சதவீதம் சிங் என்ற இரசாயனக்கூறுகளால் உருவாக்கப்படுகிறது.

டோக்கியோ 2020ஆம் ஆண்டுக்காக பதக்க ரிப்பன்கள் ஜப்பானின் பாரம்பரிய முறையில் உருவாக்கப் படுகின்றன. இந்த ரிப்பன்களில் டோக்கியோ ஒலிம்பிக் குறித்து மட்டும் குறிப்பிடப்படாமல், உலக நாடுகளின் ஒற்றுமையை குறிக்கும் வகையிலும் செய்யப்படுகிறது. இதில் சிலிக்கன் கான்வெக்ஸ் எனப்படும் கோடுகள் ரிப்பனின் மீது இருக்கும் என்பதால் ஒரு ரிப்பனை தொடுதல் மூலமே அது எந்த பதக்கம் என்பதை (தங்கம், வெள்ளி, வெண்கலம்) அறிந்து கொள்ளலாம்.

டோக்கியோ ஒலிம்பிக் 2020 போட்டிகளுக்கான பதக்கங்களை



வடிவமைப்பதற்கு 400க்கும் மேற்பட்ட வடிவமைப்பாளர்களும், வடிவமைக்கும் மாணவர்களும் போட்டியிட்டனர். இதில் ஜப்பானைச் சேர்ந்த ஜுனிச்சி கவானிஷி என்பவர் வடிவமைத்த சின்னமே போட்டியில் வெற்றி பெற்றதுடன், வீரர்களின் கழுத்தையும் அலங்கரிக்கப் போகிறது.




# புற்றுநோய் குழந்தைக்காக ஜெர்சியை ஏலம் விட்ட சௌத்தி






நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முக்கிய அனுபவ வேகப்பந்துவீச்சாளரான டிம் சௌத்தி, புற்றுநோயால் அவதிப்பட்டுவரும் 8 வயது குழந்தையின் மருத்துவ சிகிச்சைக்காக, தனது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் ஜெர்சியை ஏலத்தில் விட்டுள்ளார். டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் விளையாடிய அனைத்து வீரர்களும் கையெழுத்திட்டுள்ள இந்த ஜேர்சியின் ஏலமானது எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 1.45 வரை நடைமுறையில் இருக்கும். டிரேட்மி என்ற தளத்தில் குறித்த ஏலம் நடைபெற்று வருகிறது. இதுவரை இந்த ஜெர்சி 43,200 அமெரிக்க டொலர்களுக்கு விலை கேட்கப்பட்டுள்ளது.



தனது ஜேர்சியை ஏலத்தில் விட்டுள்ளமை தொடர்பில் டிம் சௌத்தி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். "எனது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் ஜெர்சியை ஏலத்தில் விட்டுள்ளேன். இதில் கிடைக்கும் அனைத்து நிதியையும் அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 8 வயது பெண் குழந்தை ஹொலி பெட்டியின் குடும்பத்திடம் அவரது சிகிச்சைக்காகக் கொடுக்க உள்ளேன். இது என்னால் முடிந்த ஒரு உதவி. இந்த ஜெர்சியால் திரட்டப்படும் தொகை குழந்தையின் சிகிச்சைக்கு தேவைப்படும் நிதியில் ஓரளவாவது உதவும் என்ற நம்பிக்கை உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

## நாளைய போட்டிகள்




Quarter final 1
அதிகாலை 2.30 மணி
பெரு vs பரகுவே



Quarter final 2
காலை 5.30 மணி
பிரேஸில் vs சிலி

# ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2021 – 2023

## ஆறு அணிகளுடன், 13 போட்டிகளில் விளையாடும் இலங்கை அணி

சர்வதேச கிரிக்கெட் பேரவை புதிதாக அறிமுகப்படுத்திய ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின், இரண்டாவது பருவ காலத்திற்கான தொடரில் இலங்கை அணி மொத்தமாக 13 போட்டிகளில் விளையாடவுள்ளது.

2019-2021ஆம் ஆண்டின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் மகுடத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணி கைப்பற்றியது. இந்நிலையில் இரண்டாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது, ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் ஆரம்பமாகிறது. இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வருகின்ற 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

இரண்டாவது தொடரிலும், முதல் தொடரில் விளையாடிய அதே ஒன்பது அணிகள் விளையாடவுள்ளன. ஒரு அணிக்கு மொத்தமாக 6 தொடர்கள் காணப்படுகின்றன. இதில் சொந்த நாட்டில் மூன்று தொடர்களும், வெளிநாட்டில் மூன்று தொடர்களும் நடைபெறவுள்ளன. ஆனால், ஒவ்வொரு அணிகளுக்கிடையிலான தொடரின் போட்டிகளில் வித்தியாசம் காணப்படுகின்றன.

இங்கிலாந்து அணிதான் அதிக போட்டிகளில் விளையாடுகிறது. மொத்தமாக 21 போட்டிகளில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது. இலங்கை அணி 6 அணிகளுடன் மொத்தமாக 13 போட்டிகளில் விளையாடவுள்ளது. இலங்கை அணியின் முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது எதிர்வரும் டிசம்பர் மாதம் பங்களாதேஷ் அணியுடன் நடைபெறவுள்ளது. பின்னர் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகளுடன் இலங்கை அணி பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

## இன்றைய போட்டிகள்



Quarter final 1
இரவு 09.30 மணி
ஸ்பெயின் vs சுவிட்சர்லாந்து

Quarter final 2
நள்ளிரவு 00.30 மணி
பெல்ஜியம் vs இத்தாலி




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7